


# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:261 | 06-04-2026 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

06.04.2026 பங்குனி 23
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.09

**திதி:**
இன்று பிற்பகல் 1.48 வரை சதுர்த்தி பின்பு பஞ்சமி.

**நட்சத்திரம்:**
இன்று முழுவதும் அனுஷம்

**யோகம் :**
இன்று பிற்பகல் 2.55 வரை சித்தி பின்பு வ்யாதீபாதம்.

**கரணம்**
இன்று அதிகாலை 12.50 வரை பவம் பின்பு பிற்பகல் 1.48 வரை பாலவம் பின்பு கௌலவம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.08 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்

**சந்திராஷ்டமம் :**
இன்று முழுவதும் அசுவினி

**நல்ல நேரம்**
காலை 6.30 – 7.30.
மாலை 4.30 – 5.30

**இராகு காலம்**
காலை 7.30 – 9.00.

**எமகண்டம்**
காலை 10.30 – 12.00.

**குளிகை**
பிற்பகல் 1.30 – 3.00.

இன்று சுபமுகூர்த்த நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# பழனிசாமி சொல்லியிருக்கிற பொய்களை வைத்து ஒரு புத்தகமே போடலாம்





**விருதுநகர், ஏப்.6:**

விருதுநகர் மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் சாத்தூர் வேட்பாளர் கடற்கரை ராஜ், ராஜபாளையம் வேட்பாளர் சௌ.தங்கபாண்டியன், சிவகாசி வேட்பாளர் கணேசன் அசோகன், ஸ்ரீவில்லிபுத்தூர் வேட்பாளர் மகாலிங்கம், திருச்சுழி வேட்பாளர் அமைச்சர் தங்கம் தென்னரசு, அருப்புக்கோட்டை வேட்பாளர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் விருதுநகர் வேட்பாளர் விஜயபிரபாகரன் ஆகியோரை ஆதரித்து முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாக்கு சேகரித்தார்.

அப்போது அவர் பேசியதாவது:-

ஈரோடு என்றால் தந்தை பெரியார், காஞ்சி என்றால் பேரறிஞர் அண்ணா, திருவாரூர் என்றால் தலைவர் கலைஞர் என்பதைப்போல், விருதுநகர் என்றால் பெருந்தலைவர் காமராஜர், அவருடைய மண் இது. சிவகாசி பட்டாசு என்றாலும் விருதுநகர்தான், சாத்தூர் என்றாலும் விருதுநகர்தான், ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா என்றாலும் விருதுநகர் தீப்பெட்டியாக இருந்தாலும் விருதுநகர்தான், பரோட்டாவாக இருந்தாலும் விருதுநகர்தான், காலண்டராக இருந்தாலும் விருதுநகர்தான்.

அருப்புக்கோட்டை தொகுதியின் வெல்லும் வேட்பாளர் அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், எம்.ஜி.ஆர் அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டவர். அன்று முதல் இன்று வரை சுறுசுறுப்பாக மக்கள் பணியாற்றுகிறவர். திராவிட மாடலில் 21 லட்சம் பேருக்கு பட்டா வழங்கியிருப்பதில் பெரும் பங்கு வகித்த அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, பெரும் வெற்றியைத் தேடித் தர வேண்டும்.

திருச்சுழி தொகுதியின் வெல்லும் வேட்பாளர் அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைவர் கலைஞரின் அன்புத்தூணாக இருந்தவர். ஐந்து முறை சட்டமன்ற உறுப்பினராக வென்றதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் உயர்த்திய நம் நிதித்துறையை தலைநிமிர வைத்தவர். இவரை எதிர்த்து நிற்கவே, எதிர்க்கட்சி வேட்பாளர்கள் விரும்பவில்லை என்ற செய்திகள் வெளியாகி வருகின்றன. அப்படிப்பட்ட தங்கம் தென்னரசுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களிப்போம்.

விருதுநகர் தொகுதியின் வெற்றி வேட்பாளர் விஜயபிரபாகரன், தே.மு.தி.க.வைச் சேர்ந்தவர். என் ஆருயிர் நண்பர் கேப்டன் விஜயகாந்த் மற்றும் சகோதரி பிரேமலதா விஜயகாந்தின் அன்பு மகனும், தே.மு.தி.க.வின் இளைஞர் அணிச் செயலாளருமான விஜயபிரபாகரனுக்கு 'முரசு' சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெற செய்ய வேண்டும்.

மக்கள் ஆணையிட்டால் என்ற படத்தில் விஜயகாந்த் தேர்தலில் நிற்பதுபோல் காட்சி அமைந்திருக்கும்; அந்த படத்தில் அவருக்காக வாக்கு கேட்டு நானும் சிறிய கதாபாத்திரத்தில் நடித்திருப்பேன். ஒரு திரைப்படத்தில் வேட்பாளராக நின்ற விஜயகாந்தை ஆதரித்து வாக்குச் சேகரித்த நான், தற்போது அவரின் மகன் விஜயபிரபாகரனுக்கு நேரடியாக வாக்குக் கேட்க வந்துள்ளேன்.

சாதனைகளை எதையும் சொல்ல முடியாமல் அவதூறுகளையும், தரம்தாழ்ந்த பேச்சுக்களையும் நம்பி பரப்புரை செய்துகொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. பழனிசாமி என்றாலே பொய், பித்தலாட்டம்தான். அரசு ஊழியர்களின் ஆதரவு எடப்பாடி பழனிசாமிக்கு கிடைக்காது.

சங்கிக் கூட்டணியில் சேர்ந்ததற்கு பிறகு, அவர்களைப் போலவே வாட்ஸ்-அப் வதந்திகளை வாந்தியெடுத்து வருகிறார் எடப்பாடி பழனிசாமி. பழனிசாமி சொல்லியிருக்கிற பொய்களை வைத்து ஒரு புத்தகமே போடலாம். அத்தனை பொய்களைச் சொல்லி வருகிறார். தலைவர் கலைஞரைப் பற்றி பச்சைப் பொய் சொன்ன அவர், தன் பொய்யிலிருந்து தப்பிக்க அடுத்தடுத்து பொய் சொல்லி வருகிறார்.

மக்களின் நீண்டநாள் கோரிக்கையான திருச்சுழியில் அரசுக் கல்லூரி கட்டும் பணி தொடங்கிவிட்டது. இனி எந்த திட்டம் வேண்டுமானாலும் மக்கள் கேட்கலாம், விருதுநகர் மக்களுக்காக அதனை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பியூஸ்போன சாமியாகி விட்டார். பாஜகவுடன் எடப்பாடி பழனிசாமி கூட்டணி வைத்து ஜெயலலிதாவுக்கு துரோகம் செய்துள்ளார். பாகுபலி படத்தில் சத்யராஜை பார்த்து, விசுவாசத்திற்கு ஒரு உருவம் இருந்தால் அது நீதான் கட்டப்பா என்று சொல்கிற மாதிரி ஒரு டயலாக் வரும்; அதைபோல துரோகத்திற்கு உருவம் கொடுத்தால் அது எடப்பாடி பழனிசாமிதான்.

எடப்பாடி பழனிசாமி செய்த துரோகத்தை நம்மால் எண்ண முடியாது. ஆனால், அவரின் தோல்வியை எண்ணிடலாம். ஏற்கனவே 10, அடுத்தது 11". 'சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டா சின்ன குழந்தையும் சொல்லும்' திமுகவின் சூப்பர் ஸ்டாரான தேர்தல் அறிக்கையை நாம் களத்தில் இறக்கியுள்ளோம்.

# புதுச்சேரி, கேரளாவில் பிரசாரம் அமித்ஷா, ராகுல் காந்தி இன்று சென்னை வருகை



**சென்னை, ஏப்.6:**

புதுச்சேரி மற்றும் கேரளாவில் வரும் 9-ந்தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு அங்கு அரசியல் தலைவர்கள் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகளின் தேசிய தலைவர்கள் புதுச்சேரிக்கும், கேரளாவுக்கும் வருகை தந்து தேர்தல் பிரசாரம் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா நாளை புதுச்சேரியில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார். இதற்காக அவர் விமானம் மூலம் இன்று மதியம் 3.15 மணிக்கு சென்னை விமான நிலையம் வருகிறார். அங்கிருந்து உடனடியாக ஹெலிகாப்டர் மூலம் புதுச்சேரி புறப்பட்டு செல்கிறார்.

பின்னர் புதுச்சேரியில் நடைபெறும் பிரசார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடுகிறார். அதனை தொடர்ந்து, மீண்டும் ஹெலிகாப்டர் மூலம் மாலை 6.10 மணிக்கு சென்னை வந்தடைகிறார். சென்னையில் பா.ஜ.க. நிர்வாகிகளை சந்தித்து பேசிய பிறகு, விமானம் மூலம் அமித்ஷா டெல்லி புறப்பட்டு செல்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல், காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, நாளை காலை 10 மணிக்கு விமானம் மூலம் சென்னை விமான நிலையத்திற்கு வருகை தர உள்ளார். அவரை காங்கிரஸ் கட்சியின் மூத்த நிர்வாகிகள் வரவேற்கின்றனர். தொடர்ந்து, மாநில காங்கிரஸ் நிர்வாகிகளுடன் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் ராகுல் காந்தி கலந்து கொள்கிறார்.

பின்னர் சிறிய ரக விமானத்தில் சென்னையில் இருந்து புதுச்சேரி புறப்பட்டு செல்லும் ராகுல் காந்தி, அங்கு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட உள்ளார். அதன் பின்னர், கேரள மாநிலம் பாலக்காடு செல்லும் அவர், அங்கு நடைபெறும் பிரசார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு, மீண்டும் விமானம் மூலம் டெல்லி திரும்ப உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை ஒரே நாளில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. மூத்த தலைவர்கள் சென்னைக்கு வருகை தர உள்ளதால், சென்னை விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

# 5 மாநிலங்களில் ரூ. 651கோடி! தமிழ்நாட்டில் ரூ.170 கோடி பணம், பொருள்கள் பறிமுதல்!



**சென்னை, ஏப்.6:**

தேர்தல் நடத்தை விதிகள் அமலானது முதல் ஏப்ரல் 5ஆம் தேதி வரை தமிழ்நாட்டில் ரூ.170 கோடி மதிப்பிலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேபோல் கேரளத்தில் ரூ.58 கோடி, மேற்கு வங்கத்தில் ரூ.319 கோடி, அஸ்ஸாமில் ரூ.97 கோடி, புதுச்சேரியில் ரூ.7 கோடி என 5 மாநிலங்களிலும் இதுவரை ரூ.651 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கும் வருகிற ஏப்ரல் 23-ஆம் தேதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெறும் என தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கடந்த மார்ச் 15 ஆம் தேதி அறிவித்தார்.

மே 4 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேர்தல் நடைபெறும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்தன.

இதன்படி, தனிநபர் ஒருவர் எவ்வித ஆவணங்களும் இன்றி ரூ. 50,000 வரை ரொக்கமாக எடுத்துச் செல்லலாம். அதற்கு மேலாக உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்படும் பணம் மற்றும் பிற பொருள்கள் தேர்தல் ஆணையத்தால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்காக தேர்தல் செலவினக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# வளர்ச்சியடைந்த பாரதத்தின் பாதை வளர்ச்சியடைந்த தமிழ்நாடு வழியாக செல்கிறது

## கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர்

**சென்னை, ஏப்.6:**

தமிழக கவர்னர் மாளிகையின் அதிகாரப்பூர்வ எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், அவர்கள் இன்று கோயம்புத்தூரில் உள்ள சுவாமி விவேகானந்தர் இரத்த வங்கி மையத்தினை பார்வையிட்டார். மேலும் இரத்த வங்கி மையத்தின் வசதிகளை பார்வையிட்டு, இரத்த சேகரிப்பு, பரிசோதனை மற்றும் விநியோக செயல்முறைகள் குறித்து கேட்டறிந்தார்.



தன்னார்வ இரத்ததானத்தை ஊக்குவிக்கும் இவர்களின் அர்ப்பணிப்பான சேவையை அவர் பாராட்டினார். மேலும், ஏழை மக்களுக்கு இலவசமாக பரிசோதிக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பான இரத்தத்தை வழங்கி, பல நோயாளிகளுக்கு பெரும் பலன் அளித்து வருவதாக கூறினார்.

சுவாமி விவேகானந்தர் இரத்த வங்கி மையத்தின் மனிதநேய சேவையை கவர்னர் பாராட்டினார், மேலும் உயிர் காக்கும் இத்தகைய முயற்சிகளில் பொதுமக்கள் அதிகளவில் பங்கேற்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

பின்னர் ஆர்ய வைத்ய பார்மசியில் நடைபெற்ற பல்வேறு துறைகளில் செயல்படும் சேவா தன்னார்வலர்களின் கூட்டத்தில் சிறப்புரை வழங்கினார்.

2047-இல் வளர்ச்சியடைந்த பாரதம் மற்றும் காசநோய் இல்லா பாரதம் நோக்கங்களை அடைய அனைவரும் ஒருங்கிணைந்த முயற்சி மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார். மேலும், கர்ப்பப்பை புற்றுநோய் தடுப்பூசி குறித்து விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டிய அவசியத்தையும் கூறினார்.

வளர்ச்சியடைந்த பாரதம் நோக்கை அடையும் பாதை, வளர்ச்சியடைந்த தமிழ்நாடு வழியாக செல்கிறது என கவர்னர் தெரிவித்தார். மேலும் நாட்டை கட்டியெழுப்பும் பணிகளில் தொடர்ந்த சேவையும், சமூக பங்கேற்பும் அவசியம் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறு தெரிவித்தார்.

# நிதிஷ் குமார் மாநிலங்களவை எம்.பி.யாக ஏப்ரல் 10-ல் பதவியேற்பு

**பாட்னா, ஏப்.6:**

பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஐக்கிய ஜனதா தள கட்சியின் தலைவரான நிதிஷ் குமார் முதல்-மந்திரியாக செயல்பட்டு வந்த நிலையில், சமீபத்தில், மாநிலங்களவை தேர்தலுக்கு போட்டியிட முடிவு செய்து, அதற்கான நடவடிக்கையில் இறங்கினார். இதனால், முதல்-மந்திரி பதவியை அவர் ராஜினாமா செய்கிறார். இதற்கு கட்சிக்குள் எதிர்ப்பு கிளம்பியது. அவர் பதவி விலக கூடாது என தொண்டர்கள் வலியுறுத்தினர். இந்த நிலையில், எம்.எல்.சி. பதவியில் இருந்து நிதிஷ் குமார் கடந்த சில நாட்களுக்கு முன்பு விலகினார்.

இந்நிலையில், வருகிற ஏப்ரல் 10-ந்தேதி முறைப்படி மாநிலங்களவை எம்.பி.யாக அவர் பதவியேற்க உள்ளார் என பீகார் பா.ஜ.க. தலைவர் சஞ்சய் சராவ்கி கூறினார். அடுத்து புதிய அமைச்சரவை உருவாவதற்கான நெறிமுறைகளை பற்றி குறிப்பிட்ட அவர், அதில் மூத்த கட்சி தலைவர்கள் மற்றும் கூட்டணி கட்சியினரும் ஒருங்கிணைந்து செயல்படுவர் என கூறினார். இதற்காக முதல்-மந்திரி, நம்முடைய பா.ஜ.க.வின் மத்திய தலைமை மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து, கூடி முடிவு செய்வர் என்று கூறினார்.







## திருக்குறள் குறள்-581

**ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்**



ஒற்றரும் புகழ் அமைந்த நீதிநூலும் ஆகிய இவ்விருவகைக் கருவிகளையும் அரசன் தன்னுடைய கண்களாகத் தெளியவேணடும்.

## சிந்திக்க ஒரு நொடி



கஷ்டப்பட்டு முன்னுக்கு வருவது தப்பில்லை ஆனால் மற்றவரை கஷ்டப்படுத்தி முன்னுக்கு வருவதுதான் தப்பு

**வெ நாராயணன்**
லால்குடி

## பணி ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருக்கு பாராட்டு விழா கிராம பொதுமக்கள் ஆசிரியர்கள் நினைவு பரிசு





புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு சந்திரசேகரன் அவர்கள் பணி ஓய்வு பெறுவதை முன்னிட்டு கிராம பொதுமக்கள் சார்பாகவும் ஆசிரியர்கள் சார்பாகவும் நினைவுப் பரிசு வழங்கி பணி நிறைவு பாராட்டு விழா நடத்தினர்

## காங்கிரஸ் தேர்தல் பணிமனை



ஆர்கேநகர் ஒன்னாவது சர்க்கிள் 39 வட்டம் காங்கிரஸ் தேர்தல் பணிமனை திறக்கப்பட்டது

## ST.MARK'S மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி பள்ளியின் 43 வது மழலையர் கிராஜுவேஷன்




சென்னை குரோம்பேட்டை ST.MARK'S மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி பள்ளியின் 43 வது மழலையர் கிராஜுவேஷன் டே ஆலந்தூர் B.S.அப்துல்ரகிமான் கிரசன்ட் இன்ஸ்டியூட் ஆப் சைன்ஸ் டெக்னாலஜிஇடத்தில் இன்று மதியம் நடைபெற்றது.இதில் பள்ளியின் குழந்தைகள் கலைநிகழ்ச்சி பேச்சு போட்டி நடைபெற்றது. பெற்றோர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.வெற்றி பெற்ற மழலையர்களுக்கு சான்றிதழ் கேடயம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகள் பள்ளி நிர்வாகம் மிகவும் சிறப்பாக செய்தார்கள். அனைவரின் பாராட்டுக்கள் பெற்றது.

# ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம் வசந்த உற்சவம் சிறப்பு வழிபாடு

**கோவை, ஏப்.06:** கோயம்புத்தூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ ராம நாமமே முன்னிட்டு வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, காய்கனிகளால் தோரணங்களாக அலங்கரித்து, மகா சுதர்சன மகா யாகம்,பூர்ணாஹூதி, ராமர் பட்டாபிஷேகம் மற்றும் வசந்த உற்சவமும் வெகு சிறப்பாக நடைபெற்றது. பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் ஸ்ரீ ராமர் சீதா தேவியையும் வேண்டி அருள் பெற்றனர். பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.



# மரங்களை குளிர்விக்கும் நிகழ்வு



**யானைமலை, ஏப்.06:** யானைமலை கிரீன் பவுண்டேஷன் 261 வது வார மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றி மரக்கன்றுகளை குளிர்விக்கும் நிகழ்வு ஒத்தக்கடை முதல் திருமோகூர் முடிய நடைபெற்றது. எல் கே பி நகர் அரசு பள்ளி தலைமை ஆசிரியர் தென்னவன் தலைமை வகித்தார்.

ஆலோசகர் பிரபு முன்னிலை வகித்தார். ஆலோசகர் பாலமுருகன் வரவேற்றார். மரக்கன்றுகள் பராமரித்தல் குறித்து பசுமை சாம்பியன் அசோக் குமார் சிறப்புரையாற்றினார். சாலையின் இரு பக்கங்களிலும் உள்ள மரங்களுக்கு தண்ணீர் ஊற்றப்பட்டது. பராமரிப்பு பணி மற்றும் கவாத்து பணி நடைபெற்றது.

நிகழ்வில் பாஸ்கரன், தியாகராசர் நன்முறை மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் கார்த்திக், மீனாட்சி தட்டச்சு பயிற்சி நிறுவன உரிமையாளர் ஜெயபாலன், ஸ்டெல்லா மேரி, விக்னேஸ்வரி, இலக்கியா, நலினா, நிலா ஸ்ரீ, ரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். நன்கொடையாளர் டஸ்கர் யம்மா உரிமையாளர் விக்னேஷ் பாராட்டப்பட்டார். உறுப்பினர் ஐஸ்வர்யா நன்றி கூறினார்.

# 100 சதவீதம் வாக்களிப்போம்: விழிப்புணர்வு யோகாசனம்



**வந்தவாசி , ஏப் 06:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீகிருஷ்ணா கல்வி மையத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி யோகாசன விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் குளோபல் அபாகஸ் அகாடமி மாணவர்கள் பங்கேற்று யோகாசன விழிப்புணர்வில் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு ஆசனங்களை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், நகராட்சி தூய்மை திட்ட ஒருங்கிணைப்பாளர் பழனி, நல்நூலகர் ஜா.தமீம், ரெட் கிராஸ் சங்க உறுப்பினர் ஜி.விநாயக மூர்த்தி, ஆசிரியர் மகாவீர் ஆகியோர் பங்கேற்று கருத்துக்களை வழங்கினர். நிகழ்வில் யோகா விழிப்புணர்வு செய்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியில் அகாடமி ஆசிரியை ம.உஷா நன்றி கூறினார்.

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வெற்றி வேட்பாளர் சையத் பாரூக் ஏணி சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார்





**திருப்பத்தூர், ஏப்.06:** திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வெற்றி வேட்பாளர் SSB. சையத் பாரூக் அவர்களுக்கு வாணியம்பாடி புதூர் பகுதியில் உள்ள புனித தேவாலயத்தில் வாணியம்பாடி நகர கழக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் V.S.சாரதி குமார் BE.,MC ஏணி சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார். நிகழ்வில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## ஈஸ்டர் திருநாளில் சி. எஸ். ஐ. தேவாலயத்தில் திமுக வேட்பாளர் துரைமுருகன் வாக்கு சேகரிப்பு!





**வேலூர், ஏப்.06:** துன்பங்கள் போக்கி துணைநிற்க உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை போற்றும் இனிய நாளில் காட்பாடியில் உள்ள சி. எஸ். ஐ. தேவாலயத்தில் மக்களுடன் இணைந்து கொண்டாடி மகிழ்ந்தார் திமுக காட்பாடி தொகுதி வேட்பாளர் துரைமுருகன். அப்போது தேவாலயத்தில் திரண்டிருந்த பொதுமக்களிடம் தனக்கு வழக்கம் போல் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அத்துடன் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துக்களையும் அங்கிருந்த பொதுமக்களுக்கு தெரிவித்து மகிழ்ந்தார் திமுக வேட்பாளர் துரைமுருகன். திமுக வேட்பாளர் துரைமுருகனுடன் வேலூர் மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார் ,காட்பாடி வடக்கு பகுதி செயலாளர் வன்னிய ராஜா மற்றும் திமுகவினர் உடன் இருந்தனர்.

## சங்ஹட ஹர சதுர்த்தி அபிஷேகம் ஆராதனை



தமிழ்நாடு இபேப்பர் பண்பலை மற்றும் தெய்வம் இதழ் தமிழாடிவி சார்பில் வாசகர்கள் நேயர்கள் சார்பாக சிக்கல் ஆவராணி ரோடு அருள்மிகு ப்ஸ்ரீ செண்பக விநாயகர் கோவிலில் மஹா சங்கல்பம் செய்து அபிஷேகம் ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது திரவியம் மஞ்சள் மாப்பொடி இளநீர் தயிர் பால் சந்தனம் அபிஷேகம் நடைபெற்றது ஆலய குருக்கள் அருண் மற்றும் பட்டதாரி ஆசிரியர் திரு மணிவண்ணன் ஆகியோர் சிறப்பாக செய்தனர் அனைவருக்கும் சுண்டல் சர்க்கரை பொங்கல் புளியோதரை வழங்கப்பட்டது!

## சங்ஹட ஹர சதுர்த்தி



ஆழியூர் பிரிவு சாலை ரோடு அருள்மிகு ஸ்ரீ வீர சக்தி விநாயகர் கோயிலில் தமிழ்நாடு இபேப்பர் பண்பலை மற்றும் தெய்வம் இதழ் தமிழாடிவி சார்பில் சங்ஹட ஹர சதுர்த்தி அபிஷேகம் ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

திரவியம் மஞ்சள் பொடி மாப்பொடி இளநீர் தயிர் பால் சந்தனம் அபிஷேகம் ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது நிகழ்வு ஏற்பாடு திரு ஆழியூர் நாகராஜன் பட்டதாரி ஆசிரியர் திரு ஆர் மணிவண்ணன் ஆகியோர் சிறப்பாக செய்தனர்!

## அனுமந்த வாகனம்



திருக்குறுங்குடி ஸ்ரீநம்பி பங்குனி திருக்கல்யாண வைபவம் அனுமந்த வாகனம் புறப்பாடு.

## ஹம்ஸ வாகனம்



திருநின்றவூர் ஸ்ரீ மத்ஸவித்ரி நாயிகா சமேத ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள் - விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம் - 2026 இரண்டாம் திருநாள் காலை ஹம்ஸ வாகனம் புறப்பாடு

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## தேர்தல் களப்பணியில்...

### ஜசியுவில் தேமுதிக! இபிஎஸ்ஸுக்கு பிரேமலதா கண்டனம்!



தேமுதிகவை ஐசியு கட்சி என்று எடப்பாடி பழனிசாமி கூறியதற்கு பிரேமலதா விஜயகாந்த் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் செய்தியாளர்களுடன் பிரேமலதா விஜயகாந்த் பேசுகையில் "முன்னாள் முதல்வராக இருந்து இன்று எதிர்க்கட்சித் தலைவராகவும் இருப்பவர், அவருடைய வார்த்தைகள் கண்ணியமாகவும் மற்றவர்கள் மதிக்கக்கூடிய அளவிலும் இருக்க வேண்டும். அதனைவிடுத்து, ஏதோ ஒரு மூன்றாம்தர, நான்காம்தர பேச்சாளர்களைப் போன்று ஒரு முதல்வர் வேட்பாளர் பேசுவது கண்டிக்கத்தக்கது. எங்களை கேப்டன் விஜயகாந்த், ராணுவக் கட்டுப்பாட்டுடன் வளர்த்துள்ளார். எங்கள் பிரசாரங்களில் தொகுதிகளுக்குத் தேவையானது மற்றும் முதல்வரின் அறிவிக்கைகளையும் மட்டும்தான் நாங்கள் சொல்கிறோம்.

அப்படியில்லாமல், ஒருவரை திட்டுவது அல்லது குறைசொல்வதன் பலனை, மே 4 ஆம் தேதியில் எடப்பாடி பழனிசாமி அடைவார். அரை சதவிகித வாக்கு என்று அவர் சொல்கிறார். அதனால் உங்களுக்கென்ன வயிறு எரிகிறது? அவர் வயிறு எரிவது, தமிழ்நாடு முழுவதும் தெரிகிறது.

ஒரு முதல்வர் வேட்பாளருக்கு இது அழகல்ல; நிச்சயமாக கண்டிக்கத்தக்கது. எம்.பி. சீட்டுக்கு கையெழுத்து போட்டுத் தரவில்லை என அவர் கூறினார். அரசியலில் மரியாதை காரணமாக, கண்ணியத்தை கடைப்பிடித்து, அதனை நான் காட்டவில்லை. ஆனால், இன்று அதனைக் காட்டவேண்டிய நிலைக்கு அவர்தான் என்னைக் கொண்டு வந்திருக்கிறார். என்று தெரிவித்தார்.

### புதுச்சேரியில் 3 தொகுதிகளில் விசிக வேட்பாளர்களுக்கு வாக்களிக்கக் கூடாது - திருமாவளவன்

விசிக தலைவர் தொல். திருமாவளவன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

புதுவையில் தி.மு.க - காங்கிரஸ் இடையே தொகுதிப் பங்கீடு இழுபறி நீடித்தபோது வி.சி.க தனித்துப் போட்டி என அறிவித்தோம். வேட்புமனு பரிசீலனைக்கு பிறகே கூட்டணியில் உடன்பாடு எட்டப்பட்டது. வி.சி.க போட்டியிடுவதாக வேட்புமனு தாக்கல் செய்த 4 தொகுதிகளில் உழவர்கரையை கூட்டணி சார்பில் எங்களுக்கு ஒதுக்கி அறிவித்தனர்.

டெல்லியில் இருந்து காங். தலைமை எங்களை தொடர்புகொண்டு உழவர்கரையில் மட்டும் போட்டியிடுமாறு அறிவுறுத்தினர். ஊசுடு, நெட்டப்பாக்கம், ஏனாம் தொகுதிகளில் வி.சி.க வேட்பாளர்கள் பெயர் இருந்தாலும் கூட்டணி கட்சியினருக்கு தான் வாக்கு சேகரிப்பார்கள்.

உழவர்கரையில் மட்டும் தான் வி.சி.க வேட்பாளருக்காக வாக்குகளை கோருவோம் எஞ்சிய தொகுதிகளில் போட்டியிடும் வி.சி.க வேட்பாளர்களுக்கு வாக்களிக்காமல் கூட்டணி வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்" என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

### சசிகலா-ராமதாஸ் கூட்டணியால் பாதிப்பா..? - டி.டி.வி.தினகரன் பதில்

அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியில், அ.ம.மு.க.வுக்கு நாங்குநேரி, ஒட்டப்பிடாரம், சைதாப்பேட்டை, மடத்துக்குளம், பூந்தமல்லி, திருச்சி மேற்கு, பெரியகுளம், மன்னார்குடி, திருவையாறு, காரைக்குடி, திருப்பத்தூர் ஆகிய 11 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மதுரையில் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

த.வெ.க. தலைவர் விஜய், மறைந்த விஜயகாந்த் போல அரசியலில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவார். தி.மு.க.வுக்கு தான் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவார். தவெக தலைமையில் ஒரு கூட்டணி அமைந்திருந்தால் பாதிப்பு இருந்திருக்கும். தற்போது த.வெ.க.வால் பாதிப்பு என்பது ஆளுங்கட்சிக்கே ஏற்படும். அதனால் தான் கூடுதல் தொகுதிகளில் திமுக நிற்கிறது. அ.தி.மு.க. தனிபெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். அண்ணாமலை என்னிடம் பேசியபோது நான் தேர்தலில் போட்டியிடவில்லை என கூறினார். தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்காக தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்வேன் என கூறினார். நான் போட்டியிடாதது குறித்தும் பல கருத்துக்களை கூறினார்கள். தேர்தலில் போட்டியிடாதது அண்ணாமலையின் தனிப்பட்ட முடிவு. இதில் அழுத்தம் ஏதும் இருக்கும் என நினைக்கவில்லை.

சசிகலா-ராமதாஸ் கூட்டணி எங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. அத்தி பூத்தது போல் அவர்களது ஆதரவு வேட்பாளர் ஏதாவது ஒரு தொகுதியில் ஓட்டு வாங்கலாம்.


இவ்வாறு அவர் கூறினார்.

## உங்கள் தொகுதி வேட்பாளர் விபரம் தெரிய வேண்டுமா.. இணையத்தில் பார்ப்பது எப்படி..?

அசாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காள சட்டமன்றத் தேர்தல்களுக்கான அட்டவணையை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. ஏப்ரல் 9-ம் தேதி நடைபெற உள்ள அசாம், கேரளா மற்றும் புதுச்சேரி சட்டமன்ற தேர்தல்கள் மற்றும் நான்கு மாநிலங்களில் நடைபெறும் இடைத்தேர்தல்களில் மொத்தம் 1,955 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில் வாக்காளர்கள் ECINET என்று இணைய தளத்தைப் பயன்படுத்தி, தங்களது சட்டமன்ற தொகுதி வேட்பாளர்களின் கல்வித் தகுதிகள் மற்றும் குற்றப் பின்னணி குறித்த விவரங்களைப் பெறலாம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-




உலகில் மிகப்பெரிய தேர்தல் சேவை தளமாக ECINET உள்ளது. இது தேர்தல் கமிஷனின் 40க்கும் அதிகமான மொபைல்போன் செயலிகள் மற்றும் இணையதளங்களை ஒருங்கிணைக்கிறது. வாக்காளர் பதிவு, வாக்காளர் பட்டியல் தேடல், விண்ணப்பங்களை கண்காணித்தல், தேர்தல் அதிகாரிகளை தொடர்பு கொள்ளுதல், ஓட்டுச்சாவடி அலுவலர்களுடனான சந்திப்பை முன்பதிவு செய்தல் உள்ளிட்ட சேவைகள் இதன் வாயிலாக வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு தொகுதி வேட்பாளர்களின் குற்றவியல் வழக்குகள், சொத்துக்கள் மற்றும் கடன்கள், கல்வித் தகுதிகள், வேட்பாளர்களின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்குகள் குறித்த தகவல்களை, ECINET சேவை தளத்தில் பார்க்கலாம்.

இதனுள் நுழைந்து உங்கள் வேட்பாளரை தெரிந்து கொள்ளுங்கள் பகுதியை பயன்படுத்தி, விபரங்களை அறியலாம். வேட்பாளர் சமர்ப்பித்த முழுமையான உறுதிமொழி பத்திரங்களையும், பதிவிறக்கம் செய்யலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## "பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை" திருமாவளவன் திடீர் அறிவிப்பு

வரும் 23-ம் தேதி தமிழகத்தின் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளது. இதில் திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள விசிக 8 தொகுதிகளில் போட்டியிடுவதாக உடன்பாடு எட்டப்பட்டது.

தேர்தலில் விசிக போட்டியிடும் தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் அறிவித்தார். அதில் கட்டுமன்னாகோவில் தொகுதியில் தானே போட்டியிடுவதாக அறிவித்தார்.

இந்த நிலையில், இன்று செய்தியாளர்களிடம் கூறிய: "சட்டமன்றத்துக்குள் போகலாம் என நான் ஆசைப்பட்டேன். 2026 தேர்தல் முடிவுகளுக்கு பிறகு தமிழ்நாட்டின் அரசியல் சூழல் மாறும் என நான் கருதுவதாக எங்கள் கட்சி உறுப்பினர்களிடம் தெரிவித்தேன். அப்போது நான் சட்டமன்றத்தில் இருந்தால் நல்லது என்று நான் நினைத்தேன். இதன் பின்னணியில் வேறு எதுவும் இல்லை.

பாஜகவும் அதிமுகவும் இங்குள்ள சமூக நீதி அரசியலை சீர்குலைக்க பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட சூழலில் சட்டமன்றத்திலும் இருக்க விரும்பினேன். என்னை யாரும் 'இதை செய், அதை செய்' என பணிக்க முடியாது. அது எந்த காலத்திலும் நடக்காது. நான் போட்டியிட விரும்பினேன். அவ்வளவுதான்.

கடந்த சில நாட்களாக ஏதோ ஒரு நோக்கத்துடன் சட்டமன்றத்துக்குள் திருமாவளவன் செல்ல பார்க்கிறார் என விவரணை செய்யப்பட்டது. நான் துணை முதல்வராக விரும்புகிறேன் என சொல்லப்பட்டது. இதெல்லாம் எங்கள் கூட்டணியின் நலனை பாதிக்க செய்யும் வகையில் கருத்து பரப்பப்பட்டது.

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி 200 இடங்களில் வெல்லும். இதை நான் உறுதியாக சொல்கிறேன். தொங்கு சட்டசபை வரும் என்ற கணக்கில் நான் போட்டியிடுவதாக சொல்லப்பட்டது. அந்த கருத்து தவறானது. அதனால் நான் முன்வைத்த காலை பின்வைக்கவில்லை. இதை ஒரு யுக்தியாக பார்க்கிறேன். அதை மாற்றி வைக்கிறேன். என் நிலைப்பாட்டை தள்ளிவைக்கிறேன். நான் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்ட காட்டுமன்னார்கோவில் தொகுதியில் விசிக வேட்பாளராக மறைந்த தலைவர் இளையபெருமாளின் மகன் ஜோதிமணி போட்டியிடுவார்" என்றார்.

## பாஜக நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியல் வெளியீடு

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி பாஜக நட்சத்திர பேச்சாளர்கள் 21பேர் கொண்ட பட்டியலை பாஜக தலைமை வெளியிட்டுள்ளது. இதில் பிரதமர் மோடி உள்பட 6 மாநில முதல்வர்கள் இடம் பெற்றுள்ளனர்.

அதிமுக தலைமையிலான தே.ஜ. கூட்டணியில் 27 தொகுதிகளில் களம் காணும் பாஜக, வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு தற்போது பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகிறது. இந்த நிலையில், கூட்டணியின் வெற்றிக்கு பிரச்சாரம் செய்வதற்காக பிரதமர் மோடி உள்ளிட்ட முக்கிய தலைவர்களை உள்ளடக்கிய நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலை பாஜக தலைமை வெளியிட்டுள்ளது.

அந்தப் பட்டியலில், பிரதமர் நரேந்திர மோடி, தேசியத் தலைவர் நிதின் நபின், மத்திய அமைச்சர்கள், அமித் ஷா, ராஜ்நாத் சிங், நிதின் கட்கரி, நிர்மலா சீதாராமன், பியூஷ் கோயல், கிஷன் ரெட்டி, எல்.முருகன், சுரேஷ்கோபி, அர்ஜுன் ராம் மேக்வால், முரளிதர் மோஹல் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்.

மேலும், மாநில முதல்வர்களான யோகி ஆதித்யாநாத் (உ.பி), மோகன் யாதவ் (ம.பி), தேவேந்திர பட்னாவிஸ் (மகாராஷ்டிரா), பஜன்லால் சர்மா (ராஜஸ்தான்), ஹிமந்த் பிஸ்வ சர்மா (அசாம்), ரேகா குப்தா (டெல்லி) ஆகியோரும் தமிழக தேர்தல் பிரச்சாரத்தில் களமிறக்கப்படுகின்றனர். தமிழக மக்களின் நாடித் துடிப்பு அறிந்த உள்ளூர் தலைவர்களும், திரை நட்சத்திரங்களும் இந்தப் பட்டியலில் முக்கிய இடம் பிடித்துள்ளனர்.

அதன்படி, மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், அண்ணாமலை, பொன். ராதாகிருஷ்ணன், தமிழிசை சவுந்தரராஜன், ஹெச்.ராஜா, வானதி சீனிவாசன், வி.பி.துரைசாமி, தேசியப் பொறுப்பாளர்களான அரவிந்த் மேனன், சுதாகர் ரெட்டி, சி.டி.ரவி, தேஜஸ்வி சூர்யா, மற்றும் நடிகர் சரத்குமார், செந்தில், நடிகை குஷ்பு, நமீதா, கஸ்தூரி, ஒய்.ஜி.மதுவந்தி, புரட்சி கவிதாசன், சையது இப்ராஹிம், கே.எஸ். ராதாகிருஷ்ணன், ரவிச்சந்திரன் ஆகியோரும் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

## புதுச்சேரி தேர்தல்: காங்கிரஸ் அளித்த அதிரடி வாக்குறுதிகள்

புதுவை சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சி 16 தொகுதிகளிலும், தி.மு.க. 13 தொகுதிகளிலும், விடுதலை சிறுத்தைகள் ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன. இந்தநிலையில் புதுவை மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள நவீன மீன்மார்க்கெட் அருகில் நடந்தது.



கூட்டத்துக்கு கட்சியின் மாநில தலைவர் வைத்திலிங்கம் எம்.பி. வரவேற்று பேசினார். இதில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கலந்து கொண்டார்.

தொடர்ந்து தேர்தல் அறிக்கை வெளியிட்டு அவர் பேசுகையில், "2026-ல் காங்கிரஸ் ஆட்சியில் கட்டாய கல்வி திட்டத்தை நிறைவேற்றுவோம். 1-ம் வகுப்பு முதல் ஆராய்ச்சி கல்வி வரை இலவச கல்வி வழங்குவோம். மாதந்தோறும் ரூ.2 ஆயிரத்து 500 மதிப்புள்ள மளிகை பொருட்கள் அனைத்து குடும்பத்துக்கும் ரேஷன்கடைகளில் இலவசமாக வழங்கப்படும். தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும். 2029-ம் ஆண்டு ராகுல்காந்தி பிரதமர் ஆனவுடன் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும்" என்று மல்லிகார்ஜுன கார்கே கூறினார்.

## புதுச்சேரி தேர்தல்பா.ஜ.க அளித்த வாக்குறுதிகள்

புதுச்சேரி பா.ஜனதா கட்சியின் தேர்தல் வாக்குறுதி வெளியிடும் நிகழ்ச்சி மறைமலையடிகள் சாலையில் உள்ள கிரீன் பேலஸ் ஓட்டலில் நேற்று இரவு நடந்தது. நிகழ்ச்சியில் மத்திய மந்திரி மன்சுக் மாண்டவியா, பா.ஜனதா மாநில தலைவர் வி.பி.ராமலிங்கம், அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி வைத்து பா.ஜனதா கட்சியின் தேர்தல் வாக்குறுதியை வெளியிட்டனர்



பா.ஜனதா கட்சி சார்பில் தேர்தல் வாக்குறுதியின் விவரம் வருமாறு:-

* புதுச்சேரியில் ரேஷன் கார்டுதாரர்களுக்கு ஆண்டுக்கு 2 கியாஸ் சிலிண்டர்கள் இலவசமாக பொங்கல்,விநாயகர் சதுர்த்தி பண்டிகை காலங்களில் வழங்கப்படும்.

* மகளிரின் மேம்பாட்டுக்காக 'பிங்க்' ஆட்டோ திட்டத்தை தொடங்கி பெண்களுக்கு இலவச ஓட்டுனர் பயிற்சி மற்றும் ஆட்டோக்கள் வாங்குவதற்கு ரூ.50 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படும். 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பாக செயல்படும் மாணவிகளுக்கு இ-ஸ்கூட்டர் வழங்க 'அன்பு தங்கை திட்டம்' தொடங்கப்படும்.

* 'குரூப் சி' மற்றும் 'டி' அரசு பணிகளில் 60 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்படும். அனைத்து யூனியன் பிரதேச பொது பல்கலைக்கழகங்களிலும் புதுச்சேரி மாணவர்களுக்கு 20 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்படும்..

*புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

* மீன்பிடி தடைக்காலத்தில் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி ரூ.8 ஆயிரத்தில் இருந்து ரூ.12 ஆயிரமாக உயர்த்துவோம்.

*புதுச்சேரி இளைஞர்களுக்கு தொழில் நிறுவனங்கள் மூலம் மாதம் ரூ.10 ஆயிரம் உதவித்தொகையுடன் இன்டர்ன்ஷிப் வாய்ப்புகளை உருவாக்குவோம்.

* புதுச்சேரி விவசாயிகளின் பொருளாதார எதிர்காலத்தை மேலும் பாதுகாப்பானதாக மாற்ற பி.எம்.கிசான் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஆண்டுதோறும் ரூ.9 ஆயிரம் கிடைப்பது உறுதி செய்யப்படும். சிறு, குறு பெண் விவசாயிகளுக்கு ஒரு சோழிய வடகரை ரக கறவை மாடு அல்லது 2 ஆடுகள் வழங்கப்படும். குறுவை, சம்பா மற்றும் தாளடி பயிர் சேதங்களுக்கு உட னடி முதற்கட்ட இழப்பீடு கிடைப்பதை உறுதி செய்ய ரூ.200 கோடி மதிப்பிலான தொகுப்பு நிவாரண நிதி உருவாக்கப்படும்.

* புதுச்சேரி முழுவதும் 30 மலிவு விலை அடல் உணவகங்கள் அமைக்கப்படும்.

* உள்ளூர் பிரச்சினை தீர்க்க ஒவ்வொரு ஊராட்சிக்கும் தலா ரூ.5 லட்சம் சிறப்பு நம்ம ஊரு பட்ஜெட் வழங்கப்படும்.

*இளம்தொழில்முனைவோருக்கு 3 சதவீதம் வட்டியில் ரூ.5 லட்சம் வரை கடன் வழங்கப்படும்.

*காரைக்கால் ரெயில் நிலையம் மற்றும் பஸ் நிலையத்தில் இருந்து திருநள்ளாறு கோவிலுக்கு இலவச பஸ் சேவைகள் (மின்சார பஸ்கள்) தொடங்குவோம்.

*புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ரெயில் நிலையங்களில் இரட்டை அகல ரெயில் பாதைகள் அமைத்து தரம் உயர்த்தப்படும். புதுவை ரெயில் நிலையத்துக்கு மகாகவி பாரதியார் பெயர் சூட்டப்படும். புதுச்சேரி-விழுப்புரம் பிரிவை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிப்போம். அதன்பின் சென்னை-புதுச்சேரி இடையே வந்தே மெட்ரோ ரெயில் இயக்குவோம்.

## நெல்லை, பொதிகை உள்பட 6 ரயில்களின் சேவை மாற்றம் ஏப்.22 வரை நீட்டிப்பு

**சென்னை, ஏப்.6:**

நெல்லை, பொதிகை உள்பட 6 விரைவு ரயில்களின் சேவையில் செய்யப்பட்டுள்ள மாற்றம் வரும் 22ம் தேதி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூரில் மறுசீரமைப்புப் பணிகள் காரணமாக, தென் மாவட்டங்களுக்கு இயக்கப்படும் சில ரயில்கள் நாளை (6-ம் தேதி) வரை எழும்பூருக்கு பதிலாக, தாம்பரத்தில் இருந்து இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்திருந்தது. தற்போது இந்த மாற்றம் வரும் 22-ம் தேதி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, திருநெல்வேலி - சென்னை எழும்பூர் நெல்லை விரைவு ரயில், தாம்பரம் வரை மட்டும் இயக்கப்படும். தாம்பரத்தை காலை 6.25 மணிக்கு வந்தடையும். இந்த மாற்றம் நாளை முதல் 21-ம் தேதி வரை அமலில் இருக்கும். இதுபோல, ராமேசுவரம்-சென்னை எழும்பூர் விரைவுரயில் (16752), தாம்பரம் வரை மட்டும் இயக்கப்படும். ஐதராபாத் - தாம்பரம் சார்மினார் விரைவு ரயில், சென்னை கடற்கரை வரை மட்டும் இயக்கப்படும். இந்த ரயிலின் மாற்றம் ஏப்.5ம் தேதி முதல் அடுத்த அறிவிப்பு வரை அமலில் இருக்கும்.

சென்னை எழும்பூர் - செங்கோட்டை பொதிகை விரைவுரயில், நாளை மறுநாள் (7-ம் தேதி) முதல் வரும் 22-ம் தேதி வரை தாம்பரத்தில் இருந்து தினசரி இரவு 8.05 மணிக்கு புறப்படும்.

சென்னை எழும்பூர் - ராமேசுவரம் விரைவு ரயில் (16751), நாளை மறுதினம் (7-ம் தேதி) முதல் அடுத்த அறிவிப்பு வரும் வரை தாம்பரத்தில் இருந்து இரவு 9.05 மணிக்கு இயக்கப்படும்.

தாம்பரம் - ஐதராபாத் விரைவு ரயில் (12759). சென்னை கடற்கரையில் இருந்து நாளை முதல் அடுத்த அறிவிப்பு வரும் வரை புறப்பட்டு செல்லும்.

## "அரசியலிலும் நடிக்கிறார் விஜய்" - செல்லூர் ராஜு விமர்சனம்

முக்கையா தேவரின் பிறந்தநாளையொட்டி, மதுரை அரசரடி பகுதியிலுள்ள அவரதுசிலைக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மதுரையிலுள்ள 10 சட்டப்பேரவைத் தொகுதிகளை அதிமுக மற்றும் எங்களது கூட்டணி கட்சிகள் கைப்பற்றும். தேர்தல் பிரச்சாரம் செய்ய செல்லும்போது, மக்களிடையே ஏகோபித்த வரவேற்பு இருக்கிறது. எம்ஜிஆரின் படத்துக்கு மாலை அணிவிப்பது மரியாதை செலுத்துவதுபோல் தவெக தலைவர் விஜய் தொடர்ச்சியாக நடித்து வருகிறார். ஏனென்றால் அவர் ஒரு நடிகர். தனது கேரக்டருக்கு தகுந்தது போன்று நடிப்பவர். அரசியலிலும் நடிக்கிறார். அப்படித்தான் எம்ஜிஆருக்கு அவர் மரியாதை கொடுப்பதுபோல நடிக்கிறார். எல்லாமே அவருக்கு நடிப்பு. திரைப்படத்தில்கூட பெண்களை ஏளனமாக எம்ஜிஆர் பேச மாட்டார். மது அருந்த மாட்டார். ஆனால், விஜய் அப்படி இல்லை. எல்லா கேரக்டர்களிலும் நடிக்கக் கூடியவர். அரசியலுக்கு வந்த பிறகும் இன்னும் தனது நடிப்புத் தொழிலை விட்டு அவர் வெளியே வரவில்லை.

## சுவாமிமலையில் பங்குனி திருவிழா.. யானை விரட்டல்



**சுவாமிமலை, ஏப்.6:**

தமிழ்க் கடவுள் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் நான்காம் படை வீடான சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோவிலில் ஆண்டு தோறும் பங்குனி பெருவிழாவில் வள்ளி கல்யாணம் நடைபெறும். அதற்குமுன், யானை உருவில் விநாயகர் வந்து வள்ளியை விரட்டுவது போன்ற புராண நிகழ்வு, முருகப்பெருமான் வள்ளியை மணக்க உதவும் ஒரு திருவிளையாடலாக கருதப்படுகிறது.

அதாவது, வேடர்குல அரசன் நம்பிராஜனின் வளர்ப்பு மகளான வள்ளி, தினைபுனம் காவல் புரியும்போது, அவள் அழகை கண்ட நாரத முனிவர் அதனை முருகப்பெருமானிடம் கூற, வள்ளியின் அழகில் மயங்கி அவரை மணம் புரிந்திட முதியவர் வேடம் தாங்கி வந்த முருகப்பெருமான், களைப்பாக இருப்பதாக கூறி, வள்ளியிடம் தேனும் தினைமாவும் உண்டபின், தாகம் என கூறி அருகில் இருந்த சுனைக்கு வள்ளியை அழைத்து செல்கிறார். அங்கு வள்ளியை மணம் புரிவதாக முருகப்பெருமான் கூற, முதியவரின் குறும்பில் வள்ளி கோபிக்கிறார். அப்போது முருகன், விநாயகரை நினைக்க, அவர் யானையாக வந்து வள்ளியை விரட்டுகிறார். மிரண்ட வள்ளி, பயத்தில் முருகனை அணைக்க, பின் முருகன் சுயரூபம் காட்டியவுடன், நம்பிராஜன், வள்ளியை முருகனுக்கு மணம் முடித்து வைக்கிறார்.

இந்த புராண நிகழ்வை சித்தரிக்கும் வகையில் சுவாமிமலை சுவாநாத சுவாமி கோவிலில் பங்குனித் திருவிழாவின் ஒரு பகுதியாக, வள்ளியை யானை விரட்டும் (யானை விரட்டல்) நிகழ்ச்சி அரசலாற்றங்கரையில் நடத்தப்படும். அவ்வகையில் இந்த ஆண்டின் யானை விரட்டல் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டு தரிசனம் செய்து மகிழ்ந்தனர்.

## திருப்பரங்குன்றம் கோவிலில் தேரோட்டம் கோலாகலம்: திரளான பக்தர்கள் வழிபாடு

**திருப்பரங்குன்றம், ஏப்.6:**

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் முதல்படை வீடான மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி திருவிழா 15 நாட்கள் விமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 23-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடந்து வருகிறது. நேற்று முன்தினம் முருகப்பெருமானுக்கு பட்டாபிஷேகம் நடந்தது.

திருவிழாவின் முத்தாய்ப்பாக நேற்று சுப்பிரமணிய சுவாமி, தெய்வானை அம்பாளுக்கு திருக்கல்யாணம் கோலாகலமாக நடந்தது. முன்னதாக நேற்று அதிகாலை 5 மணி அளவில் உற்சவர் சன்னதியில் சுப்பிரமணிய சுவாமிக்கும், தெய்வானை அம்பாளுக்கும் தங்கம், பவளம், வைடூரிய ஆபரணங்களும், வண்ண பட்டாடையாலும், பல வண்ண மலர்களாலும் மணக்கோல அலங்காரம் செய்யப்பட்டது.

பின்னர் மேளதாளங்கள் முழங்க உற்சவர் சன்னதியில் இருந்து முருகப்பெருமான், தெய்வானை அம்பாளுடன் புறப்பட்டு சன்னதி தெரு வழியாக பசுமலை மூலக்கரை அருகே உள்ள சந்திப்பு மண்டபத்திற்கு சென்றார். அதேவேளையில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இருந்து மேளதாளங்கள் முழங்க பிரியாவிடையுடன் சுந்தரேசுவரரும், மீனாட்சி அம்மனும் தனித்தனி பல்லக்குகளில் புறப்பட்டு திருப்பரங்குன்றம் நோக்கி வந்தனர்.

காலை 8 மணிக்கு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முருகப்பெருமான் தனது தாய், தந்தையான மீனாட்சி அம்மன்-சுந்தரேசுவரரை வணங்கி வரவேற்றார்.

இதனையடுத்து மகா தீபாராதனை நடைபெற்றது. அங்கிருந்து முருகப்பெருமான், தெய்வானை அம்பாள், மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர் திருப்பரங்குன்றம் நோக்கி வந்தனர். வழிநெடுகிலும் ஆங்காங்கே அமைக்கப்பட்டு இருந்த திருக்கண்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

கோவிலுக்குள் லட்சுமி தீர்த்தம் செல்லும் வழியில் உள்ள ஒடுக்கம் மண்டபத்தில் கண் ஊஞ்சல் நடந்தது. தொடர்ந்து வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்த ஆறுகால் மண்டபத்தில் பிரியாவிடையுடன் சுந்தரேசுவரரும், மீனாட்சி அம்மனும் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தனர். இதனை தொடர்ந்து தெய்வானையுடன் முருகப்பெருமான் மணமேடையில் எழுந்தருளி னார். அக்னி வளர்க்கப்பட்டு திருமண சடங்குகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன. வெண்பட்டு உடுத்தி முருகப் பெருமானும், மஞ்சள் பட்டு உடுத்தி தெய்வானை அம்பாளும் அருள்பாலித்தனர். சிவாச்சாரியார்கள் முருகப்பெருமான் மற்றும் தெய்வானை அம்பாளின் பிரதிநிதிகளாக இருந்து பட்டாடை மற்றும் பூமாலைகளை மாற்றிக் கொண்டனர் இதனையடுத்து பகல் 12.20 மணிக்கு மேள தாளங்கள் முழங்க, தெய்வானை அம்பாளுக்கு முருகப்பெருமான் மங்கல நாண் சூட்டி திருக்கல்யாண வைபோகம் கோலாகலமாக நடந்தது. அப்போது அங்கு கூடி இருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள், 'அரோகரா' கோஷம் முழங்க அட்சதை தூவி வழிபட்டனர். மேலும் பெண்கள் புதிய மங்கலநாண் மாற்றிக்கொண்டனர். பின்னர் சுந்தரேசுவரரும்-மீனாட்சி அம்மனும் விடை பெற்று மதுரைக்கு புறப்பட்டனர்.

## குற்றாலம் குற்றாலநாதர் கோவிலில் சித்திரை விசு திருவிழா கொடியேற்றம்

**தென்காசி, ஏப்.6:**



தென்காசி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலை அடிவார பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு குற்றாலநாதர் ஆலயம். ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த திருத்தலத்தில் ஆண்டுதோறும் சித்திரை விசுத் திருவிழா ஐப்பசி திருக்கல்யாணம் திருவிழா, மார்கழி திருவாதிரை ஆருத்ரா தரிசன திருவிழாக்கள் 10 நாட்கள் விமரிசையாக நடத்தப்படுவது வழக்கம்.

அந்த வகையில் இன்று சித்திரை விசுத் திருவிழா தொடங்கியது. விழாவை முன்னிட்டு குற்றாலநாதர் சன்னிதானம் எதிரே உள்ள கொடிமரத்தில் இன்று காலையில் வேத மந்திரங்கள் முழங்க, பஞ்ச வாத்தியங்கள் இசையுடன் கொடியேற்றப்பட்டது.

தொடர்ந்து கொடிமரத்திற்கு மா பொடி, மஞ்சள் பொடி, சந்தனம், குங்குமம், ஜவ்வாது, பால், தயிர், இளநீர் உளிட்ட 16 வகையான பொருட்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. கொடியேற்ற விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இவ்விழாவின் சிகர நிகழ்ச்சியாக 12 ம் தேதி திருக்கோவிலில் உள்ள மணிமண்டபத்தில் நடராஜ மூர்த்திக்கு பச்சை மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தாண்டவ தீபாராதனை நடைபெறும். 14ஆம் தேதி விசு தீர்த்தவாரி நடைபெறும்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### கோடையை சமாளிக்க குளு குளு டிப்ஸ்...

**நேற்றைய தொடர்ச்சி...**

வெயிலில் செல்லும் பெண்கள், குழந்தைகளுக்கு சிறுநீர் எரிச்சல் ஏற்படும். தாகம் எடுக்கும்போது நீர் குடிக்காமல் இருப்பதுதான் காரணம். தினமும் மூன்றிலிருந்து நான்கு லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும். ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை தண்ணீர் குடிப்பது அவசியம்.

குறைந்த அளவு இஞ்சி கலந்த கரும்பு சாறு அருந்துவதால் சிறுநீர் பிரச்னைகள் வராது. இளநீரும் அதிக அளவில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எலுமிச்சை தோல் பொடி, கிச்சிலிக்கப் பொடி பயத்த மாவு ஆகியவற்றைக் கலந்து தேய்த்து குளித்தால் வேனல் கட்டிகள் வராது. நெல்லிக்காயை தண்ணீர் சேர்த்து அரைத்து உடலில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவி வர வியர்க்குரு வராது. சோறு வடித்த கஞ்சி, நுங்கு நீர் போன்றவற்றை உடலில் தேய்த்து வந்தாலும் வேர்க்குரு மறையும்.

கூடுமானவரை காட்டன் துணிகள் உடுத்தவும்.

குழந்தைகள், பெரியர்வர்கள் இரவில் கொய்யாப்பழம் சாப்பிட்டால் மலச்சிக்கல் தீரும். பனங்கற்கண்டு சேர்த்த பால், திராட்சை, கிஸ்மிஸ் சாப்பிடலாம்.

கோடையில் வெளியில் செல்லும்போது குடை, செருப்பு, தொப்பி, கண்ணாடி அணிந்து கொண்டு சென்றால் உடல் சூட்டை தணிக்கலாம்.

விலாமிச்சை வேர் பாய், வெட்டி வேர் பாய் ஜன்னலில் கட்டி தண்ணீரை தெளித்து வைத்தால் அதன் வழியே வரும் ஈரக்காற்று வீட்டுக்குள் வரும் வெப்பத்தை தணிக்கும்.

தண்ணீர்: தாகம் இல்லாவிட்டாலும் அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும்.

உணவு: வெள்ளரி, தர்பூசணி, நுங்கு, எலுமிச்சை சாறு, மோர், இளநீர், மற்றும் தயிர் ஆகியவற்றை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ளுங்கள்.

குளியல்: தினமும் இரண்டு முறை குளிர்ந்த நீரில் குளிப்பது உடல் வெப்பநிலையை குறைக்கும்.

சருமப் பராமரிப்பு: வேர்க்குரு மற்றும் அரிப்பைத் தவிர்க்க, சந்தனம் அல்லது கற்றாழை (ALOE VERA) ஜெல்லைப் பயன்படுத்தலாம்.

ஆடை: வெயிலில் செல்லும்போது லேசான நிறமுள்ள, தளர்வான பருத்தி (COTTON) ஆடைகளை அணியுங்கள்.

பாதுகாப்பு: குடை, தொப்பி மற்றும் வெயிலின் தாக்கத்தைத் தடுக்க சன்கிளாஸ் (GOGGLES) பயன்படுத்தவும்.

மதிய நேரத்தில் (11 AM - 3 PM) தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

உடற்பயிற்சி: கடுமையான உடற்பயிற்சிகளைத் தவிர்த்து, அதிகாலை அல்லது மாலை நேரங்களில் உடற்பயிற்சி செய்யலாம்.

## 20 கோடி பேர் தனிமையில்... ஒரு பட்டனை அழுத்தத் தவறினால் போலீஸ் கதவைத் தட்டும்!

சீனாவில் உள்ள மக்கள் வேலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, தங்கள் குடும்பத்தைப்பிரிந்து வாழ்கிறார்கள். இது தவிர, இன்னும் கோடிக்கணக்கான மக்கள் பல காரணங்களால் தனிமையிலேயே வாழ்கிறார்களாம். சீனாவினுடைய அரசு ஊடகமான GLOBAL TIMES-இன் அறிக்கையில், ஆய்வு நிறுவனங்களின் கணிப்புப்படி 2030-ஆம் ஆண்டுக்குள் சீனாவில் தனியாக வாழ்பவர்களின் எண்ணிக்கை சுமார் 20 கோடியை எட்டலாம் என்று சொல்லப்படுகிறது.

தனக்கென்று யாரும் இல்லாமல் தனியாக இருப்பவர்களுக்கும், குடும்பத்தைப் பிரிந்து தூரமாக வந்து வேலை செய்பவர்களுக்கும் ஒரு பயம் இருக்கும்; அதாவது, "யாரும் அருகில் இல்லாதபோது இறந்துவிட்டால், அது வெளியே யாருக்குமே தெரியாமல் போய்விடும்" என்பதுதான் அது.

சீனாவில் இப்போது நிலவும் இந்தச் சூழல் ஏற்கனவே ஜப்பானில் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அங்கு இதனை 'KODOKUSHI' LONELY DEATH என்று அழைக்கிறார்கள்.

மக்கள் தங்களின் முதுமைக் காலத்தில் அல்லது தீவிர வேலைப்பளு காரணமாகத் தனிமையில் இறப்பதும், பல நாட்கள் கழித்து அவர்கள் உடல் கண்டெடுக்கப்படுவதும்




அங்கு பெரும் சமூகப் பிரச்னையாக உள்ளது. சீனா தற்போது அதே பாதையில் செல்வதை இந்த ஆப் (CHINA PHONE APP) பிரதிபலிக்கிறது.

இந்தச் சூழலில்தான் சீனா ஒரு வித்தியாசமான 'ஆப்'-ஐ (APP) வெளியிட்டுள்ளது. இந்த ஆப்தான் தற்போது சீனாவில் அதிகமாகப் பதிவிறக்கம் செய்யப்பட்ட செயலி என்று சொல்லப்படுகிறது. அப்படி என்னதான் இந்த ஆப் செய்யும்?

2025 மே மாதம் இந்த ஆப் வெளியிடப்பட்டுள்ளது. இதன் பெயர் "ARE YOU DEAD?". இந்த ஆப்பை பயன்படுத்துவது மிகவும் சுலபம்.

அதாவது, இரண்டு நாட்களுக்கு ஒருமுறை இந்த ஆப்பைத் திறந்து, அதில் இருக்கும் ஒரு பெரிய பட்டனைப் பயன்படுத்துபவர் அழுத்தவேண்டும். அப்படி அழுத்திவிட்டால் அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்று அர்த்தம். ஆனால், அழுத்தாமல்விட்டால் அவர்கள் ஏதோ பெரிய ஆபத்தில் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, அந்த ஆப் எமர்ஜென்சி (EMERGENCY) நம்பருக்குத் தகவல் கொடுத்துவிடும்.

இந்த ஆப் வெறும் பட்டனை அழுத்துவதுடன் மட்டும் நின்றுவிடாமல், போனில் இருக்கும் ACCELEROMETER அசைவைக்கண்டறியும்கருவி மற்றும் SCREEN TIME திரை பயன்பாடு ஆகியவற்றையும் கண்காணிக்கிறது. ஒருவேளை பயனர் பட்டனை அழுத்த மறந்துவிட்டாலும், போனில் அசைவுகள் இருந்தால் அவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பதை ஏஐ AI மூலம் கணிக்க முயற்சிப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்த ஆப் வெறும் மெசேஜ் மட்டும் அனுப்புவதில்லை. முதலில் குறிப்பிட்ட எமர்ஜென்சி நம்பருக்கு அழைப்பு விடுக்கிறது. அவர்கள் எடுக்கவில்லை என்றால், அருகில் உள்ள காவல் நிலையத்திற்கோ அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கோ தகவலை அனுப்புகிறது.

இந்த ஆப்பினுடைய பெயர் சர்ச்சைக்குரியதாக இருந்தது. நிறைய பேர் இதைக் கடுமையாக விமர்சனம் செய்தார்கள். இதனால் இந்த ஆப்பைத் தடை செய்துவிடுவார்களோ என்று பயந்து, மக்கள் இதை வேகமாகப் பதிவிறக்கம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

அந்த நிறுவனம் மக்களின் கோரிக்கையை ஏற்று, ஆப்பின் பெயரை மாற்றப் பரிசீலிப்பதாக முடிவெடுத்துள்ளது. வெறும் 1,000 யுவானில் தயாரிக்கப்பட்ட இந்த ஆப்பினுடைய 10 சதவீதப் பங்கு, தற்போது 10 லட்சம் யுவான் என்று சொல்கிறார்கள். ஒரு பிசினஸிற்கு 'ஸ்மார்ட்டான' ஐடியா எவ்வளவு முக்கியம் என்பதை இந்தச் சம்பவம் நமக்கு உணர்த்துகிறது. இது ஒரு பிசினஸ் வெற்றியாகப் பார்க்கப்பட்டாலும், மனித உறவுகளின் வீழ்ச்சியாகவும் சமூக ஆர்வலர்களால் பார்க்கப்படுகிறது.

# ஈஸ்டர் ஆச்சரியம்



நள்ளிரவு தொழுகைக்கு வந்திருந்த மரியத்திற்கு மனம் அலை பாய்ந்தது. பக்கத்தில் அமர்ந்திருந்த சற்குணம் அவள் கரத்தை அரவணைப்பாய் பற்றி " நம்பிக்கையுடன் இறைஞ்சலாம். தேவன் கைவிடார்" என்று தேறுதல் மொழிகளை அவன் அவளுக்கு மட்டுமாக சொல்லவில்லை; தனக்குமாகத்தான் சொன்னான். சாம்பல் புதனன்று ஆரம்பித்த தவக்கால நோன்பை வருடாவருடம் ஆர்வமுடன் கடைப் பிடிக்கிறாள். ஒரு குழந்தைக்காக ஏங்கும் அவளுக்கு குழந்தை பிறக்க வாய்ப்பு இல்லை என்று தெரிந்தும் மனம் மட்டுப்பட மறுத்தது.

காதல் திருமணம் செய்த அவர்களுக்கு பெற்றோர் உறவு விட்டும் தொட்டும். திருமணமாகி இரண்டு வருடங்களில் குழந்தை இல்லாததால் மருத்துவரிடம் போக ; ஆண்மை குறைபாடு என்று அறிந்த உண்மை, அவர்களது வாழ்வை புரட்டிப் போட்டது. ஒருவரை ஒருவர் விரும்பி திருமணம் செய்த அவர்களுக்கு அதிர்ச்சியைத் தாங்க இயல்பே இல்லை. சற்குணம், " மரியம் ! நான் இந்த திருமண பந்தத்திலிருந்து உனக்கு விடுதலை அளிக்க சித்தமாய் இருக்கிறேன்." என்று சொன்னதும் மரியம் துடித்துப் போனாள். " ஏன் குணா! என்னிடம் குறையிருந்தால் நீ என்னை கைவிடுவாயா? நான் மட்டும் எப்படி உன்னை துறப்பேன்? " என்று அரற்றினாள். இல்லம் அமைதியின் அவலத்தில் புதையுண்டது. மௌனம் இத்தனை கொடுமையாய் இருக்குமா?

எவருக்கும் சொல்லாமல் மனதிற்குள் மறுகினார்கள். உண்மை நிலை அறியா பெற்றோர்கள், அவர்களை மாறிமாறி சாடியதில் வெந்த புண்ணில் வேலாய் இருக்க; வேதனை மேலும் வளர்ந்தது. வேறு வழியின்றி,தவிப்பிலிருந்து தப்பிக்க; ஒரு மாறுதலை வேண்டி, வங்கியில் பணிபுரியும் இருவரும் புலம்பெயர்ந்து திருச்சூர் சென்றனர். அந்த ஊரின் சூழல் அவர்களுக்கு ஆறுதலாய் இருந்தது. கோட்டக்கல் ஆரிய வைத்திய சாலையில். ஆயுர்வேத மருத்துவ முறையில் இருவரும் பல தொடர் சிகிச்சைகளில் இருந்தனர். நம்பிக்கையற்ற ஒரு நம்பிக்கையில் முயற்சிகள் தொடர்ந்தன.ஒரு குழந்தையை தத்து எடுத்துக் கொள்ளும் யோசனை அவர்களுக்கு உவப்பாக இல்லை. தம் உதிரத்தில் பிறக்கும் குழந்தைக்காக இருவரும் ஏங்கினர்.

இன்று நள்ளிரவு பிரார்த்தனை முடிந்து இல்லம் திரும்பியவள் இனம் புரியா அமைதியில் இருந்தாள். ' ஆண்டவரே! இந்த அமைதி என்னிடம் எப்போதும் நிலவட்டும் என்ற பிரார்த்தனை மட்டுமே செய்தாள்.

மறுநாள் வைத்திய சாலைக்கு சொன்றவர்களுக்கு ஒரு நற் செய்தி. சற்குணத்தின் சிகிச்சை வெற்றிகரமாக செயல் பட்டு விட்டதாகவும் செயற்கை முறையில் கருத்தரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் மருத்துவர்கள் கூறினர். இன்னும் கடக்க வேண்டிய தூரம் அதிகம் என்றாலும், தன் குருதியில் ஒரு மழலை உண்டாகும் என்பதே பெரிய மகிழ்ச்சியை அளித்தது; அவர்களுக்கு. "எம் சித்தத்தினால் அல்ல உம் சித்தத்தினால் மட்டுமே இது சாத்தியப்பட்டது,' என்று இந்த ஆச்சரியமான பரிசை அளித்த தேவனைத் துதித்து, இந்த வருட ஈஸ்டர் பண்டிகையை கொண்டாட முனைந்தார்கள்; மரியமும், சற்குணமும்.



**- சசிகலா விஸ்வநாதன்**

# யார் தான் கேட்பது?




நகரப் பகுதிக்குள் இருப்பதால், அந்த ரேசன் கடைக்கு மட்டும் பொருட்கள் வாங்க எப்போதும் கூட்டமாகவே இருக்கும். சமீப காலமாக இந்த ரேசன் கடையில் வேலை செய்யும் பணியாளர் காலதாமதமாகவே வந்து கடையை திறப்பது வழக்கமாகிவிட்டது.

அன்றும் அப்படியே காலை மணி 10-30 ஆகியும் கடை திறக்கப்படாமலேயே பூட்டியே இருந்தது. ரேசன் பொருட்களை எடுத்துக் கொடுக்கும் பணியாளர் கூட நேரத்தோடு வந்து விட்டார். ரேசன் பொருட்கள் வாங்குவதற்கு பத்து பனிரெண்டு பேர் கடை வாசலில் காத்து நின்றனர். அப்போது அங்கிருந்த ஒருவர் இந்த ஆளுக்கு இதே வேலையாப் போச்சு! ரேசன் வாங்குற நம்மளையெல்லாம் பிச்சைக்காரனா நினைக்கிறாரு போல... அவர் இஷ்டத்துக்கு கடையை திறக்கறதும், முன்கூட்டியே மூடிட்டு போறதுமா இருக்காரு! யாரும் கேள்வி கேட்காததனால அலட்சியமா நடந்துகிறாரு...! இன்னைக்கு நானே இதுக்கொரு முடிவு கட்டுறேன் என்று குரலை உயர்த்திப் பேசினார்.

இன்னொருவர் எனக்கு பொங்கலுக்கு புடவை, வேட்டியே கொடுக்கல... எல்லா குடும்ப அட்டைக்கும் புடவை வேட்டி கொடுப்போம்னு அரசாங்கம் சொன்னுது... ஆனா இங்க மட்டும் எனக்கு புடவை வேட்டியே கொடுக்கல.... வரட்டும்.. இன்னைக்கு இதை கேட்டுட வேண்டியதுதான் என்று புலம்பினார்.

ஆமாம்... ஆமாம் எனக்கு புடவை, வேட்டி கொடுத்துட்டதா என் போனுக்கு மெசேஜ் வந்துது... எனக்கு புடவை வேட்டி கொடுக்காமலேயே எப்படி மெசேஜ் அனுப்பலாம்...! எதை எடுத்தாலும் ஊழலாவே இருக்கு!

அரசாங்கம் மக்களுக்கு நல்லது செய்யனும்னு நினைச்சாலும் அதிகாரிங்க செய்யவுட மாட்டாங்க போல தெரியுது! என்றார்.

இல்ல...இல்ல...இதைப் பத்தி கலெக்டர் கிட்ட நேரடியா புகார் செய்ய வேண்டியதுதான்... வாயை மூடிட்டு இருந்தா எதுவும் இங்க நடக்காது போல தெரியுது என்று ஆவேசமாகப் பேசினார்.

வாங்குற பொருள் எல்லாமும் எடை கம்மியாவே இருக்கு! இப்படியெல்லாம் எடையை குறைச்சு கொடுத்து சம்பாதிச்சிட்டு போறதுக்கு எப்படித்தான் மனசு வருதுன்னு தெரியல... என்று கட்டம் போட்ட சட்டைக்காரர் சொன்னதைக் கேட்டு வெள்ளைச் சட்டைக்காரர், ஆண்டவன்னு ஒருத்தன் இருக்கான்... இதுக்கெல்லாம் சரியான தண்டனையைக் கொடுப்பான் என்று சத்தமாகப் பேசினார்.

அரசியல்வாதிங்ககிட்ட இதைப் பத்தி சொன்னாலும், இலவசமாத் தானே கொடுக்கறாங்க... கிடைக்கிறதை வாங்கி கிட்டு போக வேண்டியதுதான்.. என்று சொல்றாங்க.. என்றபடி அந்த நபர் இருமினார்.

அரசாங்கத்துல வேலை செய்யறவங்க வச்சது தான் சட்டமா போயிடுச்சு! இதையெல்லாம் தட்டிக் கேட்கறதுக்கு இளைஞர்கள்தான் வரனும்... எங்க அது நடக்கும்! அவங்கதான் நடிகருங்கள தோள்ல தூக்கி வச்சுகிட்டு ஆடுறாங்கல... என்று சொல்லிக் கொண்டே அந்த நபர் தலையில் அடித்துக் கொண்டார்..

எது எப்படி இருந்தாலும் இன்னைக்கு இந்த ரேசன் கடை பிரச்சினையை நேரில கேட்டுட வேண்டியதுதான் என்றபடி வெற்றிலைப் பாக்கை மென்றவாறு நின்றார் அந்த முண்டாசு கட்டியிருந்தவர்.

சரியாக மணி 10-35 இருக்கும். இரு சக்கர வாகனத்தில் ஆடம்பரமாக வந்து இறங்கினார் அந்த ரேசன் கடையில் பில் போடும் வேலைப் பார்க்கும் பணியாளர் பரமசிவம். தான் ஓட்டிவந்த வாகனத்தை கடையின் பக்கத்தில் நிறுத்தி வைத்துவிட்டு, தனது கைப்பையில் இருந்து கடை சாவியை எடுத்து அங்கு நின்றிருந்த உதவியாளரிடம் கொடுத்தார். உதவியாளர் வேகமாக ஓடிச் சென்று கடையை திறந்து வைத்தார். பில் போடுபவர் தனது இருக்கையில் அமர்ந்து தனது பணியை துவக்கினார். கடைதிறப்பதற்கு முன்பாக ரேசன் கடையில் நடக்கும் குறைகளைப் பேசியவர்கள், அனைவரும் தனக்கான ரேசன் பொருட்களை வாங்குவதற்கு தயாராக அமைதியாக வரிசையில் நின்றனர்......!



தமிழ்ச் செம்மல்
**-நன்னிலம் இளங்கோவன்.**

# திருவிளையாடல் புராணம் 29



**சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி.

## மாயப்பசுவை வதைத்த படலம்

சமணர்களின் வேள்வியில் உருவான மாயப்பசுவை இறைவனான சொக்கநாதர் நந்தியெம் பெருமான் மூலம் அழித்ததைப் பற்றிக் கூறுகிறது.

மதுரையில் பசுமலை, இடபமலை உருவான வரலாறு இப்படலத்தில் கூறப்படுகிறது.

அனந்தகுணப் பாண்டியன் இறைவனான சொக்கநாதரின் அருளினால் சமணர்கள் உண்டாக்கிய நாகத்தினை அழித்து மதுரையைக் காத்ததை நாகம் எய்த படலத்தினால் அறியலாம்.

இதனை கண்ட சமணர்கள் எப்படியாவது சூழ்ச்சி செய்து மதுரையையும், சிவனடியாராகத் திகழ்ந்த அனந்தகுண பாண்டியனையும் அழிக்க எண்ணினர்.

'பசுவானது சைவர்களுக்கு புனிதமானது. எனவே மாயப்பசுவை உருவாக்கி மதுரையை அழிக்க ஆணையிட்டால் அனந்தகுண பாண்டியன் புனிதத்தன்மையான பசுவினை எதிர்த்து போரிடமாட்டான். ஆதலால் அவனை எளிதில் வெற்றி கொள்ளலாம்' என்று எண்ணினர்.

எனவே அவர்கள் ஒன்றுகூடி மீண்டும் வேள்வி செய்யத் தொடங்கினர். வேள்வியின் இறுதியில் மாயப்பசு ஒன்று உருவானது.

அவர்கள் மதுரையையும், அனந்தகுண பாண்டியனையும் அழிக்க மாயப்பசுவிற்கு ஆணையிட்டனர்.

மாயப்பசுவும் அவர்களின் ஆணையை ஏற்று மதுரையை நோக்கி விரைந்தது. வானளவிற்கு வளர்ந்திருந்த அப்பசு கண்ணில் பட்டவற்றை எல்லாம் அழிக்கத் தொடங்கியது.



மாயபசுவின் செயல்களை மக்கள் அனந்தகுண பாண்டியனுக்குத் தெரிவித்தனர்.

இதனைக் கேட்டதும் அனந்தகுண பாண்டியன் திருகோவிலுக்குச் சென்று இறைவனான சொக்கநாதரிடம் முறையிட்டான். தன்னையும், தம்மக்களையும் காத்தருளும்படி வேண்டினான்.

அனந்தகுண பாண்டியனையும், மதுரை மக்களையும் காப்பாற்ற சோமசுந்தரர் திருவுள்ளம் கொண்டார்.

அவர் நந்தியெம் பெருமானை அழைத்து "நீ சென்று சமணர்கள் ஏவிய மாயப்பசுவினை வென்று வருவாயாக" என்று கட்டளையிட்டார்.

நந்தியெம் பெருமானும் இறைவனின் ஆணைக் கேட்டதும் கண்களில் அனல் தெறிக்க மிகப்பெரிய காளை வடிவாகி மாயப்பசு இருக்கும் இடத்தை நோக்கி விரைந்தார்.

காளை வடிவில் இருந்த நந்தியெம் பெருமானுக்கும், மாயப்பசுவிற்கும் நெடுநேரம் சண்டை நடந்தது. இறுதியில் நந்தியெம் பெருமான் அழகிய காளையாக வடிவெடுத்தார்.அழகிய காளையைக் கண்ட மாயப்பசு அதனுடைய அழகில் மயங்கியது. மாயப்பசு மோகத்தினால் சண்டையை மறந்தது.

சண்டையில் களைப்படைந்திருந்த மாயப்பசு மோகம் அதிகரித்தால் தன்னிலை மறந்து மயங்கி விழுந்து மடிந்தது.

மாயப்பசு வீழ்ந்த இடம் மலையாக மாறியது. அம்மலையானது இன்றும் மதுரையில் பசுமலை என்று அழைக்கப்படுகிறது.

மாயப்பசு மடிந்ததைக் கண்ட அனந்தகுண பாண்டியனும், மதுரை மக்களும் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

மாயப்பசுவினை வென்றதும் நந்தியெம் பெருமான் தன்னுடைய பூத உடலினை இடபமலையாக நிறுத்திவிட்டு சூட்சும உடலோடு திருக்கயிலாயத்தை அடைந்தது.

இடப மலை என்பது இன்றைக்கு மதுரையில் அழகர்கோவில் மற்றும் பழமுதிர்ச்சோலை அமைந்திருக்கும் இடம் ஆகும்.

சைவர்களின் புனிதமான பசுவினை அழிக்கமாட்டார்கள் என்று எண்ணி சமணர்கள் ஏவிய மாயப்பசுவினை காளையின் வடிவான நந்தியெம் பெருமான் மூலம் அழித்து இறைவன் மக்களைக் காத்தார். ஆதலால் தீவினைகளை இறைவன் எவ்வாறேனும் அழிப்பார் என்பதே மாயப்பசுவை வதைத்த படலம் கூறும் கருத்தாகும்.

(தொடரும்)

# அரசியல் தலைவர்களின் நம்பிக்கைக்குரிய வெற்றித் தலம்!

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில், முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாகும். இது சூரபத்மனை வதம் செய்து வெற்றி பெற்ற தலம் என்பதால், இங்கு வீற்றிருக்கும் 'ஜெயந்தி நாதர்' வெற்றியைத் தருபவர் என்று போற்றப்படகிறார். அரசியல் தலைவர்கள் மற்றும் பக்தர்கள் தங்களின் தீவினைகள் நீங்கவும், தேர்தலில் வெற்றி பெறவும், குறைகள் தீரவும் திருச்செந்தூர் வந்து முருகனை வழிபடுவதை பெரும் நம்பிக்கையாகக் கொண்டுள்ளனர். சூரனை வென்றதால் இந்தத் தலம் 'திருஜெயந்திபுரம்' என அழைக்கப்பட்டு, பின்னர் 'திருச்செந்தூர்' என மருவியது. தேர்தலில் போட்டியிடுபவர்கள் தங்கள் வெற்றியை உறுதி செய்ய இங்கு வந்து நேர்த்திக்கடன் செலுத்துவது வழக்கமாக உள்ளது. ஆலய அமைப்பு மற்றும் வரலாற்றுச் சிறப்பு திருச்செந்தூர் கோவிலில் (THIRUCHENDUR MURUGAN TEMPLE) பாலசுப்ரமணிய சுவாமி கிழக்கு நோக்கியும், சண்முகர் தெற்கு நோக்கியும் அருள்பாலிக்கின்றனர். வீரபாகு தேவர் இங்கு காவல் தெய்வமாக உள்ளார்.
கி.பி. 17-ஆம் நூற்றாண்டில், டச்சு நாட்டு கடல் கொள்ளையர்கள் திருச்செந்தூர் கோவிலில் கொள்ளையடித்தனர். அங்கிருந்த கற்சிலைகளை உடைத்ததோடு, தெற்கு நோக்கி வீற்றிருந்த ஐம்பொன் திருவுருவமாகிய ஆறுமுக நயினாரை கப்பலில் தூக்கிச் சென்றனர். கப்பல் புறப்பட்ட சிறிது நேரத்தில், பெரும் புயலும் இடியுடன் கூடிய மழையும் பெய்தது. கடல் கொந்தளிப்பால் கப்பல் தத்தளித்ததைக் கண்டு பயந்த கொள்ளையர்கள், சண்முகப் பெருமானின் சிலையைக் கடலில் தூக்கிப் போட்டனர். அடுத்த கணமே புயல் ஓய்ந்தது.
இதனைத் தொடர்ந்து, முருக பக்தரான வடமலையப்ப பிள்ளையின் கனவில் தோன்றிய முருகப்பெருமான்,




தான் கடலில் இருக்கும் இடத்தைக் கூறி தன்னை மீட்குமாறு பணித்தார். அதன்படி, வடமலையப்ப பிள்ளை கடலில் இருந்து சண்முகர் விக்ரகத்தைக் கண்டெடுத்து, மீண்டும் கோவிலில் பிரதிஷ்டை செய்தார்.
லூாசிங்டன் துரையும் முருகனின் வியர்வையும் சுமார் 190 ஆண்டுகளுக்கு முன்பு, திருநெல்வேலி சீமையில் ஆங்கிலேய ஆட்சியராக எஸ்.ஆர். லூாசிங்டன் இருந்தார். 1803-ஆம் ஆண்டு திருவிழாவின் போது அவர் திருச்செந்தூர் வந்திருந்தார். முருகனுக்கு தீப தூப உபசாரங்கள் செய்து, கவரிமான் விசிறி கொண்டு வீசுவதைக் கண்ட அவர், "வீதி உலா வந்து களைத்துப் போன முருகனுக்கு என்ன வியர்க்கவா செய்கிறது?" என ஏளனமாக வினவினார். பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, அர்ச்சகர் உற்சவ மூர்த்தியின் ஆபரணங்களைக் களைந்துவிட்டுப் புதிய பருத்தி ஆடையைச் சாத்தினார். ஆச்சரியப்படும் விதமாக, அந்த ஆடை முழுவதும் வியர்வையால் நனைந்தது! இதைக் கண்டு மெய்சிலிர்த்த லூாசிங்டன், தனது பிழையை உணர்ந்து முருகனை வழிபட்டார். அதன் பின் விலைமதிப்பற்ற வெள்ளிப் பாத்திரங்களையும் ஆபரணங்களையும் காணிக்கையாகச் செலுத்தினார்.
மகிமை நிறைந்த இலை விபூதி பிரசாதம் திருச்செந்தூர் கோவிலில் பன்னீர் இலைகளில் வைத்து வழங்கப்படும் 'இலை விபூதி' மிகவும் சிறப்பு வாய்ந்தது. கோவில் திருப்பணியின் போது பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப் பணமில்லாத சூழலில், முருகப்பெருமான் சாதுக்களின் கனவில் தோன்றி, பன்னீர் இலையில் விபூதியை வைத்து வழங்குமாறு கூறினார். பணியாளர்கள் அந்த விபூதிப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தபோது, அதில் அவரவர் உழைப்பிற்கேற்ற ஊதியம் (பொற்காசுகள்) இருந்ததாக வரலாறு கூறுகிறது.
இந்த இலை விபூதியை உட்கொண்டால் காசநோய், கை கால் வலிப்பு, கபம் மற்றும் குஷ்டம் போன்ற நோய்கள் குணமாவதாக நம்பப்படுகிறது.

தனித்துவமான வழிபாட்டு முறைகள் கண் மலர்கள்: ஆறுமுகப் பெருமானின் வலக்கண் சூரியன்; இடக்கண் சந்திரன். அதனால் அவர் வலப்புறம் உள்ள வள்ளியம்மை கையில் சூரியனைக் கண்டு மலரும் 'தாமரை' மலரும், இடப்புறம் உள்ள தெய்வானை கையில் சந்திரனைக் கண்டு மகிழும் 'குமுதம்' மலரும் காணப்படுகின்றன.
பகிர்வு ஸ்ரீராமஜயம்

**ஆடை அலங்காரம்:** மூலவர் சுப்பிரமணியருக்குத் தூய வெள்ளை நிற ஆடையும், சண்முகருக்குப் பச்சை நிற ஆடைகளும் அணிவிக்கப்படுகின்றன.

**பஞ்சலிங்கங்கள்:** மூலவருக்குப் பின்புறம் உள்ள சுரங்க அறையில் முருகன் பூஜித்த 'பஞ்சலிங்கங்களைக்' காணலாம்.

**நிவேதனம்:** மூலவர் துறவுக் கோலத்தில் இருப்பதால் அவருக்கு உப்பு, புளி, காரம் இல்லாத உணவுகளே (சர்க்கரை பொங்கல், சுத்த அன்னம்) படைக்கப்படுகின்றன. இல்லறக் கோலத்தில் இருக்கும் சண்முகருக்கு பால் பாயாசம், புளியோதரை உட்பட ஆறு வகை நிவேதனங்கள் படைக்கப்படுகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள இத்திருத்தலம், இன்றும் தேர்தலில் போட்டியிடுபவர்கள் நம்பிக்கைக்குரிய வெற்றித் தலமாகத் திகழ்கிறது.

## தினம் ஒரு தலைவர்கள்

# சுபாஷ் சந்திர போஸ் வரலாறு

இந்திய விடுதலைப் போரின் முக்கியமான ஆளுமையும், ஆங்கிலேய அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப் போர் புரிந்த ராணுவப் படையை வழிநடத்தியவருமான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், 1897 ஜனவரி 23-ல் ஒடிசா மாநிலத்தில் உள்ள கட்டக்கில் பிறந்தார்.

ஆங்கிலேயே அரசுக்கு எதிரான தேசியவாத செயல்பாடுகளில் பங்கேற்றதற்காக கொல்கத்தா மாநிலக் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டார். அங்கு ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் பட்டப் படிப்பை நிறைவுசெய்த பின்னர் இங்கிலாந்து சென்று, ஐசிஎஸ் தேர்ச்சி பெற்றார். ஆனால், ஆங்கிலேய அரசின் கொடுமைகளை எதிர்த்து, பிரிட்டிஷ் அரசின் கீழ் பணியாற்ற மறுத்து, விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார்.

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற போஸ், வங்கத்தில் சித்தரஞ்சன் தாஸின் கீழ் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் பணியாற்றத் தொடங்கினார். ஆங்கிலேயர்களுக்கு எதிரான போராட்டத்தால் 1921-ல் கைது செய்யப்பட்டார். புரட்சிக் குழுக்களுடன் தொடர்பில் இருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில், பிரிட்டிஷ் அரசு அவரை பர்மாவுக்கு நாடு கடத்தியது.

1927-ல் தாய்நாடு திரும்பிய அவர், வங்க காங்கிரஸ் கிளையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் காங்கிரஸ் பொதுச் செயலாளராகி, நேருவுடன் இணைந்துப் பணியாற்றினார். ஆங்கிலேய அரசுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்களுக்கு ஆதரவாக இருந்ததற்காக பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார் போஸ்.

உடல் நலிவுற்றிருந்த போதும் ஐரோப்பா சென்று அங்குள்ள தலைவர்களை சந்தித்து, இந்திய விடுதலைக்கு ஆதரவு திரட்டினார். மீண்டும் இந்தியா திரும்பி 1938-ல் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒருகட்டத்தில் காந்தி-போஸ் ஆகியோருக் கிடையே முரண்கள் அதிகரித்தன. 1939-ல் மீண்டும் காங்கிரஸ் தலைவராக போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். காந்தியின் ஆதரவைப் பெற்ற வேட்பாளர் தோற்றார். ஆனால், காந்தியின் ஆதரவின்றி பதவியில் தொடர விரும்பாமல், போஸ் பதவியைத் துறந்தார். விடுதலைக்குப் போரிட்ட புரட்சிகர சக்திகளை ஒன்றுதிரட்டும் நோக்கில் ஃபார்வர்டு பிளாக் கட்சியைத் தொடங்கினார்.

1940-ல் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் அவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதால் அச்சமடைந்த பிரிட்டிஷ் அரசு, அவரை விடுவித்தது. பின்னர், கொல்கத்தாவிலிருந்து காபூல், மாஸ்கோ வழியாக ஜெர்மனியை அடைந்தார். இரண்டாம் உலகப் போர் நேரத்தில் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றுவதற்காக, ஜெர்மனியில் இருந்த இந்தியர்களை உள்ளடக்கிய ராணுவப் படையுடன் இணைந்து செயல்பட்டார். அங்குதான் அவருக்கு 'நேதாஜி' (மரியாதைக்குரிய தலைவர்) என்ற அடைமொழி வழங்கப்பட்டது.



இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் கூட்டாளியாக இருந்த ஜப்பான் தென்கிழக்கு ஆசியா மீது படையெடுத்த போது, போஸ் ஜப்பானுக்குச் சென்றார். தென்கிழக்கு ஆசியாவில் அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு கலைக்கப்பட்டிருந்த இந்திய தேசிய ராணுவம் புத்துயிர் பெற்று, போஸின் தலைமையில் இயங்கத் தொடங்கியது.

"உங்கள் ரத்தத்தைக் கொடுங்கள், நான் விடுதலை பெற்றுக் கொடுக்கிறேன்" என்பது போன்ற அவரது புகழ் பெற்ற வாசகங்களாலும், களச் செயல்பாடுகளாலும் ஈர்க்கப்பட்டு பர்மா, மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளில் வாழ்ந்த இந்திய இளைஞர்கள் பலர், இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்து பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் போராடத் தொடங்கினர்.

ஜப்பான் படைகளுடன் கோஹிமா, இம்பால் வழியாக 'இந்திய தேசிய ராணுவம்' (ஐஎன்ஏ) இந்தியாவுக்குள் நுழைந்தது. ஜப்பான் அரசின் முழுமையான ஆதரவு கிடைக்காததால், பிரிட்டிஷ் இந்திய ராணுவத்திடம் தோல்வியுற்று ஐஎன்ஏ பின்வாங்கியது. இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனிடம் ஜப்பான் சரணடைந்ததை அடுத்து, இந்திய தேசிய ராணுவத்தில் எஞ்சியவர்களும் சரணடைய நேர்ந்தது. 1945 ஆகஸ்ட் 18 ஜப்பான் ஆக்கிரமிப்பிலிருந்த தைவானில் ஒரு விமான விபத்தில் போஸ் மரணமடைந்ததாக ஜப்பான் அரசு அறிவித்தது. போஸின் ஆதரவாளர்கள், அவரது மரணத்துக்கு சொல்லப்பட்ட காரணத்தை ஏற்க மறுத்தனர். அவரது மரணத்தில் இன்றுவரை மர்மம் நிலவுகிறது.

# சமூக வலைதளங்களில் இருந்து விஷ்ணு விஷால் திடீர் விலகல்



வெண்ணிலா கபடி குழு திரைப்படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானவர் விஷ்ணு விஷால். குள்ளநரி கூட்டம், நீர்ப்பறவை, ராட்சசன் உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்து தனது தனித்துவமான நடிப்பால் ரசிகர்களைக் கவர்ந்தவர்.

சமீபத்தில் இவரது நடிப்பில் வெளியான ஆர்யன் திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இந்தப் படத்தை விஷ்ணு விஷாலின் தயாரிப்பு நிறுவனமே தயாரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நடிகர் விஷ்ணு விஷால் சமூக வலைதளங்களில் இருந்து தற்காலிகமாக விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, விஷ்ணு விஷால் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், சமூக ஊடகங்களிலிருந்து ஒரு சிறிய இடைவேளை எடுத்துக்கொள்கிறேன். இரண்டு வானம், கட்டாகுஸ்தி 2 ஆகிய படங்களின் அப்டேட்களுடன் விரைவில் திரும்புவேன் என பதிவிட்டுள்ளார்.



க/
பெ. ரணசிங்கம் படத்தின் மூலம் அறிமுகமாகி, பின் பாவ கதைகள், விடுதலை படங்கள் மூலம் பிரபலமானவர் நடிகை பவானி ஸ்ரீ. இவர் இசையமைப்பாளர் ஜி.வி. பிரகாஷின் தங்கை ஆவார்.

இதன்பின், நண்பன் ஒருவன் வந்த பிறகு, விடுதலை 2, ஹாட்ஸ்பாட் 2 ஆகிய படங்கள் இவர் நடிப்பில் வெளிவந்தன. நேற்று திரையரங்குகளில் வெளிவந்த காளிதாஸ் 2 திரைப்படத்தில் போலீஸ் அதிகாரியாக நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் முக்கிய நடிகைகளில் ஒருவராக இருக்கும் பவானி ஸ்ரீ, தனது இன்ஸ்டாகிராமில் தன்னுடைய லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார்.

# மம்மூட்டி - மோகன்லாலின் பேட்ரியாட் டிரெய்லர்!




மலையாள திரையுலகின் ஜாம்பவான்களான மம்மூட்டி மற்றும் மோகன்லால் இணைந்து நடித்துள்ள படம் 'பேட்ரியாட்'.

மகேஷ் நாராயணன் இயக்கி உள்ள இப்படத்தின் படப்பிடிப்பு அண்மையில் நிறைவடைந்தது.

இப்படத்தில் பகத் பாசில், ரேவதி, நயன்தாரா, கிரேஸ் ஆண்டனி, தர்ஷனா ராஜேந்திரன், ராஜீவ் மேனன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

நீண்டகாலத்திற்குப் பிறகு மலையாள சினிமாவின் இரண்டு பெரும் நடிகர்களும் இணைந்து நடித்துள்ள இப்படம் மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவாகியுள்ளது.

படத்தின் டீசர் ஏற்கனவே வெளியாகி கவனம் ஈர்த்த நிலையில் 'பேட்ரியாட்' படத்தின் டிரெய்லர் தற்போது வெளியாகியுள்ளது.

ஆக்சன் திரில்லராக உருவாகியுள்ள இந்த படத்தின் மம்மூட்டி, மோகன்லால் ஆக்சன் காட்சிகள் அனல் பறக்கும் வகையில் அமைந்திருக்கும் என்று டிரெய்லர் மூலம் ஊகிக்கமுடிகிறது.

இப்படம் முதலில் ஏப்ரல் 23ல் வெளியாக இருந்த நிலையில் அண்மையில் தேதி மாற்றப்பட்டு மே 1ந் தேதி திரையரங்குகளில் பேட்ரியாட் வெளியாகும் என அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கை விலங்குடன் அழைத்து வரப்பட்ட மிருணாள் தாகூர்



தென்னிந்திய திரை உலகில் பிரபல நடிகையாக இருப்பவர் மிருணாள் தாக்கூர். தெலுங்கு திரை உலகில் அறிமுகமாகி முன்னணி கதாநாயகியான மிருணாள் தாக்கூர் பாலிவுட் திரை உலகிலும் அறிமுகமாகி படங்கள் மற்றும் வெப் தொடர்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் அவர் நடிப்பில் உருவாகியுள்ள 'டக்காயிட்' படம் வருகிற 10-ந்தேதி திரைக்கு வர இருக்கிறது. இதைத்தொடர்ந்து படத்தின் புரமோஷன் நிகழ்ச்சி தீவிரமாக நடந்து வருகிறது.

விழாவுக்கு மிருணாள் தாக்கூர் கை விலங்குடன் திடீரென போலீஸ் வேனில் இருந்து இறங்கி வந்தார். இதனால் விழாவில் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் படத்தின் புரமோஷன் பணிகளுக்காக அவர் கை விலங்குடன் அழைத்து வரப்பட்டார் என்றதும் ரசிகர்களுக்கிடையே இருந்த பரபரப்பு அடங்கியது. இந்த காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# ஜிகர்தண்டா - 3 கார்த்திக் சுப்புராஜ்!



தமிழில் ஸ்டைலான மேக்கிங் திறன் கொண்ட இயக்குநர்களில் ஒருவர் கார்த்திக் சுப்புராஜ். ஜிகிர் தண்டா, மகான், ஜகமே தந்திரம், ஜிகிர்தண்டா டபுள் எக்ஸ் ஆகிய திரைப்படங்களில் உருவாக்க ரீதியாகவும் கவர்ந்தார்.

இறுதியாக, இவர் இயக்கத்தில் வெளியான ரெட்ரோ திரைப்படம் கலவையான விமர்சனங்களையே பெற்றது. இதனால், சூர்யா மற்றும் கார்த்திக் சுப்புராஜை ரசிகர்கள் விமர்சித்தனர்.

தொடர்ந்து, புதுமுக நடிகர்களை வைத்து சுயாதீன படமொன்றை இயக்கி முடித்துள்ளார். இப்படம் சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு அனுப்பப்பட்டு பின் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.இந்த நிலையில், நேர்காணலில் பேசிய இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ், "ஜிகர்தண்டா - 3 திரைப்படத்திற்கான திட்டம் இருக்கிறது. அதற்கான கதைக்கருவும் இருப்பதால் கண்டிப்பாக எடுப்பேன்" எனத் தெரிவித்துள்ளார்.

கார்த்திக் சுப்புராஜ் இயக்கிய படங்களிலேயே ஜிகர்தண்டாவுக்கு இந்தியளவில் கவனம் கிடைத்தது. காரணம், பல இயக்குநர்களே இப்படத்தைப் பாராட்டியுள்ளனர்.

ஆவேஷம் திரைப்படத்தை இயக்கிய ஜித்து மாதவன், நகைச்சுவையுடன் கூடிய கேங்ஸ்டர் திரைப்படங்களில் "ஜிகர்தண்டா" ஒரு பென்ஞ் மார்க் சினிமா. அதனுடைய தாக்கம் இல்லாமல் அந்த வகையில் படத்தை எடுக்க முடியாது எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# 'பிச்சைக்காரன்' பட கூட்டணியில் உருவான 'நூறு சாமி' டீசர்





'பிச்சைக்காரன்' படத்தை தொடர்ந்து இயக்குநர் சசி மற்றும் விஜய் ஆண்டனி கூட்டணி மீண்டும் இணைந்துள்ள படம் 'நூறு சாமி'. இந்தப் படத்தில் விஜய் ஆண்டனியுடன், லப்பர் பந்து படத்தில் நடித்து புகழ் பெற்ற நடிகை ஸ்வாசிகா, லிஜோமோல், கருணாஸ், காவ்யா அனில் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.இந்தப் படத்தின் இறுதிக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. முன்னதாக 'நூறு சாமி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் முதல் பாடல் ஆகியவை வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்றது.

இந்த நிலையில் 'நூறு சாமி' படத்தின் டீசர் அறிவித்தபடி இன்று வெளியாகி உள்ளது. 'நூறு சாமி' படம் ஒரு குடும்பத்தில் நிலவும் அன்பு, போராட்டங்கள் நிறைந்த கதைக்களம் என டீசர் மூலம் தெரியவருகிறது.

இந்தப் படம் வருகிற மே 1-ஆம் தேதி உழைப்பாளர் தினத்தன்று தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் திரைக்கு வர உள்ளது.



சின்னத்திரையில் பிரபலமான தொகுப்பாளினிகளில் ஒருவர் அஞ்சனா ரங்கன். இவர், சன் மியூசிக் நிகழ்ச்சியில் ஒளிபரப்பான நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார்.

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கும் தொகுப்பாளினி அஞ்சனா, தொடர்ந்து தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை அதில் பதிவு செய்து வருகிறார்.

இந்த நிலையில், தற்போது சேலையில் எடுத்துக்கொண்ட தனது சமீபத்திய கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். இணையத்தில் வைரலாகி வரும் அஞ்சனா ரங்கனின் லேட்டஸ்ட் போட்டோஷூட் இதோ













## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

## WANTED

Site Supervisor required for construction work in Ambattur



Contact:

8428872887













தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE









### பயணத்தில்...

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
பாடுபடப் பயணித்தால்
பல்லாண்டு வசிக்கலாம்...
பண்படப் பயணித்தால்
பரவசம் பொங்க
வாழ்ந்திடலாம்...
வசிப்பதற்கும்
வாழ்வதற்கும்
வித்யாசம் உணர்ந்து
விழைவுகளை நீ
வகுத்துத் தெளிந்தால்
பயணங்கள் அனைத்தும்
தேன்பலா சுவையில்
தெவிட்டாமல் தித்திக்கும்...
எட்டுத் திசைகளும்
என்றென்றும்
வேதங்களாய் விளங்கி
வெற்றிகளைக்
குவிக்கும்...
பகல் பயணத்திலும்
அலுப்பே இல்லாமல்
அயர்ந்து தூங்கும்
அதிமேதாவிகளும் உண்டு...
இரவுப் பயணத்தில் கூட
இமை மூடாமல்
விழித்திருக்கும்
இலட்சிய வாதிகளும்
இங்குண்டு காண்...
அவரவர் இடத்தில்
அவரவர் நியாயம் என்று
தராசுத் தட்டில் வைத்து
தர்க்கம் பேசினாலும்
பயணத்தில் மயங்காமல்
பொடிஅளவும் தவறாமல்
பாடம் பிடிப்பவன் தான்
பகுத்தறிவு மனிதன்
பண்பாட்டுச் செழியன்
இதைத் தான் நம்முன்னோர்
நரம்பூசி நயத்தில்
நச்சென்று சொன்னார்:
முட்டாள் அலைவான்
புத்திசாலி பிரயாணம்
செய்வான் என்று!



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்



### குறுங்கவிதைகள்.

இழுத்துச் சென்ற நீரை
அக்கரையில் விட்டு
பயணிகளுடன்
திரும்புகிறான் பரிசல்காரன்

பின்தங்கி விட்டது
பிரியாவிடை பெற்று
இறங்கியவரைப்பின்தொடர்ந்த
இரயில் சிநேகிதம்.

அம்மாவுடன் சமாதி
ஆகின்றன அப்பா விட்டுச்
சென்ற ஓய்வூதியமும் ஓயாத
இருமலும்.

நிறமற்ற நீர் வார்க்கிறேன்
ரோஜாவின் நிறத்தை
நிர்ணயிக்க இயலாமல்.

துடைப்பானை எதிரும்–
புதிருமாய்த் தள்ளி
கண்ணாடியை வழிமறிக்கும்
'கார்'–கால மழை.


ஈருடலை எங்கோ
ஓருயிராக்கி இருட்டில்
தவழ்ந்து வருகிறது
தூரத்து நாதஸ்வர ஓசை.

பௌர்ணமி இரவு
கிழக்கு நோக்கி திரும்பும்
சந்திரகாந்தி ஆகாத
சூரியகாந்திகள்
சபிக்கப்படும் ரோஜாமுட்கள்
பறித்த கரங்களின் கோபம்
பட்டாம்பூச்சிகளின் சாபம்.

வெயிலைத் தழுவுகிறது
பனியும் மழையும் நனைத்த
கூதிர்காலக் காற்று.
கைவிடப்பட்ட வீடு
தோட்டத்து அணிலை
தலைகீழாய்
ரசிக்கும்
வௌவால்.



**முனைவர் வே.புகழேந்தி,**
பெங்களூரு.



### துளிப்பாக்கள்

காற்று வீசுகிறது
இலைகள் அசைகிறது
நிலவொளி அசைகிறது!

ஆசை ஆசையாக
வரைந்தான் ஓவியன்
புத்தர் ஓவியம்!

உலா வரும்போது
திரை போடுகிறது மேகம்.
முகம் காட்டும் நிலவுக்கு!

எத்தனை வாகனங்கள்
அதன் மீது சென்றாலும்
அசைவதில்லை நிழல்!

விளைந்தது நெல் பயிர்
விவசாயின்
வியர்வையில்
உப்புக்
கரிக்கவில்லை
சோறு!



**பூ.சுப்ரமணியன்**
சென்னை

### வாழ்க்கை

வயலும் மரமும் குடிசையும்
வரம் என்று உணர்வோம்.
வாழும் வகை என்றும்.

மழலையும் முதுமையும்
வாழ்வென்று உணர்வோம்.
வாலிப வலிமை போன்றே.

நதியும் மலையும் முகிலும்
நமக்காக
என்று
உணர்வோம்.
நாம்
ரசித்திடவே.



**கே. பி. ஜனார்த்தனன்**

### அம்மா அழைக்கிறாள்.!

மகன் வந்து பார்பான்..
மகள் வந்து பார்ப்பாள்..
வழி பார்த்து விழி பூத்துப்
போயினவே..!

பாலூட்டி வளர்த்தும்..
சீராட்டி வளர்த்தும்..
முதியோர்கள் இல்லம்
நிலையானதே..!

கண்ணீரைத் தொட்டு
கடிதங்கள் எழுதிய..
அன்னையின் கண்ணீர்
வற்றியதே..

இன்னும் ஏன் இருந்தாய்?
பாரமாய் இருந்தாய்
என் பிள்ளை என் நெஞ்சில்
உதைத்ததுவே.!

அவர் இருந்த வரையிலும்..
குறையொன்றுமில்லை
என் கண்ணீர் துடைக்க
அவரில்லையே.!

பிள்ளைகள் இருந்தும்
முதியோர்கள் இல்லம்
சேர்த்தபின் யாரும்..
வரவில்லையே.!
பொழுதொன்று போனால்..
நாளொன்று போகும்..
விழுதொன்று தாங்க
மனமில்லையே!

முதியோர்கள் இல்லக்
கதவொன்று திறக்க..
எமக்காக யாரும்..
வரவில்லையே.!

**வே.கல்யாண்குமார்.**

### இன்குலாப் !

அதிகம் படைக்கவில்லை
என்றாலும் அழுத்தமாகப்
படைத்தவன் இன்குலாப் !

யார் கவிஞன் என்றால்
நீயே கவிஞன் என்றானவன்
இன்குலாப் !

பாரதி போலவே எழுதியது
போல வாழ்ந்தவன்
இன்குலாப் !

அஞ்சாமையின் குறியீடு நீ
சமரசம் செய்யாத
கொள்கையாளன் நீ
இன்குலாப் !

ஒடுக்கப்பட்டவர்களின்
உரிமைக்குரலில்
என்றும் ஒலிக்கும்
உன்கவிதைகள் இன்குலாப் !

மறைவு உன்
உடலுக்குத்தான்
மறைவு இல்லை உன்
கவிதைகளுக்கு
இன்குலாப் !

ஈழத்தமிழருக்காக
மனிதாபிமானக்
கவிதைகள் யாத்தவன்
இன்குலாப் !

ஆதிக்கம் எந்த வடிவில்
வந்தாலும் அதனை கவிதை
வடிவில் எதிர்த்தவன்
இன்குலாப் !

யாருக்கும் துதி
பாடாதவன்
நீ
அதனால்
உன் துதி
பாடுகின்றேன்
இன்குலாப் !



**கவிஞர் இரா .இரவி!**



### நாற்காலி சண்டை

எங்கும் நாற்காலி
சண்டைகள்
ஞாயிற்றுக்
கிழமைகளில்
நம்மவூர் சலூன்
கடைகளில்கூட,,,?!



**நாகை ஆசைத்தம்பி**
கோவை



பார்த்து கவனமாக செல்லவும்
அங்கு பாசமில்லாத
பல போலி மனிதர்கள்
உலவுகிறார்கள்!

யாரடி நீ? வேஷக்காரி
உன்னிடம் பாசம் கொண்டது
என் தவறு மட்டுமல்ல
உன்னை சந்திக்க வைத்த
காலத்தின் தவறும் தான்.
அன்பில்லாத
உன்னிடமெல்லாம்
பேரன்பு கொண்ட–என்
பைத்தியக்காரத்தனத்தை
பிஞ்ச செருப்பால் அடித்தாலும்
திருந்த போவதில்லை???????
பதிலில்லாத இந்த கேள்வி
குறியை போல்
என் வாழ்க்கையும்
நிவாரணமில்லாத நிர்கதிதான்!

நீ அமைதியாய் தான்
இருக்கிறாய் எனக்குள்
பூகம்பத்தை ஏற்படுத்தி விட்டு!

விண்மீனை கூட எண்ணி
விடலாம்–உன் விழிகளில்
அர்த்தம் காண்பது அரிது!

கனவில் மட்டும் ஏனடி
சொல்லாத
பல கதைகள் பேசுகிறாய்?!

இந்த வாழ்க்கை
இன்னும் வாழணும்ன்னு
நினைக்கும் போது
நீ கடவுளாகவும்
இந்த வாழ்க்கையை
ஏண்டா வாழுறோம்ன்னு
நினைக்கும் போது
நீ சாத்தனாகவும் தெரிகிறாய்.
மாறி கொண்டே இருக்கும்
நேரம் போல
நேரத்திற்கு தகுந்தாற் போல்
நீயும் உருமாறிக் கொண்டே
இருக்கிறாய்!

உன் மூக்குத்தி அழகில்
மூர்ச்சையாகி போகிறேன்!

தேடலில் கிடைத்த
பொக்கிஷம் என்றாய் ஏனோ
இப்போதெல்லாம்
தேவையில்லாமல் போய்
விட்டேன் உன் காதலற்ற
கண்களுக்கு! இறுதியாய்
என் கல்லறையில் எழுதுங்கள்
இந்த மனிதர்கள்
சுயநலமிக்கவர்கள் என்று!

நீ மடி சாயும் போதெல்லாம்
என் வாழ்வில்
விடியல் தானடி!

என் வாழ்க்கைக்கு
வழி கிடைக்கவில்லை
நீ கொடுத்த வலிகளால்!

அந்த கண்களுக்கு
கண்ணீரை தவிர உறக்கம்
கிடைப்பதே இல்லை
நீ பரிசாய் தந்த வலிகளால்!

பார்க்காம,கொள்ளாம
விருட்டு,விருட்ன்னு
ஏண்டா ஓடுற என்கிறாய்?
எப்படி சொல்வேன்?
அந்த களவாடும் திருட்டு
கண்களில் தப்பிக்கவே
முடியவில்லையென்று!

இப்போதைக்கு
என்ன வேண்டுமென்கிறாய்
எப்படி சொல்வேன்?
எப்போதைக்கும் உன்னை
காதல் செய்ய வேண்டும்!

ஏண்டா அப்படி, இப்படி
பார்க்குற என்கிறாய்?
எப்படி பார்த்தாலும்
நீ தான் பேரழகென்று
எப்படி சொல்வேன்?!

கல்லாத கள்வன் நான்
சொல்லாமல்,கொள்ளாமல்
அந்த பொல்லாத பார்வை
கொல்லாமல் கொல்லுதடி!

உன் நெற்றியில் தழுவும்
அந்த ஒற்றை கூந்தல் முடி
நன்கு தீட்டிய கருப்பு மை
பூசிய புருவங்கள்
பேச்சுக்கு நடுவே
அடிக்கடி செல்லமாய்
உதடு சுழிக்கும் முக
பாவணைகள் உன் தேனிதழில்
தொட்டு ,பட்டு வரம் வாங்கும்
முத்துக்கல் பதித்த
தங்கச் செயின் நெற்றிக்கு
பொருத்தமாய் இட்ட
சின்ன ஸ்டிக்கர் பொட்டு
உன் காதோரம் ஒட்டி
உறவாடும் அந்த ஜிமிக்கி
என்று இன்னும் இரசித்து
உன்னை காதல் கொள்ள
அன்றும்,இன்றும்,என்றும்
பல தருணங்கள் உள்ளதடி!
வெட்கம் விட்டு சொல்கிறேன்
உன்னை காதல் செய்ய
இந்த ஒரு ஜென்மம்
போதாதடி!

அந்த கடலலை கூட
பொங்கி தான் போனது
உன் அசைந்தாடும்
நடையழகை கண்டு!

வேண்டும்,வேண்டும்
மீண்டும் இம்சை பெற்று
உன்னை காதல் செய்ய
இன்னொரு ஜென்மம்
வேண்டும்!

உன் செல்லச் சிரிப்பினில்
விழுந்து செத்து போனாலும்
தகுமடி!

ஒரு மகா ஞானியொருவன்
தான் எழுதிய படைப்பு தான்
சிறந்தது என பெருமிதம்
கொண்டான் எப்படி
சொல்வேன்? அவன்
எழுதியதை விட அவனால்
படைக்கப் பட்ட நீ தான்
உலக பிரமிப்பென்று!

சிக்கி கொள்ள
ஆசைப்படுகிறேன்
எனக்கு ப்ரியமான
உன் நூடுல்ஸ் மண்டையில்!

மனிதர்கள் காதலித்தால்
இன்றைய செய்தியாகிறது
நாம் காதலித்தால்
நாளைய வரலாறாகும்!

நீயின்றி நானில்லை
நானின்றி நீயில்லை நாமின்றி
இப்பிரபஞ்சத்தில்
பெருங்காதலேயில்லை!

இதுவரை இல்லாத ஒன்றை
இப்பிரபஞ்சத்தில் முதன்
முதலாய் உணர்ந்தேன்??
உன்னைக் கண்டதும் காதல்!!

**நௌஷாத் கான்.லி**



ஆறுதல் சொல்ல
தெரியாதவனிடம் அழாதே....

செய்கின்ற முயற்சியை
ஒருபோதும் விட்டு விடாதே...

உயரத்தை தொட்டாலும்
உரியவர்களை மறந்திடாதே...

நீ நம்பியவர் கை விட்டாலும்...
உன்னை நம்பியவரை
கைவிட்டு விடாதே...

காலில் விழுவது கடமை
என்று என்ன விடாதே...

முதுகில் குத்த
முட்டாள்
காத்திருப்பான்....!!



**பொன்.கருணா**
நவி மும்பை

### நிமிர்ந்து நில்

குனிந்த உன் தலையை வருட
தெரியாவனிடம் விழாதே...

### கலையும், கலாச்சாரம்

உயர்ந்த கோபுரம் உசிரா
நிற்குது நம் கலை
கலாச்சாரத்தை காத்து
நிற்குது...!

கல்லான சிலை நமக்கு
காவல் காக்குது அது
நம் கஸ்ட்டத்தை தீர்த்து
வைக்குது...!

தேவைக்கு மனம் தேடி
போகுது தேர்மேலே
பவனிவந்து தேசம்
காக்குது...!

கடவுள்னு சொல்லிபார்
கஸ்ட்டம் நீங்கி போகும்
அவனையே வணங்கி பார்
உன் வாழக்கை செழித்து
போகும்....!!

**பொன்.கருணா**
நவி மும்பை

## நூல் விமர்சனம்

**முத்தையா மோகனின் நூல் சுவை...**
**இதய மொழியில் உதய ராகம்...**
**கவிதைத்தொகுப்பு**
**கவிக்குடில் வெளியீடு:கோவை.**
**விலை 100 மட்டும்**
**பக்கங்கள் 100,**
**முதல் பதிப்பு 2026.**




இதய மொழியில் உதய ராகம் இது கவிதை தொகுப்பா...? அல்லது கவிதைகளின் வயல் வெளிகளா...? கருவில் உருவாகி அருவுருவாய் வெளிவரும் மழலை பெரும் கவிதை. கைகளூன்றி கால்களூன்றி எழுந்து நிற்க முற்படும் மழலையோ மிகப்பெரும் கவிதை. கைகள்வீசி கால்கள் குதித்து தெருக்களிலாடும் மழலைகளோ கவிதை கவிதை கவிதை....!.....!....! கவிஞர் தோழர் மனோன்மணியின், இதய மொழியில் உதய ராகம் கவிதை தொகுப்புகளெங்கும்... மழலைத் தனமான கவிதை மொழிகள் கொட்டிக்கிடக்கின்றன.

"புள்ளி வைத்து கோலம் போட்டாள் வளைந்து வளைந்து சென்றது வாழ்வின் வளைவுகளை பெண்ணுக்கு புரிய வைக்க..." வாழ்வியல் என்கிற தொடர் பயணம் என்பதினுடைய சிக்கல் சினுங்கல்களின், நெளிவு சுளிவுகளை கற்றுத் தருகிறது கோலம், என்று கச்சிதமாய் எடுத்துரைக்கிறார் கவிஞர்... "அரசியல் எனும் வீட்டினிலே-சில சோம்பேறி காளான் முளைக்குதடி இதை பார்க்க பார்க்க என் மனம் உலை நீராய் கொதிக்குதடி...." இந்த கவிதையில் வரும் சோம்பேறி என்கிற வாசகம் ,...அகடு தகடு செய்கின்ற தில்லு முல்லு புரிகின்ற ... சுயநல பித்தேறிய அரசியல் நயவஞ்சகர்களின் சில்லறைத்தனங்களை தோலுரிப்பதாய் அமைந்திருக்கிறது. தொகுப்புகள் எங்கும் கவிதைகள் மிக எளிமையாய் கையாளப்பட்டிருப்பது கவனிக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. "தலையை காக்கும் கவசம் வீட்டிலே உன் தலை தெறித்து போனதோ நடு ரோட்டினிலே..." சாலை விதிகளை மதிக்காத வேக விரும்பிகளின் விபத்து கூறுகளை எடுத்து விளம்புகிறது ... உறவுகள் கோடி வீட்டில் காத்திருக்க, உணராத வேக விரும்பிகளின் ஆபத்தை பேசுகிறது கவிஞரின் இந்த கவிதை. "தீப்பெட்டிக்குள் பதுங்கி இருக்கும் தீக்குச்சிகளைப் போல கொஞ்சம் உரசினாலும் போதும் பற்றி எரியும் தேசப்பற்று..." இந்த தேசத்தை காக்கும் தீப்பொறிகள் (இளைஞர் கூட்டம்) தீப்பெட்டிக்குள் அடைப்பட்டதை போல சாதி மத சந்திராய சடங்குகளில் சிக்கி மாய வலைகளுக்குள் தங்களை சிக்க வைத்துக் கொண்டு இருக்கின்ற இளைஞர் கூட்டல் மேலாண்மைகளை அவர்களுக்கு தகுந்தார் போன்ற பட்டறைகளை அமைத்து சீர் செய்யும் பட்சத்தில் இந்த தேசம் சுயநலம் இல்லாத பொதுநலங்களை மேம்படுத்துகிற சிந்தனைகளோடு வளரும் என்பதையும், தேசத்தின் பொது நலன்களை நெஞ்சில் எழுதுகிற இளைஞர்களின் புரட்சி முன்னெடுப்புகள் தான் மிகச் சரியானதாக இருக்கும் அந்த தீப்பொறிகளை புரட்சி பொறிகளாய் மாற்றுவது நமது கைகளில் தான் இருக்கிறது என்கிறார் கவிஞர். "அறுசுவை உண்ட நாவிற்கு கடைசி பயணத்தின் போது சிறு பொறி தான் அனுப்பப்பட்டது..." ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று வாழ்நாளில் தாம்தூம் என்று குதிக்கின்ற மனிதர்களின் வாழ்வியல் என்பது கடைசி கால பயணத்தின் போது சிறு பொடியில் தான் முடிகிறது. நீ நான் ஏழை பணக்காரன் என்று ஆணவ அகம் பாவங்களோடு அலைந்து திரிகின்ற மனித கூட்டம் இதை புரிந்து கொள்ள வேண்டும் என்கிறது கவிஞரின் வரிகள். கவிஞரின் தந்தை, அரங்கன் அடிகள் அவர்கள் சிறந்த நாடக ஆசிரியரும், பாடல் ஆசிரியரும், கவிதை புனைபருமாய் இருந்திருக்கிறார்... தமிழக அரசின் அகவை முதிர்ந்த தமிழறிஞர் விருதும் இன்னும் பல விருதுகளையும் பெற்றிருக்கிறார். தாயார் சந்திரகாந்தா அவர்கள் ஆன்மீக இசைப் பேருரை உபன் யாசகர் ஆவார். இவரும் பல அரிய விருதுகளை பெற்றிருக்கிறார். இவர்கள் வழி வந்த கவிஞர் தோழர் மனோன்மணி அவர்களும் பல புதினங்களை எழுதியிருக்கிறார். பெற்றோர்களின் வழியில் இலக்கியப் பணிகளும் இந்த சமுதாயப் பணியிலும் தேசப்பற்றோடு தனது எழுத்து நடைகளை செய்து கொண்டிருக்கிறார் கவிஞர். "எத்தனையோ சலுகைகள் மக்களிடம் சென்று கொண்டிருக்க ரோட்டோரம் பிச்சை எடுக்கும் குழந்தைகளின் நிலைமை...?" நாம் அனு தினமும் கடந்து போகிற பாதைகளில் கால் வயிற்று சொற்றிற்காக கையேந்தி நிற்கும் பிஞ்சு மழலைகளின், மனவேதனையையும் உள்ள கிடப்பையும்... இதைவிட அழுத்தமாக சிந்திக்க முடியுமா என்று தெரியவில்லை. இந்த கவிதை தொகுப்பான "இதய மொழியில் உதய ராகம்.."தொகுப்பில் பெரும்பாலும் கவிதைகளில் மழலைத்தனமான இலக்கியங்கள் நடனமாடுகின்றன... இன்னும் சற்றே ஆழ்ந்து உற்றுநோக்கி அடுத்த தொகுப்பில், முதிர்ச்சி மிகுந்த இலக்கிய கவிதைகளை முன்னெடுக்க வேண்டும் கவிஞர். இந்த சமூகத்தில் பின்னி கிடக்கின்ற சிக்கல் சினுங்கல்களை கலையும் விதமாக கவிஞரின் கவி வரிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம் புரட்சி வாழ்த்துக்களுடன்.

**கவிஞர் முத்தையா மோகன்**
**76 உமா நாம நகர் 1 உப்பிலி பாளையம்**
**மாவட்ட ஆட்சியரகம் அருகில்**
**கோயம்புத்தூர் 18.**
**பேச: 9659419429.**






## பழனி மலை முருகா!

பற்றுவைத்தே பாடிடுவேன் பழனிமலைப் பாட்டுப்
பக்தியுடன் பரவசத்தால் முருகனருள் கேட்டுக்
கற்றுவைத்த தமிழாலே கந்தனுக்கு மாலை
கருத்துடனே சாற்றிடுவேன் கனியுமிந்த வேளை
சுற்றுவைத்த போட்டியிலே தோற்றவிட மன்று
சுந்தரன்நீ வீற்றிருக்க ஏற்றவிட மன்றோ வெற்றிசூழும்
அறுபடையின் வீட்டினிலே மூன்றாம்
வேட்கையின் பழம்நீதான் ஞானத்தின் சான்றாம்

தண்டத்தை ஆயுதமாய் கொண்டவனே போற்றி
தண்டாயு தபாணியுன்றன் புகழனைத்தும் போற்றி
கொண்டமன வேண்டுதல்கள் நிறைவேற்றும் சீலன்
கொடியபல துன்பங்கள் போக்குகின்ற வேலன்
அண்டத்தை காக்கின்ற குமரனவன் கோலம்
அலங்காரம் கண்கொள்ளாக் காட்சியாகும் நாளும்
விண்ணதிரும் முழக்கத்தால் முருகனையே பாடு
வியப்புகளால் விரிவாகும் மனமென்னும் கூடு

போகரெனும் சித்தர்கள் வாழ்ந்திட்ட பூமி
போய்வந்தால் பலனளிப்பான் சித்தநாதன் சாமி
தாகத்தால் ஆன்மாவும் சுத்தமாகும் உண்மை
தவறாமல் இடும்பனையும் வணங்கிட்டால் நன்மை
சோகங்கள் துளியுமின்றி அழகனவன் செய்வான்
சோதிக்கும் நோய்நொடிக்கு மருந்துகளை நெய்வான்
வேகத்தைக் கூட்டுகின்ற பழனிமலை நாதம்
வெற்றிகளைக் குவித்திடவே வணங்கிடுவோம் பாதம்

**கவிஞர் மு.வா.பாலாஜி,** ஒசூர்.



## பழைய சோறு..

பழையசோறு உண்ணலாமடி..
தங்கமே.. பயமில்லாம
வாழலாமடி.! பச்சை
மிளகாயுடனே வெங்காயம்
சேர்த்து பல்லாண்டு
வாழலாமடி.!

காப்பித் தண்ணி குடிக்க
வேண்டாம்டி.. தங்கமே..
நீராகாரம் குடித்துப் பாரடி.!
சத்து தரும் நீரு மோரு
சகலருக்கும் நல்லதென
பெரியவர்கள் சொல்லுவாரடி.!

வயல் வெளியில்
உழைப்பவருக்கே.. தங்கமே..
பழைய சோறு அமிர்தம்
தானடி!அயலகத்தார்
உணவுமுறை அன்னைத்தமிழ்
நாட்டவர்க்கு வேண்டாமே
உணர்ந்து பாரடி.!

துரித உணவு கடைகள் தானடி.. தங்கமே.. நோய் வளர்க்கும்
அறிந்து கொள்ளடி.! புரிந்து கொண்டு பழைய சோறு
சாப்பிட்டே வாழ்க்கயிலே நூறு ஆண்டு வாழ்ந்து காட்டடி..!



## கல்லறையில் இல்லை இயேசு.!

கல்லறையில் இல்லை அந்த இயேசு! அவர் கருத்தினில்
உயிர்த்தெழுந்தார்! தொல்லையெனும் கல்லினையே புரட்டி
அவர்.. நம்மனதில் உயிர்த்தெழுந்தார்!
நம்மனதில் உயிர்த்தெழுந்தார்!

ஆசையெனும் சேற்றினிலே புதைத்தோர்.. அப்போது
எங்குயிருந்தார்? ஆள் அம்பு படையுடன் காவல் வைத்தவர்கள்
எங்குயிருந்தார்? நேற்று இன்றும் நாளை எப்போதும்
இயேசு நமக்குள் உயிர்த்தெழுந்தார்! நீதிவழி நடப்போர்
பாதையிலெல்லாம் முன்னிருந்து உயிர்த்தெழுந்தார்!



சாட்டையடி மரணம் சிலுவையின்
சுமைகள் அத்தனையும் உடைத்தெரிந்தார்!
கோட்டைகளில் அல்ல.. குடிசைகள் நடுலே
கோமகன் உயிர்த்தெழுந்தார்! ஆடுகளைத்
தேடியே ஓடிவந்த மேய்ப்பராக.. ஆகா.. அவர்
உயிர்த்தெழுந்தார்!

**வே.கல்யாண்குமார்.**



விரல்களின்
இடைவெளிகளில்
வழியும் பிரியத்தை
கனத்த மனத்துடனே தான்
கசிய விடுகிறது விடைபெறும்
ஒற்றைக் கையசைவு

மனக்கண்களில் கசியும்
கண்ணீரை அனாயாசமாகத்
துடைத்து.. இழுத்து
அணைத்துக் கொள்ளும்..
உறுதியளிக்கும்..
நேசத்தை விட உயர்வேது
இப்பிரபஞ்சத்தில்

வலிகளைத்தூள் தூளாகச்
சிதறவிட்ட பின்
பத்திரப்படுத்தி பாதுகாக்கும்
நேசத்தில் மறுபடி
புதியதோர் உற்சாகத்துடன்
ஆரம்பிக்கிறது



வன
மரங்களின்
ஆனந்தக்
கிளைகளின்
அசைவுகள் !

**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்



1. இரண்டு புத்திசாலிகள்
காதலிக்க முடியாது
உண்மையான காதலுக்கு
நிச்சயமாக ஒரு முட்டாள்
தேவை

2.அனைவருக்கும் ஆற்றைக்
கடக்க உதவும் படகு
ஆற்றிலேயே விட்டுச்
செல்லப்படுகிறது

3.தேவைக்காக வணங்காதே
வணங்கிக் கொண்டே இரு
உன் தேவை உன்னை தேடி
வரும்

4. பெண்ணின் பிரசவ
அறையில் கணவன் இருக்க
அனுமதிக்கப்பட்டால்
விவாகரத்தும் கற்பழிப்பும்
நம் நாட்டில் இல்லாமல்
போய்விடும்

5. பணம் உன்னிடம்
இருந்தால் யாரையும் உனக்கு
தெரியாது பணம் உன்னிடம்
இல்லை என்றால் உன்னை
யாருக்கும் தெரியாது

--------------------

1. கடிகாரத்தை நிறுத்தி
வைப்பதால் காலத்தை
சிறைபிடிக்க முடியாது
கவலைகளை சுமந்து
நிற்பதால் காலத்தை வெல்ல
முடியாது ஓடிக்கொண்டு
இருப்பது தன் வாழ்க்கை

2. அனுபவம் என்பது
தவறுகளை திருத்திக்
கொள்வது ஆணவம்
என்பது தவறுகளை
நியாயப்படுத்துவது


3.கனவுகளுடன் கட்டிய
வீட்டில் காவல்காரன் போல்
நிற்கிறான் கடன்காரன்

4. நல்லதை செய்யும் எந்த
நேரமும் கெட்டதாக இருக்க
வாய்ப்பில்லை

5. அரசியலை நாம்
தவிர்ப்போமே
ஆனால்
நம்மால்
தவிர்க்கப்பட
வேண்டியவர்கள்
நம்மை ஆள
நேரிடும்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



பூதல தலைவர்கள்
செய்யும் பாவமெல்லாம்

பாமர மக்கள் மேலே ஏறும்.

ஏமாற்றும் வல்லவர்
நல்லவர் அல்லர்

எனத் தெரிந்தும் ; அவர் பாரம்
இவர் சுமக்கும் அவலம்!

சிலுவைகள் சுமப்பது அப்பாவி
மக்களே!

உயிர்த்தெழுதல்
இனி இல்லை

எத்தனை சிலுவை சுமப்பது?

எத்தனை முறை
உயிர்த்தெழுவது?

தாம் செய்யும் பாவம்
இன்னெதென்று
அறிந்தும்,

பாவம் செய்யும்
தலைவர்கள்.

பாவிகளை மீட்க அல்ல;
அவர் பாவங்களை மறக்கவும்,
மறைக்கவும், மறக்கவும்.

மனுஷனாய் பிறந்த
தேவகுமாரனுக்கு
இனி இங்கே என்ன இல்லை?



ஆக; உயிர்த்தெழுதலும்
இனி இங்கில்லை

ஆமென்! ஆமென்!
அல்லேலுயா!

**சசிகலா விஸ்வநாதன்**



## கடல்சார் வளங்கள் காண்!

நேரிசை வெண்பா!

கடல்சார் துறையின்
கடமையை எண்ணித்
திடமாகக் காண்கின்ற
தேர்ந்த..கடல்நாளே
கண்ணிய மானதே
காணும் மடமைநீக்கி
வண்ணமாய் வாழ்த்தலாம்வா!

நாட்டின் வளமான
நற்கடல்கள் பங்கினைக்
காட்டிடும் நல்லாய்வு
நாளுமே..தேட்டமுடன்
வாணிகமும் வண்ணமுறை
காணலாமே எந்நாளும்
பேணிடுவோம்ஆழிநாளே பீடு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**

## கடமையைக் கண்ணெனக் காண்!

நேரிசை வெண்பா!

நாட்டில் கடமைகள்
நன்றாகக் காணுமே
வீட்டில் கடமைகள்
வீறுடன்..கூட்டும்!
மடமையை விட்டொதுக்கி
மாண்பாக நாளும்
கடமையைக் கண்ணெனக்
காண்!

அடிமையாய் வாழாதே
அன்பிலே நிற்பாய்
துடிப்புடன் வேலைசெய்!
தூய..உடும்புப்பிடியாக
உன்னத மாகவே என்றும்
கடமையைக் கண்ணெனக்
காண்!



## பாபு ஜெகஜீவன்ராம்!

அறுசீர் மண்டிலம்.

தீண்டாமைக் கொள்கை
எதிர்த்தவராம்
தேர்ந்தநல்ல பாபுஜெகஜீவன்!
மாணவர்கள் கண்ட
வேறுபாட்டை மாண்பாக
நீக்கி உயர்ந்தவராம்!
மூண்டநல்ல விடுத
லையில்தானே
மேன்மையாகத் தானே
உழைத்தவராம்!

ஆண்டாரே துணையாய்ப்
பிரதமராய் அன்புடனே மக்கள்
துணையானார்!

சீர்திருத்த வாதி ஜெகஜீவன்
செழிப்பான திட்டம்
பலவகுத்தார்!
பார்போற்றும் தொண்டு
பலசெய்தார் பண்பாட்டை
நன்கு காத்தாரே!
சீர்வளர்ச்சி செய்து நின்றாரே
செம்மையான வளர்ச்சி
கண்டாரே! ஈர்த்திடுவார்
அன்பால் எல்லோரை
இனிமையன குணத்தார்
ஜெகஜீவன்!



**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## தாயங்கள் காயங்கள்

பரத நாட்டியத்தின் பருவ
ஒளி பாதம் எழுப்பிய
சலங்கை ஒலி...

பாதங்களின்
அசைவுகளுக்குத்
தாளம் போடுகிறோம்...

கோலம் போடும்
விரல்கள் ஓவியம்
வரைகின்றன....
காயம் பட்டக்
கலாச்சாரத்திற்கு மருந்து
பூசப்படுகிறது...



சில நேரங்களில்
தாயம் போடும்
அதர்மங்களுக்குக்
காயங்களாகிறது....

**எஸ் சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சிக்கோட்டை



## பூமித்தாய்

பசுமை ஆடை உடுத்தி பொறுமையின்
சிகரமாய் விளங்கும் பூமித்தாயே!

விண்ணின் நீலமும் மண்ணின் பசுமையும்,
உந்தன் எழிலை சொல்லும்!

சுவாசக் காற்றையும்,தாகத் தீர்த்தத்தையும்,
ஈன்றெடுத்தத் தாயே நீ!

அகழ்வாரை தாங்கும் நிலமே, அன்பின் இலக்கணம் நீ !

சுயநலம் இன்றிச் சூழலும் தூய்மை காத்து துதிப்போம் நாமே!

மௌனமாய் பாரம் சுமக்கும் மாபெரும் பொறுமையின் சிகரம் !

இயற்கையின் சீதனம் –ஆறுகளை நரம்புகளாகவும்,
காடுகளை சுவாசமாகம் கொண்டு, அனைத்து உயிர்களையும்
பேதமின்றி அணைக்கும் அன்பு தொட்டில்!

நமது கடமை –சுயநலத்தால் நாம் தரும் வலியை
புன்னகையோடு ஏற்கும் அன்னையை மரம் வளர்த்துக்
காப்போம்!

மண்ணின் மணம் மாறாமல் மதிப்போம்! மண்ணின் வாசம்
உன் சுவாசமாய் மழையின் துளிகள் உன் தாகமாய்!

துன்பம் தந்தாலும் பொறுப்பவள் நீ!
வானும் மண்ணும் உந்தன் மடியில்!

உயிர்கள் யாவும் உந்தன் துடியில்!

நீ அன்பின் அழியா முகவரி நீ ;
ஆயிரம் காயங்கள் சுமந்து ஆனந்தம் தரும் தாய்!

பொறுமையின் எல்லை உன் மவுனம்,
புன்னகை பூப்பது உன் தானம்!

பகிர்ந்து உண்ண நிலம் தந்தாய் பயணித்து
செல்ல இடம் தந்தாய்!

நாங்கள் போட்ட வேலிகளைத்தாண்டி
நீயோ யாதும் ஊரே என விரிந்து கிடக்கிறாய் !

உன்னை செதுக்கினால் சிற்பம்! உன்னை சிதைத்தால் சாபம்!

சிதைப்பவனையும் சேர்த்தே சுமக்கும்
உன் பெருந்தன்மைக்கு நிகர் எது!

மண்ணின் விழும் விதைக்கும்
மண்ணில் புதையும் மனிதனுக்கும்
மௌனமாகவே முத்தி தருவாய்!



**பெ.திருமுகம்** மணமேல்குடி



## புற்றுநோயைப் புதைப்போம்

அறிந்தேநாம் தவறுதனைச் செய்யுகின்றோம்
அறிவிருந்தும் அறிவிலியாய் ஆகி விட்டோம்
பொறித்திருக்கும் எச்சரிக்கை படித்த பின்பும்
பொலிவழித்தே நோய்சேர்க்கும் என்றுணர்ந்தும்
அறிவுறுத்தித் தொலைக்காட்சி செய்தித்தாள்கள்
அறிவிப்பாய் நாள்தோறும் அறிக்கை தந்தும்
வெறியோடு வெண்சுருட்டுப் புகையி ழுத்தே
வேதனையில் துடிப்பதுவும் தேவை தானா ?

வெற்றிலையை மென்னுவதில் தவறோ இல்லை
வெற்றிலையில் புகையிலையைச் சேர்ப்பதாலே
நற்தொண்டை வாய்நாக்கு உதடெல்லாமே
நாளடைவில் ஆறாத புண்ணாய் ஆகிப்
புற்றுநோய்க்கு வித்திட்டே உடலுக்குள்ளே
புரையோடி உயிர்குடிக்கும் என்றறிந்தும்
சற்றுமதை நினைக்காமல் சுவையே என்று
சாவதற்கு நஞ்சுண்ணல் தேவை தானா ?



வழிதிறந்து வருமானம் பெருக்கிக் கொள்ள
வாய்க்கரிசி போடுகின்ற அரசெதிர்த்தே
விழிப்புணர்வு நாம்கொள்வோம் விரித்து வைத்த
விடவலைக்குள் வீழாமல் காத்துக் கொள்வோம் !
வழிமாறிப் போவோர்க்கே எடுத்துரைத்து
வாய்த்ததீய பழக்கத்தை விடுக்கச் செய்வோம் !
குழிதோண்டிப் புற்றுநோயைப் புதைப்பதற்கே
கூடியொன்றாய் செயல்படுவோம் உயிரைக் காப்போம்!!

**பாவலர் கருமலைத்தமிழாழன்**


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539


PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


முனீஸ்வர் துணை
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call:7871617005



Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com



Happy Birthday
D.VIJAYA


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
Salary: ₹10,000 - ₹15,000
Attractive Incentives
Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale ..
Residential / Commercial ..
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business
IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ-பேப்பர்.காம்


WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview


உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
(ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
(ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
Sale
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009









VINAYGA ENTERPRISES

**WANTED**

**COMPUTER OPERATOR**
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE

CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI




Get Free Jobs Alert on Your
**WhatsApp**
Register Yourself on our
**8122664699**
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

**ST COURIER**
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
**Cell: 9176130601**




**WANTED**

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். **8668107106**







**செக்யூரிட்டி கார்டுகள் தேவை**

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
**அணுகவும்: 9840861539**

**WANTED**

**JAY SECURITY FORCE**

**பணி வாய்ப்புகள்**

- **பணிகள்:** A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- **இடங்கள்:**
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

**பெண்கள் தேவை**

**சம்பளம்:- 12500 முதல் 20000 வரை**

**9791061354 - 8072969599**

Head office
NO :1, அம்பாள் அவின்யு,
வி.பி.ஜி அவின்யு, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97











# பல்சுவை களஞ்சியம்




# மீம்ஸ்







## ராமநாமம் 12 மணி நேரம் தொடர்ந்து நடைபெறும் இடம் தெரியுமா?

ஓர் ஆஸ்ரமம் இந்தியாவில் இருக்கிறது,

1931 ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலும் இங்கே தினமும் 12 மணி நேரம் விடாமல் ராமநாம கீர்த்தனை நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது;

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ராம நாம கீர்த்தனை நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது;
முதல் 30 நிமிடங்கள் பெண்கள் மட்டும் கீர்த்தனை செய்கிறார்கள்;
அடுத்த 30 நிமிடங்கள் ஆண்கள் மட்டும் கீர்த்தனை செய்கிறார்கள்;

இந்த ராம நாம கீர்த்தனையில் நாமும் பங்கு பெறலாம்;அப்படி பங்கு பெற நாம் செய்ய வேண்டியது முன்பதிவு செய்வது மட்டுமே!
அப்படி முன் பதிவு செய்தால்,இந்த ஆஸ்ரமத்தில் தங்கிட அறை கிடைக்கும்;உணவும் கிடைக்கும் இலவசமாக! தனியாக செல்லலாம் தம்பதியாகச் செல்லலாம் நண்பர்களாகச் செல்லலாம்;
ராம நாமத்தை ஜபிக்க வரும் பக்தர்களுக்காக ஆஸ்ரமமே செய்திருக்கும் அற்புதமான ஏற்பாடு;

இந்த ஆஸ்ரமத்தில் அதிகபட்சமாக மூன்று நாட்கள் மட்டுமே தங்கலாம்;

1931 முதல் தொடர்ந்து ராம நாம கீர்த்தனைகள் நடை பெற்று வருவதால் இந்த ஆஸ்ரமம் முழுவதும் கோடிக் கணக்கான எண்ணிக்கையில், லட்சக்கணக்கான மனிதர்களின் ஜப எண்ணிக்கை காற்றில் பரவி யிருப்பதை உணர முடிகிறது;
இங்கே மூன்று நாட்கள் தங்கியிருப்பதன் மூலமாக,நமது நீண்ட நாள் மன உளைச்சல்






தானாகவே குணமாகி விடுகிறதாம்;

சிலருக்கு நிலையான மன உறுதி கூட சீர் குலைந்து போயிருக்கும் அதுவும் சரியாகி விடும்;

ஆழ்ந்த மன நிம்மதி பெற விரும்பு பவர்கள் இங்கே ஒருமுறை வந்தால் போதும்;

சிலருக்கு ஒரே நாளில் மன அமைதியைப் பெற முடியும்;

கடந்த 10 மாதங்களில் செய்த ஆன்மீக ஆராய்ச்சி யின் முடிவு இது;

இந்த ஆசிரமத்தை ஆரம்பித்தவர் சமர்த்த ராம தாஸரின் வம்சா வழியைச் சேர்ந்தவர்;(சமர்த்த ராமதாஸர்,மகா ராஷ்டிர மாநிலத்தில் தேசபக்தியைத் தூண்டிய வீர சிவாஜியின் குரு ஆவார்)
இல்லத்துறவியாக இருந்த இவர் இந்தியா முழுவதும் நடந்தே பயணித்தவர்

ராம நாம கீர்த்தனையை தனது தந்தையிடம் இருந்து பெற்றவர் தனது வாழ்நாளில் சில கோடி தடவை ஜபித்தவர்;

இவருக்கு நயன தீட்சை வழங்கிய குரு ரமணமகரிஷி;
இவருடைய சீடர் தான் விசிறிச் சாமியார் என்று அழைக்கப்படும் யோகிராம்சுரத் குமார் ஆவார்;
அந்த ராம நாம கீர்த்தனை இது தான்
*ஓம் ஸ்ரீராம
ஜெய ராம*
ஜெய ஜெய ராமா ||

இந்த ஆஸ்ரமம் அமைந்திருக்கும் இடம் மூன்று மாநிலங்கள் சந்திக்கும் இடத்தில் அமைந்திருக்கிறது;
உலகம் முழுவதும் இருந்து ராம பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர்;
முகவரி
ஆனந்த ஆஸ்ரமம் காஞ்சன்கோடு, கேரளா;
தமிழ்நாடு,கேரளா, கர்நாடகா மாநிலங்களில் எல்லைப்பகுதியில் வடக்கு கேரளாவில் அமைந்திருக் கின்றது.



## விடுகதை

| | |
|---|---|
| பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன? | தலைமுடி |
| மூன்றெழுத்துப் பெயர், உடல் முழுவதும் வெள்ளை நிறம் அது என்ன? | பஞ்சு |
| இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்? | தேள் |
| உடம்பெல்லாம் சிவப்பு அதன் குடுமி பச்சை அது என்ன? | தக்காளி |
| எத்தனை தடவை சுற்றினாலும் தலை சுற்றாது அது என்ன? | மின் விசிறி |
| சட்டையைக் கழற்றினால் சத்துணவு அது என்ன? | வாழைப்பழம் |

## தமிழ் ஆண்டுகள் 60

ஆண்டுகளின் பெயர் ஏன் 'தமிழ் மொழியில்' இல்லை ?

தமிழ்ப்பெயர் இருக்கிறது, அதை எவரும் பயன்படுத்துவதில்லை. இன்று துவங்கும் ஆண்டின் பெயர் பகைக்கேடு(குரோதி)... வடமொழிப் பெயர் -தமிழ்ப் பெயர்

பிரபவ -நற்றோன்றல்
விபவ -உயர்தோன்றல்
சுக்கில-வெள்ளொளி
பிரமோதூத-பேருவகை
பிரசோத்பத்தி-மக்கட்செல்வம்
ஆங்கீரச-அயல்முனி
சிறிமுக-திருமுகம்
பவ- தோற்றம்
யுவ-இளமை
தாது-மாழை
ஈசுவர-ஈச்சுரம்
வெகுதானிய-கூலவளம்
பிரமாதி-முன்மை
விக்ரம-நேர்நிரல்
விச-விளைபயன்
சித்திரபானு-ஓவியக்கதிர்
சுபானு-நற்கதிர்
தாரண-தாங்கெழில்
பார்த்திப-நிலவரையன்
விய-விரிமாண்பு
சர்வசித்த-முற்றறிவு
சர்வதாரி-முழுநிறைவு
விரோதி- தீர்பகை
விகிர்தி-வளமாற்றம்
கர-செய்நேர்த்தி



நந்தன-நற்குழவி
விசய-உயர்வாகை
சய-வாகை
மன்மத-காதன்மை
துன்முகி-வெம்முகம்
ஏவிளம்பி-பொற்றடை
விளம்பி-அட்டி



விகாரி-எழில்மாறல்
சார்வரி-வீறியெழல்
பிலவ-கீழறை
சுபகிருது-நற்செய்கை
சோபகிருது-மங்கலம்
குரோதி-பகைக்கேடு
விசுவாவசு-உலகநிறைவு
பராபவ-அருட்டோற்றம்
பிலவங்க-நச்சுப்புழை
கீலக-பிணைவிரகு
சவுமிய-அழகு
சாதாரண-பொதுநிலை
விரோதி கிருது-இகல்வீறு
பரிதாபி-கழிவிரக்கம்
பிரமாதீச-நற்றலைமை
ஆனந்த-பெருமகிழ்ச்சி
இராட்சச-பெருமறம்
நள- தாமரை
பீங்கள-பொன்ம
காளயுக்தி-கருமைவீச்சு
சித்தார்த்தி-முன்னியமுடிதல்
ரவுத்ரி-அழலி

துன்மதி-கொடுமதி
துந்துபி-பேரிகை
உருத்ரோத்காரி-ஒடுங்கி
இரக்தாட்சி-செம்மை
குரோதன்-எதிரேற்றம்
அட்சய-வளங்கலன்
செந்தமிழும், சிவநெறியும் தழைக்கட்டும்...



## ஜோக்ஸ்

ரவி! சாமிகிட்ட நல்ல அறிவை கொடுக்கணும்னு வேண்டிக்கொள்!
அப்பா உங்களுக்கு வேணும்னா நீங்களே சாமி கேட்க வேண்டிக்கறது தான! என்ன விட்டு ஏன் பா கேட்க சொல்றீங்க.

---

பாஸானா மிட்டாய் தருவாங்க! ஆனா உங்க பையன் ஃபெயிலானதுக்கு மிட்டாய் தரீங்களே! ஏன் சார்?
பாஸானா கம்ப்யூட்டர் வாங்கி தரேன்னு சொல்லிட்டேன். இப்ப அந்த பிரச்சனை இல்லை என்கிற சந்தோஷம் தான்.

---

இந்தக் கேள்வி ரொம்ப முக்கியமானது. தூக்கத்துல கேட்டா கூட பதில் சொல்லணும்.
சரி, நீங்க தூங்கும் போதா?
இல்ல நாங்க தூங்கும் போதா?



---

போருக்கு கிளம்பும் முன் மன்னர் எதற்கு டுடோரியல் காலேஜ் போகிறார்?
"இங்கே வந்தால் வெற்றி நிச்சயம்" என விளம்பரப்படுத்தி இருக்காங்களாம் அதான்.

---

நம் மன்னரை கோழையென்று எப்படி சொல்கிறாய்?
எதிரி நாட்டு மன்னன் போருக்கு வரச்சொல்லி ஓலை அனுப்பியதற்கு, நம் மன்னர் "பிப்ரவரி மாதம் 30-ஆம் தேதி போருக்கு வருவதாக பதில் ஓலை அனுப்பி இருக்கிறார்.







# பன்முகம்



## விக்கல் ஏற்பட என்ன காரணம்? விக்கலை நிறுத்துவது எப்படி?

கழுத்தருகில் ஏதாவது கட்டிகள் இருந்தாலும் விக்கல் ஏற்படும்.

தண்ணீரை வேகமாக குடிக்கலாம்.

மார்பையும் வயிற்றையும் இணைக்கும் பகுதி உதரவிதானம் (டயப்ரம்) எனப்படுகிறது. இது நம் வாழ்நாள் முழுவதும் விடாது செயல்படும் உறுப்பாகும். இது மூச்சு விடுவதற்கும், உணவு வயிற்றுக்கு செல்வதற்கும் துணை செய்கிறது. இந்த தசைப்பகுதி திடீரென விரிந்து சுருங்கும் போது விக்கல் ஏற்படுகிறது.

**காரணங்கள்**

ஜீரணக் கோளாறு, குறைந்த அளவு புரதச்சத்துள்ள உணவுகளை எடுப்பது, கொழுப்புச் சத்துள்ள உணவை அதிகமாக உட்கொள்வது, அதிக காரத்துடன் உணவை எடுத்துக் கொள்வது, மாவுப் பண்டங்கள் அதிகமாக சாப்பிடுவது, ருசியான சாப்பாடு என்று மூச்சு விடக் கூட முடியாதபடி அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது, வேகவேகமாக சாப்பிடுவது போன்றவற்றால் இந்த தசைப்பகுதி சுருங்கி விரிவதால் விக்கல் ஏற்படுகிறது.

கல்லீரல் வீக்கம், இரைப்பை வீக்கம், உணவுக் குழாய் பாதிப்பு, நுரையீரலின் அடிப்பாகத்தில் நீர் கோர்த்துக் கொள்ளுதல், சிறுநீரகச் செயலிழப்பு நோயாளிகளுக்கு ரத்தத்தில் ரசாயன கழிவுகள் வெளியேற்றப்படாமல் தேங்கும் பொழுது, கழுத்தருகில் ஏதாவது கட்டிகள் இருந்தாலும் விக்கல் ஏற்படும். ஏனெனில் பெர்னிக் என்னும் நரம்பு கழுத்து தண்டுவடத்திலிருந்து ஆரம்பித்து மார்புப் பகுதிக்குள் உதரவிதான தசை வரை வருகிறது.

கண் சிவத்தல், கண்ணீர் வருதல், தொண்டை வறட்சி மற்றும் தொடர்ந்து விக்கல் ஏற்படும் போது வேறு எதிலும் கவனம் செலுத்த முடியாமல் மன உளைச்சல் ஏற்படுவது உண்டு. தொடர்ச்சியாக விக்கல் இருந்தால் இது பல பிரச்சினைகளுக்கான எச்சரிக்கையாக இருப்பதால் மருத்துவரை சந்தித்து ஆலோசனை பெற வேண்டும்.

**விக்கலை தடுக்கும் முறைகள்:**

1) மூச்சு விடுவதை தற்காலிகமாக நிறுத்தும்போது விக்கல் நின்று விடும். இதனால் தான் மூச்சை இழுத்துப் பிடித்தாலோ, தம் பிடித்தாலோ விக்கல் சட்டென்று நின்று விடுகிறது.

2) தண்ணீரை வேகமாக குடிக்கலாம். தண்ணீர் குடிக்கும் போது நாம் மூச்சு விடுவதில்லை. அப்போது உதரவிதான தசை இயல்பாக சுருங்கி விரிவதால் விக்கலும் நின்றுவிடும்.

3) அதிர்ச்சியாக ஏதாவது பேசினால் நாம் திடீரென விக்கித்துப் போய்விடுவோம். அதன் பலனாகவும் விக்கல் நின்று விடும்.

4) சீரகம், திப்பிலி இரண்டையும் வறுத்து பொடி செய்து சிறிதளவு தேனில் சாப்பிட விக்கல் நின்று விடும்.



## குழந்தைகளின் பிடிவாதம்: பெற்றோர் பின்பற்ற வேண்டிய அணுகுமுறை!

குழந்தைகள் எத்தகைய குணாதிசயம், சுபாவம் கொண்டவர்களாக விளங்குகிறார்கள் என்பதை பெற்றோரின் வளர்ப்புமுறைதான் தீர்மானிக்கிறது. அவர்கள் எந்த அளவுக்கு பொறுப்புணர்வோடு பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்கிறார்கள் என்பதை பொறுத்துதான் அவர்களின் வாழ்க்கை பாதை கட்டமைக்கப்படுகிறது.

சின்ன விஷயங்களுக்கெல்லாம் பிள்ளைகள் பிடிவாதம் கொண்டவர்களாக இருப்பதற்கு பெற்றோரின் வளர்ப்பில் தென்படும் குறைபாடுகளே காரணமாக அமையும். அவை குறித்தும், அதனை தவிர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் பார்ப்போம்.

**குழந்தைகளை பாராட்டுவதில்லை**

குழந்தைகள் ஆர்வமாக செய்யும் விஷயங்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அவை மற்றவர்கள் கவனத்தை ஈர்ப்பதாக இருந்தாலோ, பாராட்டும்படியாக இருந்தாலோ மனதார வாழ்த்த வேண்டும். இன்னும் சிறப்பாக செயல்படும்படி ஊக்குவிக்க வேண்டும். அப்படி புகழ்ந்து பேசுவது அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும்.

'தாம் சிறப்பாக செயல்படுகிறோம்' என்று அவர்களும் தங்களை பற்றி பெருமை கொள்வார்கள். அப்படி அல்லாமல் குழந்தைகள் எது செய்தாலும் 'இதெல்லாம் ஒரு விஷயமா?' என்று பெற்றோர் சாதாரணமாக கடந்து செல்வது ஏற்புடையதாக இருக்காது. தாம் என்ன செய்தாலும் பெற்றோர் உற்சாகப்படுத்தமாட்டார்கள் என்ற மன நிலை பிள்ளைகளை ஆட்படுத்திவிடும்.

பெற்றோர் தம்மை மதிப்பதில்லை என்ற மனநிலைக்கும் வந்துவிடுவார்கள். அது பிடிவாத குணத்தை அவர்களுக்குள் விதைப்பதற்கு அடித்தளமாக மாற வாய்ப்பிருக்கிறது. அதற்கு இடம் கொடுக்காமல் குழந்தைகளின் செயல்பாடுகளை பெற்றோர் ஊக்குவித்து கொண்டாட வேண்டும்.

**மற்றவர்கள் முன்பு விமர்சனம் செய்தல்**

பிள்ளைகள் ஏதேனும் தவறு செய்தால் அதனை சுட்டிக்காட்டி திருத்துவது பெற்றோரின் கடமை. அதேவேளையில் அந்த தவறை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவதோ, அவர்கள் முன்பு திட்டுவதோ பிள்ளைகளுக்கு மனக்கஷ்டத்தை ஏற்படுத்தி விடும்.

அப்படி பிறர் முன்பு திட்டுவது அவர்களின் சுயமரியாதைக்கு பங்கம் விளைவித்துவிடும். பெற்றோரின் கருத்துக்கு மதிப்பு கொடுக்காமல் பிடிவாதம் கொண்டவர்களாக மாறுவதற்கு வித்திடக்கூடும்.

பெற்றோர் உச்சரிக்கும் எந்த வார்த்தையும் குழந்தைகளின் மனதை காயப்படுத்தும்படி அமைந்துவிடக்கூடாது. அவர்கள் செய்யும் தவறுகள் எதுவானாலும் அவர்களிடமே நேருக்கு நேர் பேசி அதனை சரி செய்வதற்கு முன்வர வேண்டும். அவ்வாறு அல்லாமல் கடுமையாக திட்டுவது மன ரீதியாக குழந்தைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும். பெற்றோர் என்ன செய்தாலும் தம்மை கண்டிப்பார்கள் என்ற எண்ணம் உருவாகி, வீண் பிடிவாதம் அவர்களுக்குள் எழ வழிவகுத்துவிடும்.

அதற்கு இடம் கொடுக்காமல் சிறு வயதிலேயே அவர்கள் செய்யும் தவறுகளை மென்மையான அணுகுமுறையுடன் சுட்டிக்காட்டி திருத்திக்கொள்வதற்கு வழிகாட்டினால் எதையும் சுமூகமாக எதிர்கொள்ளும் பக்குவம் கொண்ட பிள்ளைகளாக வளர்வார்கள். அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கும் அது நலம் சேர்க்கும்.

தன் நண்பர்களோ, உறவுகளோ தவறு செய்திருந்தாலும் அதனை அவர்கள் மனம் புண்படாதபடி திருத்திக்கொள்வதற்கு ஆலோசனை தரும் இடத்தில் இருப்பார்கள்.

**தக்க சமயத்தில் அறிவுரை வழங்காமல் இருத்தல்**

எந்தவொரு காரியத்தை குழந்தைகள் செய்வதாக இருந்தாலும் அவர்களுக்கு தக்க அறிவுரை கூற வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது. அந்த அறிவுரை அவர்கள் தொடங்கும் காரியத்தை சிறப்பாக முடிப்பதற்கு வழிகாட்ட வேண்டும்.

திட்டமிடுதல், இலக்கு நிர்ணயித்தல், எதிர்கொள்ளும் இடையூறுகளை சமாளித்தல் என எல்லா நிலையிலும் பிள்ளைகளுக்கு பின்புலமாக இருந்து செயல்பட வேண்டும். அப்படி செய்யாமல் அவர்களின் செயல்பாடுகளை குறை சொல்வது, 'நீ எது செய்தாலும் அது சிறப்பாக முடியாது' என்று மனம் நோகும்படி பேசுவது பெற்றோர் மீது தேவையற்ற அதிருப்தியை ஏற்படுத்தும்.

நம் உணர்வுகளை பெற்றோர் மதிப்பதில்லையே என்ற ஆதங்கம் பிள்ளைகளை பிடிவாத குணம் கொண்டவராக மாற்றக்கூடும்.

**அடிக்கடி தொந்தரவு செய்தல்**

பெற்றோர் ஏதேனும் ஒரு வேலையை பிள்ளைகளிடம் ஒப்படைத்தால் அதனை அவர்கள் நிறைவேற்றி கொடுக்கும் வரை பொறுமை காக்க வேண்டும். அந்த வேலை பற்றிய செயல்பாடுகளில் அவர்கள் கவனம் செலுத்துகிறார்களா? தொடர்ந்து ஆர்வமாக வேலையை தொடர்கிறார்களா? என்று கண்காணிக்கலாம்.

ஆனால் அவர்கள் செய்து கொண்டிருக்கும் வேலை மீது குறை சொல்லிக்கொண்டே இருப்பது, அடிக்கடி திருத்தம் சொல்லிக்கொண்டே இருப்பது, 'இப்படி செய்தால்தான் சரியாக இருக்கும்' என்று கருத்து கூறுவது, வேலையில் சிறு தவறு செய்தாலும் கண்டிப்பது போன்ற செயல்பாடுகள் பிள்ளைகளிடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தும்.

அந்த வேலை மீதான ஆர்வத்தை குறைக்கக்கூடும். எப்போதும் நம்மை குறைசொல்வதுதான் பெற்றோரின் மன நிலையாக இருக்கிறது என்ற நிலைப்பாட்டுக்கு வந்துவிடுவார்கள்.

அடுத்து பெற்றோர் சொல்லும் வேலையை பிடிவாதமாக மறுக்கும் மன நிலைக்கு ஆளாகக்கூடும். அதற்கு இடம் கொடுக்காமல் பிள்ளைகளை அரவணைத்து செல்ல வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது.

**நன்றி சொல்லாமல் இருத்தல்**

பிறர் நமக்கு செய்யும் உதவிகளுக்கு உடனடியாக நன்றி தெரிவிக்க வேண்டும். குழந்தைகள் வயதில் சிறியவர்களாக இருந்தாலும் அவர்கள் செய்து கொடுக்கும் வேலைக்கு நன்றி சொல்வதற்கு பெற்றோர் முன்வர வேண்டும்.

வயதில் சிறியவர்தானே நாம் எதற்கு நன்றி சொல்ல வேண்டும் என்ற எண்ணம் பெற்றோரிடத்தில் வெளிப்படக்கூடாது. நன்றி சொல்வதற்கு வயது பொருட்டல்ல.

செய்யும் வேலை, உதவியின் தன்மைக்கேற்ப நன்றி சொல்ல முன் வர வேண்டும். இந்த பழக்கத்தை குழந்தைகள் சிறு வயதிலேயே கற்றுக்கொள்வதற்கு பெற்றோரே 'ரோல் மாடலாக' இருக்க வேண்டும்.

அதைவிடுத்து 'இதெல்லாம் ஒரு வேலையா? இதை செய்ததற்கெல்லாம் நன்றி சொல்ல வேண்டுமா?' என்ற மனப்பான்மை உருவாகுவதற்கு பெற்றோர் காரணமாகிவிடக்கூடாது.

**ஒழுக்கத்தை கடைப்பிடித்தல்**

பெற்றோரின் நடத்தைகள் எப்படி இருக்குமோ அதனை பின்பற்றித்தான் பிள்ளைகள் வளர்வார்கள். அதனால் ஒழுக்கம் விஷயத்தில் பெற்றோர் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும்.

ஒழுக்கம் வாழ்வின் உயர்வுக்கு இன்றியமையாதது என்பதை சிறுவயது முதலே பிள்ளைகளுக்கு பெற்றோர் சொல்லிக்கொடுத்து வளர்க்க வேண்டும். அதுவே பின்னாளில் அவர்களை ஒழுக்க சீலர்களாக மாற்றும்.



## குறட்டை எப்படி ஏற்படுகிறது? குறட்டை வராமல் தடுக்கு முறைகள்

தூக்கத்தில் தொண்டையில் உள்ள தசைகள் தளர்வடைந்து மூச்சுக் குழாயின் உள்சுற்றளவு குறைகிறது. இந்த குறுகிய பாதையில் காற்று செல்லும்போது குறட்டை ஏற்படுகிறது. குறட்டையானது பெரும்பாலும் பாதிப்பில்லாதது என்றாலும், அது தூக்கத்தை சீர்குலைத்து பகல்நேர சோர்வு மற்றும் உயர் ரத்த அழுத்தம், இதய நோய், ரத்த சர்க்கரை அதிகரித்தல் போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

**குறட்டை ஏற்படுவதற்கு முக்கிய காரணம்:**

மரபணு காரணங்கள், உடல் பருமன், சளி, ஒவ்வாமை, சைனஸ் பிரச்சினைகளால் ஏற்படும் மூக்கடைப்பு, மூக்கு செப்டம் விலகல், சிறிய தாடை போன்ற முக கட்டமைப்பு காரணங்கள், தொண்டை சதை (டான்சில்) வீக்கம், மல்லாந்து படுத்து தூங்கும் பழக்கம் (இதில் நாக்கு பின்வாங்கி சுவாசபாதையை தடுக்கும்), தைராய்டு குறைபாடு, புகைப்பழக்கம், மது பழக்கம், இரவில் அதிக தூக்க மாத்திரை உட்கொள்ளுதல்.

நீரிழிவு நோயாளிகளில் 4 பேரில் ஒருவருக்கு தூக்கத்தில் குறட்டையால் மூச்சுத்திணறல் ஏற்படுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. நீரிழிவு நோயாளிகளுக்கு குறட்டை விடும் போது ஏற்படும் மூச்சுத்திணறல், குளுக்கோஸ் வளர்சிதை மாற்றத்தை உண்டாக்கி, இன்சுலின் எதிர்மறை நிலையை ஊக்குவிக்கிறது.

அது மட்டுமல்ல, குறட்டை விடும் போது சிலருக்கு ஏற்படும் மூச்சுத்திணறல், நுரையீரலுக்கு செல்லும் ஆக்சிஜன் அளவை குறைத்து, கார்டிசால் போன்ற ஹார்மோன் அளவை அதிகரிக்க செய்து, ரத்த சர்க்கரை அளவை உயர்த்துகிறது.



மேலும் குறட்டை விடும் பழக்கம் உள்ளவர்களுக்கு சர்க்கரை நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாவதாக பல்வேறு ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

**குறட்டை வராமல் தடுக்க சர்க்கரை நோயாளிகள் கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றலாம்.**

1) தினசரி உடற்பயிற்சி, நடைப்பயிற்சி மேற்கொண்டும், நார்ச்சத்து அதிகம் உள்ள காய்கறிகள், பழங்கள், முழு தானியங்கள் போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக்கொண்டும் ஆரோக்கியமான எடையை பராமரிக்க வேண்டும்.

2) புகைப் பழக்கம் மற்றும் மதுபழக்கத்தை விட்டொழிக்க வேண்டும்.

3) மூக்கடைப்பு பிரச்சினை உள்ளவர்கள் நாசி பாதைகளை திறக்க மற்றும் காற்றோட்டத்தை மேம்படுத்த நாசி டைலேட்டர்கள் அல்லது ஒவ்வாமை மருந்துகளை பயன்படுத்தலாம்.

4) போதுமான அளவு தண்ணீர் குடித்து நீரேற்றத்துடன் இருங்கள். ஏனெனில் நீரிழப்பு தொண்டை திசுக்களை வறட்சியடையச் செய்து குறட்டையை மோசமாக்கும்.

5) மல்லாக்க படுத்து தூங்காமல் பக்கவாட்டில் படுத்து தூங்க முயற்சி செய்ய வேண்டும்.

6) சற்று உயரமான தலையணையை பயன்படுத்துவது சுவாச பாதையை திறந்து வைத்து குறட்டையை குறைக்க உதவும்.

## காதில் இரைச்சல் ஏன் ஏற்படுகிறது தெரியுமா?




உங்களைச் சுற்றி எந்தவித சப்தமும் இல்லாதபோதும் உங்கள் காதிற்குள் மட்டும் உங்கள் இதயத்துடிப்பின் சப்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். இதை 'சீர்தாள துடிப்புக் காதிரைச்சல்' என்றும் அழைக்கலாம்.

இந்த சப்தம் ஒருபக்க காதிலோ அல்லது இருபக்க காதிலோ கேட்கலாம். சப்தம் காதிற்குள் அதுவாகவே ஏற்படும். பின் சில நிமிடங்களில் அதுவாகவே போய்விடும். சிலருக்கு தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கும். மொத்த ஜனத்தொகையில் சுமார் 15 சதவீதம் பேருக்கு இந்தபிரச்சினை இருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் அதிக சப்தத்தை ஒரே நேரத்தில் ஒரேயடியாக கேட்பது, அதிக ரத்த அழுத்தம் உள்ளவர்கள், கழுத்து, தலை போன்ற இடங்களிலுள்ள ரத்தக்குழாய்களில் வீக்கம், காதிற்குள் அதிக அளவில் மெழுகு சேருவது, தலை கழுத்துப் பகுதியில் கட்டிகள், வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களின் தொற்று, இதய நோயுள்ளவர்கள், நரம்பு மண்டலத்தில் ஏற்படும் நோய்கள், ஹைப்பர்தைராயிடிசம் பிரச்சினை உள்ளவர்கள், ரத்தசோகை உள்ளவர்கள், இதுபோக இன்னும் பல காரணங்கள் காதிரைச்சலை உண்டாக்குகின்றன.

பதற்றம், மனச்சோர்வு, மனக்கவலை, எரிச்சலூட்டும் செயல்கள், சரியான தூக்கமின்மை, காது கேட்கும் திறன் குறைந்து போதல், போக்குவரத்து நெரிசல் மற்றும் மிக அதிக சப்தம் உள்ள இடங்களில் அதிக நேரம் நிற்பது இவைகள் எல்லாம் கூட காதிரைச்சலை உண்டுபண்ணும். காதிரைச்சல் உள்ள பலருக்கு காது கேளாமையும் லேசாக இருக்கக்கூடும்.

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## பங்குனி மாதம் சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை, ஏப்.06:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் வட்டம் வேடந்தவாடி ஊராட்சியில் வேதமா என்னும் நகரில் அமைந்திருக் கும் ஸ்ரீ வேதநாதஈஸ்வரர் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு பங்குனி மாத சங்கடஹர சதுர்த்தி முன்னிட்டு சிறப்பு அபிஷேகம் பால், தயிர், அரிசிமாவு, அருகம்புல் பொடி, அபிஷேகப் பொடி, மஞ்சள், சந்தனம், விபூதி, பன்னீர்,i கங்கைநீர், தேன், கரும்பு சாறு, புனித கலச நீர் முதலிய சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ விநாயகர் பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஜயேந்திர நகர் விநாயகர் கோவிலில் நடைபெற்ற சீதா ராம கல்யாண மகோற்சவம்




அன்பின் ஆதாரமான பகவான் ஸ்ரீசத்ய சாய் பாபாவின் தெய்வீக அருளாலும் ஆசீர்வாதங்களாலும்,ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புகள் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பில் 2026 ஏப்ரல் 5-ஆம் தேதி ஜயேந்திர நகர், ஹெரிடேஜ் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஜய விஜய பஞ்சமுக விநாயகர் கோவில் வளாகத்தில் ஸ்ரீ சீதாராம கல்யாண மகோற்சவம் ஆன்மீக மகிழ்ச்சியுடன் சிறப்பாக நடைபெற்றது.

திருவிழா மகா பேரணியுடன் தொடங்கியது. இதில் அழகாக அலங்கரிக்கப்பட்ட பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா பிரும்மாண்ட படமும், ஸ்ரீ ராமர், சீதா மாதா, இலட்சுமணன், அஞ்சனேயர் விக்கிரகங்கள் ஆகியவற்றை, ஸ்ரீ சத்ய சாய் சமிதி, ஜயேந்திர நகர்-இலிருந்து, அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில், கோவிலை நோக்கி மிகுந்த பக்தி பூர்வமாக எடுத்துச் செல்லப்பட்டது. பேரணியில் பாலவிகாஸ் மாணவர்கள், மகிளா சேவாதள மற்றும் சேவாதள ஆண்கள் பங்கேற்று, பாரம்பரிய மங்கள வாத்தியம் ஒலிக்க, பக்தர்கள் முழுக்க வேத மந்திரங்கள் மற்றும் பஜனைகள் பாடி ஆன்மீக அலைபாய்ச்சலை உருவாக்கினர். கோவிலில் நடைபெற்ற ஸ்ரீ சீதா ராம கல்யாணம் மிகுந்த மரியாதையுடனும் வேத விதிகளுடனும் நடைபெற்றது. சுமார் 300-க்கும் மேற்பட்ட பக்தர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு தெய்வீக தம்பதிகளின் தெய்வீக கல்யாணத்தை தரிசிக்கப் பெற்றனர். நிகழ்வின் போது இசை நிகழ்ச்சிகளும் பக்தி பாடல்களும் சிறப்பாக இடம்பெற்று சூழலை இன்னும் ஆன்மீகமயமாக்கின.

இறுதியில் மகா மங்கள ஹாரத்தி அர்ப்பணிக்கப்பட்டு, அனைத்து பக்தர்களுக்கும் மஹா பிரசாதம் மற்றும் தாம்பூலம் வழங்கப்பட்டு விழா நிறைவடைந்தது. பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா போதித்த அன்பு, சேவை, தர்மம் ஆகிய மதிப்புகளின் ஒளியில், இந்த நிகழ்ச்சி பக்தர்களின் மனதில் நிலை கொண்ட ஒரு தெய்வீக அனுபவமாக அமைந்தது.

சாயிராம்.

## காட்பாடி ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவிலில் சங்கடஹர சதுர்த்தி விழா!



**வேலூர், ஏப்.06:** வேலூர் மாவட்டம், காட்பாடி வள்ளிமலை கூட்டுரோடு அருகில் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயிலில் ஏப்ரல் மாத சங்கடஹர சதுர்த்தி விழா நடந்தது.

இதையொட்டி ஸ்ரீவரசித்தி விநாயகருக்கு பல்வேறு வகையான திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. இதை தொடர்ந்து மலர் மாலை, வெட்டிவேர் மாலை, அருகம்புல் மாலை, பட்டுவஸ்திரம் அணிவித்து மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. அதையடுத்து சுவாமிக்கு தங்கக்கவசம் அணிவிக்கப்பட்டது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைகளை பிரம்மபுரம் ஜெயக்குமார் அர்ச்சகர் விமரிசையாக செய்திருந்தார்.



வரும் சட்டமன்ற தேர்தல்களுக்காக ஆர்கே நகர் 1 வது சர்க்கில் 39-A மற்றும் 40வது வட்ட தேர்தல் பணிமனை திறப்பு விழாவில் வடசென்னை கிழக்கு மாவட்ட முன்னாள் தலைவர் அண்ணன் Dhu-rairaj Thangavelu அவர்கள் தலைமையில் ஆர்கே நகர் 1வது சர்க்கிள் பொறுப்பாளர் அண்ணன் Mohan Kumar வட்ட தலைவர்கள் நியாஸ், சந்திரன் மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகளுடன் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீ ராம நவமி 9-ஆம் நாள் 10-ஆம் நாள் உற்சவம் சிறப்பு வழிபாடு



**சேலம், ஏப்.06:** சேலம் மாவட்டம் ஆத்தூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு 9-ஆம் நாள் உற்சவம் சீதா ராமன் பட்டாபி ஷேகமும், நம் வாசவி அம்மன் முத்தங்கி அலங்காரமும், 10-ஆம் நாள் கோ பூஜை தொடர்ந்து விஸ்வரூபம் தரிசனம், ஜெய் ஆஞ்சநேயர் உற்சவம், ஸ்ரீ ராமர் சீதா ஸ்ரீ லக்ஷ்மணன் திருவீதி உலா நடைபெற்றது. வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம் நெய் வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சீதா ராமர் பட்டாபிஷேகம் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர் திருவீதி உலாவும் வெகு சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பங்குனி மாதம் சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு



**திருவண்ணா மலை, ஏப்.06:** திருவண்ணா மலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் பேரூர் அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி உடனமர் சுந்தரேசுவரர் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வலம்புரி விநாயகருக்கு பங்குனி மாத சங்கடஹர சதுர்த்தி முன்னிட்டு சிறப்பு அபிஷேகம் பால், தயிர், அரிசிமாவு, அருகம்புல் பொடி, அபிஷேகப் பொடி, மஞ்சள், சந்தனம், விபூதி, பன்னீர்,i கங்கைநீர், தேன், கரும்பு சாறு, புனித கலச நீர் முதலிய பதிமூன்று வகை சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தேங்காய் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ வலம்புரி விநாயகர் வேண்டி அருள் பெற்றனர்.

அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சோழவந்தான் தொகுதியில் தமிழக வெற்றி கழகம் வேட்பாளர் எம். வீ. கருப்பையா வேட்புமனு



**வாடிப்பட்டி, ஏப்06:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்தில் சோழவந்தான் தொகுதி தமிழக வெற்றி கழக வேட்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ., எம்.வீ. கருப்பையா மற்றும் அவருக்கு மாற்றாக தாமோதரனும் வேட்புமனுவினை தேர்தல் நடத்தும் அதிகாரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அதிகாரி சண்முகவேலிடம் தாக்கல் செய்தனர். உடன் மாவட்டச் செயலாளர் விசால் கிருஷ்ணன் ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் தியாகராஜன், தாமோதரன், பேரூர் பொறுப்பாளர் பசுமணியன் ஆகியோர் வந்திருந் தனர். முன்னதாக ஏராளமான தொண்டர்களுடன் வாடிப்பட்டி பஸ் நிலையத்தில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து விட்டு ஊர்வலமாக புறப்பட்டு தாலுகா அலுவலகம் வந்தனர். வேட்பு மனு தாக்கல் செய்த பின் அதிகாரி வேட்பாளர் கருப்பையாவுக்கு மாலை அணிவித்து விசில் அடித்து ஆரவாரம் செய்தனர்.

## வடகரைபாஸ்கா நாளின் உயிர்ப்பு ஞாயிறு பெருவிழா



வடகரை,புதிதலூர்தன்னை ஆலயத்தில் யேசுவின் உயிர்ப்பு விழா திருப்பலி 4.6.2026 அன்று நள்ளிரவு, பெருந்திரனான பொது நிலையினர்களுடன் அருட்தந்தையர்களால் பக்தி விசுவாசத் துடன் நிறைவேற்றப் பட்டது.செய்தி: குடந்தை பரிபூரணன்.

## சென்னையில் ஸ்ரீ தர்ஷினி கலைக்கூடம் சார்பில் 21ஆம் ஆண்டு ஓவியர்களுக்கான தேசிய விருது வழங்கும் விழா



**சென்னை, ஏப்.06:** சென்னையில் ஸ்ரீ தர்ஷினி கலைக்கூடம் சார்பில் 21ஆம் ஆண்டு ஓவியர்களுக்கான தேசிய விருது வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. ஏப்ரல் 4, 2026 (சனிக்கிழமை) நடைபெற்ற இந்த நிகழ்ச்சி காலை 11.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெற்றது.

இந்த தேசிய அளவிலான கலை விழாவில், இந்தியாவின் 21 மாநிலங்களில் இருந்து 255-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்று தங்கள் படைப்புகளை வெளிப்படுத்தினர். கலை, கலாச்சாரம் மற்றும் இளம் திறமைகளை ஊக்குவிக்கும் நோக்கில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கண்காட்சியில் நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 260 ஓவியர்களின் மொத்தம் 350 ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இவ்வோவியங்களின் மொத்த மதிப்பு ரூ. 2 கோடியே 45 லட்சம் என தெரிவிக்கப்பட்டது.

மரபு, உயிர் மற்றும் நவீன ஓவியங்கள் உள்ளிட்ட பல்வேறு வகைகளில் நெய் வண்ணம், நீர் வண்ணம் மற்றும் கலவை ஓவியங்கள், தஞ்சாவூர் மற்றும் மைசூர் ஓவியங்கள், பழங்குடியின ஓவியங்கள் ஆகியவை இடம்பெற்றிருந்தன. இதனுடன் காகிதம், சுதை, உலோகம், மரம் மற்றும் கல் ஆகியவற்றில் செய்யப்பட்ட புடைப்பு சிற்பங்கள், பீங்கான் பொம்மைகள் உள்ளிட்ட பன்முகக் கலைப் படைப்புகளும் பார்வையாளர்களை கவர்ந்தன.

நிகழ்ச்சியில் முக்கிய விருந்தினர்களாக செவாலியர் டாக்டர் வி.ஜி. சந்தோஷம் (VGP குழும தலைவர்), டாக்டர் அவ்வை என். அருள் (தமிழ் வளர்ச்சி துறை இயக்குநர்), நக்கீரன் கோபால் (பத்திரிகையாளர் மற்றும் ஆசிரியர்), திரு. சக்தி பி. பாஸ்கரன் (நக்கீரர் தமிழ் சங்கம் இணை செயலாளர்) மற்றும் முன்னாள் துணை ஆட்சியர் ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நக்கீரன் கோபால் அவர்கள், ஓவியத் துறையில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தின் தாக்கம் மற்றும் இத்துறையில் உருவாகி வரும் தொழில் வாய்ப்புகள் குறித்து தனது கருத்துகளை பகிர்ந்தார்.

டாக்டர் அவ்வை என். அருள் அவர்கள் பேசுகையில், அரசின் சார்பிலும் கலை மற்றும் பண்பாட்டு துறை சார்பிலும், குறிப்பாக தமிழ் வளர்ச்சி துறை சார்பிலும் ஓவியத்துறைக்கு அதிகப்படியான முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். மேலும், தனது பள்ளிக் காலங்களில் ஓவியப் பாடம் முக்கியப் பாடமாக இருந்ததை நினைவு கூர்ந்தார்.

செவாலியர் டாக்டர் வி.ஜி. சந்தோஷம் அவர்கள், ஸ்ரீ தர்ஷினி கலைக்கூடத்திற்கு தனது வாழ்த்துகளை தெரிவித்தார். இந்த விழாவில் பல்வேறு கலைப் பிரிவுகளில் சிறந்து விளங்கிய கலைஞர்கள் பாராட்டப்பட்டு பொற்கிழியுடன் விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும், ஸ்ரீதர்ஷினி கலைக்கூடத்தின் நிறுவனர் திரு. தர்மலிங்கம் கலந்து கொண்டு நன்றி உரையாற்றினார். ஆண்டுதோறும் நடைபெறும் இந்த தேசிய விருது விழா, இந்திய கலை உலகில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என குறிப்பிடப்பட்டது.

## ரவுசு மணி

பசை போல்தான் பணமும் அது உன்னிடம் இருந்தால் உறவுகள் ஒட்டும் இல்லையேல் உதிரும்



ராஜகோபாலன்.J
பெங்களூரு

## "மாமன்னன் மகன் நான்... பார்த்து பேசுங்க" ராசிபுரத்தில் தவெக வேட்பாளர் லோகேஷ் தமிழ்செல்வன் அதிரடி



**இராசிபுரம், ஏப். 06:** நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில், ராசிபுரம் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு தவெக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுக கூட்டம் நடைபெற்றது.

தவெக கிழக்கு மாவட்ட செயலாளர் செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், வேட்பாளர் லோகேஷ் தமிழ்செல்வன் அறிமுகப்படுத்தப்பட்டார். 300-க்கும் மேற்பட்ட கட்சியினர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பேசிய லோகேஷ் தமிழ்செல்வன், "என்னை வேட்பாளராக அறிவித்த விஜய் அண்ணனுக்கு நன்றி. அவர் முதல்வராக வேண்டும் என்பதே என் இலக்கு" என்றார்.

அவர் தொடர்ந்து, "தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளது. கஞ்சா பிரச்சனை அதிகரித்து வருகிறது. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. ராசிபுரத்தில் 24 மணி நேரமும் பார் செயல்படுகிறது. இவை அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும்" என குற்றம்சாட்டினார்.

மேலும், "இந்த தொகுதியில் எம்எல்ஏ யார் என கேட்டால் வேறு பெயர்களை மக்கள் கூறுகிறார்கள். அதுவே தற்போதைய நிலையை காட்டுகிறது. நமக்கும் மதிவேந்தனுக்கும் தான் நேரடி போட்டி" என்றார்.

தனது குடும்ப சாதனைகளை எடுத்துரைத்த அவர், "போதமலைக்கு சாலை வசதி, பாதாள சாக்கடை, சாலை, பைபாஸ், ரேஷன் கடைகள் போன்ற பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தது என் தந்தை தான்" என தெரிவித்தார்.

பின்னர் பேச்சின் உச்சத்தில், "மாமன்னன் மகன் நான் நிற்கிறேன்; உங்க துனை முதல்வர் நடித்த கேரக்டர் தான் நான்... கொஞ்சம் பார்த்து பேசுங்க" என்று அரசியல் களம் சூடேற்றும் வகையில் பேசியது கூட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. இறுதியாக, "அடுத்த 15 நாட்களில் வீடு வீடாக சென்று ஆதரவு திரட்டுவோம். இந்த முறை தமிழ்நாட்டின் வண்ணமே மாறும்" என உறுதியளித்தார். கூட்டத்தில் பெண்கள் நடனம் ஆடி வேட்பாளருக்கு உற்சாகம் அளித்தனர்.

## வாடிப்பட்டி ஆரோக்கிய அன்னை திருத்தலத்தில் ஏசு உயிர்ப்பு ஈஸ்டர் பெருவிழா



**வாடிப்பட்டி, ஏப்.06:** இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன் உள்ள 40நாட்களை தவக்காலமாக கிறிஸ்துவர்கள் அனுசரிக்கின் றனர். அந்த நாட்களில் கிறிஸ்துவ ஆலயங்களில் சிலுவைப்பாதை வழிபாடு உள்பட பல்வேறு வழிபாடுகள் நடைபெறும். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட வெள்ளிக்கிழமை புனித வெள்ளியாக கடை பிடிக் கப்படும். அவர் 3வது நாள் உயிர்தெழுந்த ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் திருநாளாக கொண்டாடப் படும்.

அதன்படி மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் தென்மாவட்டங் களின் வேளாங்கண்ணி என்று கிறிஸ்துவமக்களால் அழைக்க ப்படும் சிறப்புமிக்க இயேசுவின் ஜுவநீருற்று அருமருந்து மூலம் பக்தர்களின் தீராதபிணிகளை தீர்த்து எண்ணியஎண்ணங்களை நிறைவேற்றும் ஆரோக்கிய அன் னை திருத்தலத்தில் புனித வெள் ளியையொட்டி புனிதவார சடங்குகள் வழிபாடுகள் 3நாட்கள் நடந்தது. முதல்நாள் புனித வியாழன் மாலை 6மணிக்கு ஆண்டவர் இயேசுவின் கடைசி இரவு உணவு திருப்பலியில், பாதம் கழுவும் சடங்கும் தொடர்ந்து நள்ளிரவு 12மணி வரை நற்கருணை ஆராதனையும் புனித வெள்ளியன்று காலை 7மணி முதல் மாலை 4மணிவரை நற்கருணை ஆராதனையும் சிறப்பு சிலுவைப்பாதைவழிபாடும் 6.00மணிக்கு புனிதவெள;ளி திருச்சடங்குகளும். புனித சனியன்று இரவு 11மணிக்கு பாஸ்கா திருவிழிப்பு திருச்சடங்குகள் மற்றும் திருப்பலியும் 12மணிக்கு இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பு வழிபாடும் இந்தூர் அருள் தந்தை சுரேஷ் தலைமையில் நடந்தது.

திருச்சி மறை மாவட்ட தந்தை அம்பு ரோஸ் மறையுரையாற்றினார். இதில் முன்னாள் மறைமாநில தலைவர் சாந்துராஜா, திரு தொண்டர்கள் கிளஸ்டிக்கஸ்டோ டிட்டோ பிரான்சிஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.5ந்தேதி ஞாயிறுகிழமை ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு ஈஸ்டர் பெருவிழாவையொட்டி அதிகாலை 6.30மணிக்கும், காலை 11மணிக் கும், மாலை 5மணிக்கும் சிறப்பு திருப்பலிகள் நடந்தது. இதில் மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், ராமநாதபுரம், கன்னியாகுமரி, நெல்லை, கேரளா உள்பட பல்வேறு இடங்களில் இருந்து

# சுற்றுலா: வால்பாறை அமைதி தேடுபவர்களுக்கான சொர்க்க பூமி!





மேற்கு தொடர்ச்சி மலையின் மடிப்புகளுக்கு மத்தியில் அடர்ந்த பசுமையான தேயிலை தோட்டங்கள் காப்பி தோட்டங்கள் சூழப்பட்டு அமைதியான நீல நிற நீர் தேக்கத்துடன் காணப்படுகிறது வால்பாறை பகுதி. கோவையிலிருந்து 100 கிலோமீட்டர் தொலைவிலும் பொள்ளாச்சியில் இருந்து அறுபது கிலோமீட்டர் தொலைவிலும் வால்பாறை உள்ளது. குறைந்த பட்ஜெட்டில் செல்லக்கூடிய சிறந்த மலை வாசஸ்தலமாகும். இயற்கையான சூழ்நிலை எங்கு பார்த்தாலும் கண்ணுக்கு குளிர்ச்சியான பகுதிகள் மாசுபடாத அமைதியான சூழ்நிலை என நம்மை அழைத்துச் செல்கிறது.

நீர்த்தேக்கம் மட்டுமல்ல இயற்கையான காட்சிகள் வனவிலங்கு சரணாலயம் போன்றவைநம்மை வரவேற்கிறது. வால்பாறை கடல் மட்டத்திலிருந்து 3500 அடி உயரத்தில் உள்ளது. ஆண்டு முழுவதும் இங்கு சுற்றுலாப் பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர்.

பொள்ளாச்சியில் இருந்து வால்பாறை செல்லும் 60 கிலோ மீட்டர் பகுதிகளில் எங்கு பார்த்தாலும் வளைந்து நெளிந்து செல்லும் பாதைகள் இருபுறமும் கண்ணை கவரும் இயற்கை காட்சிகள் இவற்றுடன் 40 கொண்டை ஊசி வளைவுகளை கொண்ட பாதைகள் என அனைத்தும் பிரம்மாண்டமாக உள்ளது. எங்கு பார்த்தாலும் தேயிலை தோட்டங்களும் காப்பி தோட்டங்களும் நிறைந்து காணப்படுகிறது.

மேகங்கள் தாழ்வாக இறங்கி நம்மை தொட்டு செல்கிறது. அதுவே ஒரு புதிய உலகத்தில் இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. வால்பாறை பகுதியில் ஏகப்பட்ட சுற்றுலா இடங்களை காணலாம்.

### ஆழியார் அணை

வால்பாறை அடிவாரத்தில் ஆழியார் அணை பறந்து விரிந்து காணப்படுகிறது. மூன்று புறமும் மலைகளால் சூழப்பட்டு அடர்ந்த வனப்பகுதியில் இந்த நீர்த்தேக்கம் பறந்து விரிந்து காணப்படுகிறது.

இங்குள்ள பூங்காக்களில் விதவிதமான வண்ணப்பூக்களை காணலாம். சிறுவர்களுக்கு பொழுதுபோக்காக ஒரு அழகிய பூங்கா உள்ளது. நீர்நிலைகளில் படகு சவாரி செய்யலாம். குரங்கு இனங்கள் பல வகையான பறவைகளை இங்கு பார்த்து மகிழலாம்.

### நல்ல முடி காட்சி முனை

அடர்ந்த தேயிலை தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளது. முக்கியமான சுற்றுலா இடமாக உள்ளது. இங்கிருந்து மிக உயரமான ஆனை முடி சிகரத்தை இங்கிருந்து காணலாம். அருகிலுள்ள நீர்வீழ்ச்சிகளையும் பார்த்து மகிழலாம்.

### சோலையார் அணை

ஆசியாவின் மிகப்பெரிய அணையாக இந்த அணை கருதப்படுகிறது. அடர்ந்த வனப்பகுதிக்குள் பறந்து விரிந்து காணப்படுகிறது. அணையின் மீது நடந்து செல்வது ஒரு புதிய அனுபவமாக இருக்கும். வனத்துறையுடன் அனுமதி பெற்று இந்த அணைக்கட்டு பகுதியை பார்வையிடலாம்.

### சின்னக்கல்லார் அருவி

தென்னிந்தியாவில் அதிக மழை பெய்யக்கூடிய இடமாக இந்த இடம் உள்ளது. கம்பீரமான அருவி அடர்ந்த வனப்பகுதிக்குள் உள்ளது. இங்குள்ள தொங்கு பாலத்தில் நின்று கொண்டு அருவியின் அழகை ரசிக்கலாம். இந்தப் பகுதி முழுவதும் ஈரப்பதத்துடன் காணப்படும். எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

### ஆனைமலை புலிகள் காப்பகம்

வால்பாறைக்கு அருகில் உள்ள அடர்ந்த வனப்பகுதிக்குள் இந்த காப்பகம் உள்ளது. வனவிலங்குகளுக்கு சொர்க்க பூமியாக இந்த இடம் அமைந்துள்ளது. சிங்கவால் குரங்கு புலி சிறுத்தை யானை காட்டெருமை மான் கரடி மற்றும் பறவை இனங்கள் நிறைய உள்ளன. வனத்துறை நடத்தும் சபாரி மூலம் இந்த இடத்தை சுற்றி பார்க்கலாம்.

### கருமலை பாலாஜி கோவில்

அமைதியான சூழ்நிலையில் அமைந்துள்ள மிகப் பழமையான கோவிலாக உள்ளது. இந்தக் கோவில் கட்டிடக்கலைக்கு பேர் போனது. ஆன்மீகவாதிகள் சுற்றுலாப் பயணிகள் இங்கு அமர்ந்து தியானம் செய்கின்றனர். மன அமைதிக்கு ஏற்ற அமைதியான சூழ்நிலையில் அமைந்துள்ளதால் மனதிற்கு புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

### தேயிலை மற்றும் காப்பி தோட்டம்

தேயிலை தோட்டங்கள் காப்பி தோட்டங்கள் நிறைந்து காணப்படுகிறது. இங்கு தேயிலை மற்றும் காப்பி தயாரிக்கும் முறையை கேட்டு தெரிந்து கொள்ளலாம். இந்த இடத்தில் நமக்கு சுவையான சூடான காப்பி டீ கிடைக்கிறது. சில இடங்களில் தங்கும் வசதிகள் உள்ளன.

## வேலைவாய்ப்பு கார்னர்

### துணை ராணுவப் படையில் உதவி காவல் ஆய்வாளர் பணி !

மத்திய அரசின்கீழ் செயல்படும் துணை ராணுவப் படையில் (எஸ்எஸ்பி) காலியாகவுள்ள உதவி காவல் ஆய்வாளர் , மருந்தாளுநர், அறுவை சிகிச்சை அரங்கு டெக்னீசியன் போன்ற பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் 20 ஆம் தேதிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதி: பிளஸ் 2 தேர்ச்சியுடன் Medical Imaging Technology, Radiography,Pharmacy, Operation Theatre Technology, Dental Hygienist பிரிவில் டிப்ளமோ தேர்ச்சியுடன் ஒரு ஆண்டு பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 20.4.2026 தேதியின்படி 18 முதல் 27-க்குள் இருக்க வேண்டும்.

உச்ச வயது வரம்பில் எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகள் சலுகை வழங்கப்படும் .

தேர்வு செய்யப்படும் முறை: PET, PST, CBT தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்த்தல் மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: ரூ. 100. இதனை ஆன்லைன் மூலம் செலுத்தவும். எஸ்சி, எஸ்டி, முன்னாள் ராணுவத்தினர், முன்னாள் ராணுவத்தினர், பெண்களுக்கு கட்டணம் செலுத்துவதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் முறை: https://ssb.gov.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 20.4.2026

# வாக்கு எண்ணும் மையங்களின் முன்னேற்பாடுகளை நாமக்கல் கலெக்டர் ஆய்வு

**நாமக்கல், ஏப்.6:**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, நாமக்கல் மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான துர்காமூர்த்தி ஆய்வு மேற்கொண்டார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்திற்கு உட்பட்ட எளையாம்பாளையம் விவேகானந்தா கல்வி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தை அவர் பார்வையிட்டார்.

அங்கு துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தி, தேர்தல் தொடர்பான அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ராசிபுரம், சேந்தமங்கலம், நாமக்கல், பரமத்தி வேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு ஏப்ரல் 23-ஆம் தேதி நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை மே 4-ஆம் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணும் மையத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படும் அறைகள், கண்காணிப்பு கேமராக்கள், காவல் கட்டுப்பாட்டு அறை, வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் தங்கும் வசதிகள், மின்சாரம், ஜெனரேட்டர், குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கலெக்டர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் சரவணன், துணை மாவட்ட தேர்தல் அலுவலர் கண்ணன், திருச்செங்கோடு தேர்தல் நடத்தும் அலுவலர் லெனின் உள்ளிட்ட துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கியாஸ் தட்டுப்பாடுக்கு மத்தியில் நாள் ஒன்றுக்கு 28 லட்சம் சமையல் கியாஸ் சிலிண்டர்கள் வினியோகம்: இந்தியன் ஆயில்

**சென்னை, ஏப்.6:**

போர்ப் பதற்றம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் நாள் ஒன்றுக்கு 25 லட்சம் சமையல் கியாஸ் சிலிண்டர்கள் வினியோகிக்கப்பட்டு வருவதாக இந்தியன் ஆயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்கு ஆசியாவில் ஈரான் உடனான இஸ்ரேல் ராணுவத்தின் போரில் அமெரிக்கா தலையிட்டு பயங்கர தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு பதிலடியாக வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், எண்ணெய் கிணறுகள் ஆகியவற்றை குறி வைத்து ஈரான் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

மேலும் இந்தியாவின் 80% கச்சா எண்ணெய் கொண்டுச் செல்ல பயன்படும் முக்கிய போக்குவரத்து தடமான ஹார்முஸ் நீரிணைனய ஈரான் ராணுவம் மூடியது. இதனால் போர்ப்பதற்றம் அதிகரித்து இந்தியா மட்டுமின்றி உலகளவில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே நாட்டின் எரிபொருள் மற்றும் கியாஸ் வினியோகம் சீராக உள்ளதாக முன்னணி பொதுத்துறை எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் தகவல் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "உலகளாவிய எரிசக்தி சந்தைகளில் நிலவும் அரசியல் பதற்றங்கள் இருந்தாலும், இந்தியாவின் சமையல் கியாஸ் சிலிண்டர் வினியோகம் நிலையாகவும், போதுமானதாகவும் உள்ளது.

இது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. உள்நாட்டு வினியோகம் உயர்ந்த முன்னுரிமையுடன் நடைபெறுகிறது. தற்போது தினமும் 28 லட்சம் கியாஸ் சிலிண்டர்கள் வினியோகிக்கப்படுகின்றன. இது தற்போதைய பதற்றங்களுக்கு முன்பிருந்த சாதாரண அளவுடன் ஒத்ததாகும். வீடுகளுக்கு தடையற்ற வினியோகம் நடைபெற்று வருகிறது" என்று கூறப்பட்டுள்ளது.

சமையல் கியாஸ் வினியோகஸ்தர்களிடையே நடைபெறும் கள்ளச்சந்தை மற்றும் குவிப்பு தடுப்பதற்காக பல்வேறு துறைகளை சேர்ந்த குழுக்கள் திடீர் சோதனைகள் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நாடு முழுவதும் 68 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டு 141 டீலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும். 855 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், 48 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டில் கியாஸ் தட்டுப்பாடு இல்லை எனவும், வாடிக்கையாளர்கள் பீதியால் முன்பதிவு செய்யவோ, சிலிண்டர்களை சேமித்து வைக்கவோ வேண்டாம். வினியோக நிலையங்களில் வரிசையில் நிற்க தேவையில்லை. வதந்திகளை நம்பாமல், அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே நம்புங்கள் என்று நிறுவனம்கேட்டுக்கொண்டுள்ளது.

## கூரைமேல் அமைக்கப்படும் சூரிய மின்சார கட்டமைப்பு தேவை கோவையில் அதிகரிப்பு: நிறுவனங்கள் ஆலோசனை



**கோவை, ஏப். 6:**

கோவையில் கூரைமேல் (ரூப்டாப்) சூரிய மின்சார அமைப்புகளுக்கான தேவை அதிகரித்து வரும் நிலையில், சோலார் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அவாடா எலக்ட்ரோ நிறுவனம் ஏற்பாடு செய்த இந்தக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் முன்னணி ஈபிசி நிறுவனங்கள், கூரைமேல் பொருத்துநர்கள் மற்றும் சேனல் பார்ட்னர்கள் கலந்து கொண்டனர். பரவலாக்கப்பட்ட சூரிய ஆற்றல் துறையில் சந்தையை விரிவுபடுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

குடியிருப்பு மற்றும் வணிகக் கட்டிடங்களில் சூரியமின்சார பயன்பாடு அதிகரித்து வருவதால், பொருத்துநர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடன் இணைப்பை வலுப்படுத்துவது அவசியம் எனக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தயாரிப்புகளின் கிடைப்புத்தன்மையை மேம்படுத்துவது மற்றும் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வது முக்கிய நோக்கங்களாகக் கூறப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், 720 டபள்யூபி திறன் கொண்ட N-வகை டாப்கான் சூரிய மாட்யூல் அறிமுகப்படுத்தப்பட்டது. உயர் திறன் மற்றும் செலவு போட்டித்தன்மை ஆகிய அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

தற்போது 8.50 ஜிகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அவாட எலக்ட்ரோ நிறுவனம், நாக்பூர் மற்றும் தாத்ரி (உத்தரப் பிரதேசம்) ஆகிய இடங்களில் தனது உற்பத்தி நிலையங்களை இயக்கி வருகிறது. தானியங்கு உற்பத்தி வசதிகளின் மூலம், குறைந்த சுழற்சி நேரத்தில் அதிக உற்பத்தி திறனை நிறுவனம் அடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. மேலும், நிறுவனத்தின் மாட்யூல்கள் ஏஎல்எம்எம் பட்டியலில் இடம்பெற்றதுடன், பிஐஎஸ், ஐஇசி, யுஎல் உள்ளிட்ட தரச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளன. இது, பெரிய அளவிலான சூரிய மின் திட்டங்கள் முதல் கூரைமேல் அமைப்புகள் வரை பயன்படுத்துவதற்கான நம்பகத்தன்மையை உறுதி செய்கிறது.

கூட்டத்தில் பேசிய நிறுவனத்தின் தலைவர் மற்றும் முழுநேர இயக்குநர் வினீத் மிட்டல், "இந்தியாவில் சூரிய மின்சார வளர்ச்சி கூரைமேல் மற்றும் பகிர்ந்தளிப்பு துறைகளால் முன்னெடுக்கப்படுகிறது. உள்நாட்டில் தயாரிக்கப்படும் உயர் திறன் மாட்யூல்களை எளிதாகக் கிடைக்கச் செய்வதற்காக பிராந்திய சேனல் கூட்டாண்மைகளை வலுப்படுத்துவது அவசியம்," என்றார்.

இந்த நிகழ்வில் மாட்யூல் ஒருங்கிணைப்பு, பொருத்துதல் திறன், உத்தரவாதம் மற்றும் விநியோக நம்பகத்தன்மை குறித்து தொழில்நுட்ப விவாதங்களும் நடைபெற்றன.

இந்தியா எரிசக்தி சுயமரியாதையை நோக்கி முன்னேறும் நிலையில், கூரைமேல் சூரிய மின்சாரத் துறையில் தனது பங்கினை விரிவுபடுத்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# உள்கட்சி விவகாரத்தை ஒதுக்கிவிட்டு உழைக்க வேண்டும்: காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர்



**சென்னை, ஏப்.6:**

காங்கிரஸ் வேட்பாளர் பட்டியில் வெளியான நிலையில் எம்.பி. மாணிக்கம் தாகூர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளதாவது:

மத்திய தேர்தல் குழு என்பது காங்கிரஸ் கட்சியின் உயர்ந்த முடிவு எடுக்கும் அமைப்பாகும். பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு, விரிவான விவாதத்தில் பங்கேற்க உறுப்பினர்கள் கருத்துகளை கேட்டு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் தலைமையில், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் முன்னிலையில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. தமிழ்நாடு தேர்தல் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பொறுப்பிலிருந்து மாணிக்கம் தாகூர் விலகினார்.

பதவி விலகல் கடிதத்தை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்களுக்கு அனுப்பியுள்ளார்.காங்கிரஸ் வேட்பாளர்கள் தேர்வில் குழப்பம் நீடிக்கும் நிலையில், தனது விலகல் குறித்து மாணிக்கம் தாகூர் விரைவில் விளக்கம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

அமித் ஷா அதிமுகவை 2019, 2021, 2024 என்று மூன்று முறை தோற்கடித்து போல இந்த முறை மீண்டும் தோற்கடிக்க வேண்டும். வாங்க மற்ற பிரச்னைகளை அடுத்து மாதம் வரை தள்ளி வைப்போம். கடமைக்கு கட்டுப்பட்ட ஒழுக்கமான படைவீரர்களாக, நாம் அனைவரும் ஒன்றுபட்டு எதிரிகளை எதிர்த்து போராட வேண்டும். நேருவின், அறிஞர் அண்ணாவின் வாரிசுகள் நாம் வீழ்ந்தால் கோட்சேவின் வாரிசுகள் வெற்றி பெறுவார்கள். 200 இடங்களை வெல்லும் இலக்குடன் ஒற்றுமையாக செயல்படுவோம். மீண்டும் வெற்றி பெறுவோம் எனக் குறிப்பிட்டுள்ளார் மாணிக்கம் தாகூர்.

# சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் பெண்களை அனுமதிக்கும் விவகாரம்: உச்சநீதிமன்றத்தில் நாளை விசாரணை

**புதுடெல்லி, ஏப்.6:**

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் பெண்களை அனுமதிப்பது உள்பட மத வழிபாட்டு தலங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் குறித்து உச்சநீதிமன்றத்தின் 9 நீதிபதிகள் அரசியல் சாசன அமா்வு வருகின்ற செவ்வாய்க்கிழமை (ஏப்.7) விசாரிக்கவுள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் சிறுமிகள், மூதாட்டிகள் மட்டும் வழிபாடு செய்ய அனுமதிக்கப்பட்டு வருகிறது. மாதவிடாய் பருவ பெண்கள் வழிபாடு நடத்த அனுமதிக்கப்படுவதில்லை.

கடந்த 2018-ஆம் ஆண்டில் இதுதொடா்பான மனுவை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அரசியல் சாசன அமா்வு, 4:1 என்ற பெரும்பான்மையில் அனைத்து வயது பெண்களும் சபரிமலை கோயிலில் வழிபாடு நடத்த அனுமதித்து தீா்ப்பளித்தது.



அதன் பிறகு 2019, நவம்பா் 14-ஆம் தேதி அப்போதைய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலான 5 நீதிபதிகள் அரசியல் சாசன அமா்வு, சபரிமலை ஐயப்பன் கோயில், மசூதிக்கள் மற்றும் பாா்ஸி மத வழிபாட்டுத் தலங்களில் பெண்களுக்கு அனுமதி மறுப்பு என வழிபாட்டுத் தலங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளைச் சுட்டிக்காட்டியது.

அப்போது ஒரு விவகாரத்தின் அடிப்படையில் மட்டுமே பல்வேறு மதங்களில் பெண்களின் சுதந்திரத்துக்கு எதிரான நடைமுறைகள் குறித்து முடிவுகளை மேற்கொள்ள முடியாது என 3:2 என்ற பெரும்பான்மையில் நீதிபதிகள் கூறினா். இதைத் தொடா்ந்து மத வழிபாட்டுத் தலங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை 5 நீதிபதிகளுக்கும் மேற்பட்ட அரசியல் சாசன அமா்வு விசாரிக்க அவா்கள் பரிந்துரைத்தனா்.

இதையடுத்து, சபரிமலை விவகாரம் தொடா்பாக தனது மறுஆய்வு அதிகாரத்தைப் பயன்படுத்தி விசாரணை மேற்கொண்ட 5 நீதிபதிகள் அரசியல் சாசன அமா்வு, மீண்டும் அதிக நீதிபதிகளைக் கொண்ட அரசியல் சாசன அமா்வுக்கு பரிந்துரைப்பதாக 2020, மே 11-ஆம் தேதி தெரிவித்தது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடா்பாக ஏப்.7-ஆம் தேதி இறுதி விசாரணையை தொடங்குவதாக உச்சநீதிமன்றம் கடந்த பிப்.16-ஆம் தேதி தெரிவித்தது. ஏப்.22-ஆம் தேதியுடன் விசாரணை நிறைவடையும் என எதிா்பாா்க்கப்படுகிறது.

# க்ரைம் கார்னர்

## இயற்கை உபாதை கழிக்க சென்ற இளம்பெண்ணுக்கு புதருக்குள் நேர்ந்த கொடூரம்...

**பெங்களூரு, ஏப்.6:**

கர்நடக மாநிலம் யாதகிரி அருகே ஒரு கிராமத்தில் 25 வயது இளம்பெண் வசித்து வருகிறார். இந்த நிலையில் சம்பவத்தன்று மாலை அந்த இளம்பெண், கிராமத்தின் அருகே மறைவான இடத்துக்கு இயற்கை உபாதை கழிக்க சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த அதே கிராமத்தை சேர்ந்த பசப்பா நிங்கப்பா (வயது 25). ரமேசப்பா (30) ஆகிய 2 பேரும் அங்கு வந்துள்ளனர். பின்னர் அவர்கள் இளம்பெண்ணை வாயை பொத்தி புதருக்குள் தூக்கி சென்று மாறி, மாறி கூட்டு பலாத்காரம் செய்ததாக தெரிகிறது. மேலும் இதுபற்றி வெளியே யாரிடமும் கூறினால் கொலை செய்து விடுவதாக மிரட்டி உள்ளனர். ஆனாலும் அந்த இளம்பெண், இதுபற்றி தனது பெற்றோரிடம் கூறி கதறி அழுதுள்ளார். இதனை கேட்டு அதிர்ச்சி அடைந்த அவர்கள், இதுபற்றி யாதகிரி மகளிர் போலீசில் புகார் அளித்தனர். இதையடுத்து போலீசார், இளம்பெண்ணை அரசு ஆஸ்பத் திரியில் அனுமதித்து மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர். அப்போது இளம்பெண் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டது உறுதியானது. இதையடுத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தலைமறைவாக இருந்த பசப்பா, ரமேசப்பா ஆகிய 2 பேரையும் கைது செய்த னர். பின்னர் அவர்கள் 2 பேரையும் போலீசார் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## இரட்டை பெண் குழந்தைகளை கிணற்றில் தள்ளி கொன்ற தந்தை கைது

**ஹைதராபாத், ஏப்.6:**

தெலுங்கானா மாநிலம், கரீம்நகர் மாவட்டம், ஜூப்ளிநகரை சேர்ந்தவர் ஸ்ரீசைலம். இவரது மனைவி மவுனிகா. இவர்களுக்கு கீதான்ஸ்ரீ (வயது 4), கீதான்விகா(4) என்ற இரட்டை பெண் குழந்தைகள் இருந்தனர். பெண் குழந்தைகள் பிறந்ததை காரணம் காட்டி ஸ்ரீசைலம் தனது மனைவியுடன் அடிக்கடி தகராறு செய்து வந்தார். கடந்த வெள்ளிக்கிழமை மதியம் குழந்தைகளை விவசாய நிலத்திற்கு அழைத்துச் செல்வதாக கூறி ஸ்ரீசைலம் வீட்டிலிருந்து வெளியேறினார். நீண்ட நேரமாகியும் திரும்ப வராததால் சந்தேகமடைந்த மவுனிகா அங்கு சென்றார். அப்போது குழந்தைகள் குறித்து கேட்டபோது, விளையாடிக் கொண்டிருந்தபோது கிணற்றில் தவறிவிழுந்ததாக அவர் கூறினார். இதனையடுத்து தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் தேடி குழந்தைகளின் உடல்களை மீட்டனர். போலீஸ் விசாரணையில், குழந்தைகளை கிணற்றில் தள்ளி இந்த கொடூரச் செயலை செய்ததாக ஸ்ரீசைலம் ஒப்புக் கொண்டார். இதனையடுத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

## ஏடிஎம் மையத்தில் வயதானவர்களிடம் பண மோசடி செய்த ஆந்திர இளைஞர் கைது

**சென்னை, ஏப்.6:**

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பார்வைத்திறனற்ற மாற்றுத் திறனாளி பாண்டியன் (61). இவர் வேலை நிமித்தமாக சென்னை வந்து கடந்த 31-ம் தேதி சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள வங்கி ஏடிஎம் மையத்தில் பணம் எடுக்கச் சென்றார். அப்போது அங்கு வந்த நபர் ஒருவர் பாண்டியனிடம் பணம் எடுக்க உதவி செய்வதாகக் கூறி ஏடிஎம் கார்டு மற்றும் பின் நம்பரை வாங்கி ஏடிஎம் இயந்திரத்தில் போட்டுவிட்டு, பணம் இல்லை என்று கூறி அவரை ஏமாற்றி, மறைத்து வைத்திருந்த மற்றொரு ஏடிஎம் கார்டை கொடுத்து அனுப்பியுள்ளார். பின்னர் அந்த நபர் பாண்டியனின் ஏடிஎம் கார்டை அருகில் உள்ள வேறு ஏடிஎம் மையத்தில் பயன்படுத்தி ரூ.23,500-ஐ எடுத்த போது, பாண்டியனின் செல்போனுக்கு குறுஞ்செய்தி வந்தது. இதையறிந்து அதிர்ச்சி அடைந்த அவர் இந்த விவகாரம் தொடர்பாக அண்ணாசதுக்கம் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல் கட்டமாக வங்கி ஏடிஎம் மையத்தில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். இதில் முதியவரை ஏமாற்றி அவரது ஏடிஎம் கார்டை பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபட்டது ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த சிடாதாலா சுனில் (27) என்பது தெரிந்தது. தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் கைது செய்தனர்.

# விளையாட்டு செய்திகள்

## ஸ்ரேயஸ் ஐயருக்கு ரூ.24 லட்சம் அபராதம்

**சென்னை, ஏப்.6:**

பந்துவீச கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டதற்காக பஞ்சாப் கிங்ஸ் அணியின் கேப்டன் ஸ்ரேயஸ் ஐயருக்கு ரூ.24 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் (சிஎஸ்கே), பஞ்சாப் அணிகள் மோதின. முதலில் சிஎஸ்கே அணி பேட்டிங் செய்தது. அப்போது 20 ஓவர்களை வீசி முடிக்க பஞ்சாப் அணி கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டது.

ஐபிஎல் விதிமுறைகளின்படி, ஓர் அணி தங்களது 20 ஓவர்களை குறிப்பிட்ட நேரத்துக்குள் வீசி முடிக்க வேண்டும். ஆனால், சிஎஸ்கே அணிக்கு எதிரான இந்த போட்டியில் பந்துவீச பஞ்சாப் அணி 2 மணி நேரத்துக்கும் மேல் எடுத்துக்கொண்டது. ஐபிஎல் நடத்தை விதிமுறை 2.22-ன் கீழ், 'ஸ்லோ ஓவர் ரேட்' எனப்படும் குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்காத குற்றத்துக்காக கேப்டன் ஷ்ரேயஸ் ஐயருக்கு பிசிசிஐ தரப்பில் இருந்து ரூ.24 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அணியின் மற்ற வீரர்களுக்கு (பிளேயிங் லெவன் மற்றும் இம்பேக்ட் பிளேயர் உட்பட) தலா ரூ.6 லட்சம் அல்லது அவர்களின் போட்டி ஊதியத்தின் 25 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இதில் எது குறைவோ அதனை அபராதமாக செலுத்த வேண்டும். இந்த சீசனில் இது பஞ்சாப் அணியின் இரண்டாவது மெதுவான பந்து வீச்சு என்பதால் அதிக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## ஆசிய குத்துச்சண்டை: இந்திய வீரர் அரையிறுதிக்கு முன்னேற்றம்

**உலான்பத்தார், ஏப்.6:**

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி மங்கோலியா தலைநகர் உலான்பத்தாரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த ஆண்களுக்கான 50 கிலோ எடைப்பிரிவின் காலிஇறுதியில் இந்திய வீரரான சென்னையை சேர்ந்த விஸ்வநாத் சுரேஷ் 5-0 என்ற கணக்கில் உலக சாம்பியனும், நம்பர் ஒன் வீரருமான சஞ்சார் தாஷ்கென்பாவை (கஜகஸ்தானை) வீழ்த்தி அரையிIIறுதிக்கு முன் னேறி பதக்கத்தை உறுதி செய்தார்.

90 கிலோ வுக்கு மேற்பட்ட எடைப்பிரிவில் இந்திய வீரர் நரேந்தர் அரைஇறுதியை எட்டினார். மற்றொரு இந்திய வீரர் ஆதித்யா (65 கிலோ) தோல்வி கண்டு வெளியேறினார்.

## உலக பாரா வில்வித்தை: இந்திய வீராங்கனை சாம்பியன்

**பாங்காக், ஏப். 6:**

உலக பாரா வில்வித்தை தொடர் தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் நடந்து வந்தது. இதில் காம்பவுண்ட் பெண்கள் தனிநபர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் 18 வயது இந்திய வீராங் கனை பாயல் நாக், உலக சாம்பியனும், நம்பர் ஒன் வீராங்கனையுமான சக நாட்டவரான ஷீத்தல் தேவியை சந்தித்தார்.

பாயல் நாக் 139-136 என்ற புள்ளி கணக்கில் ஷீத்தல் தேவிக்கு அதிர்ச்சி அளித்து தங் கப்பதக்கத்தை தனதாக்கினார்.

# விஜய்க்கு கூடும் கூட்டம் ஓட்டாக மாறாது: நயினார் நாகேந்திரன்

**சென்னை, ஏப்.6:**

விஜய்க்கு கூடும் கூட்டம் ஓட்டாக மாறாது என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழக தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் நெல்லையில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், பாஜக தேர்தல் அறிக்கை இரண்டு நாள்களில் வெளியிடப்படும். காங்கிரஸ் கூட்டணியில் சலசலப்பு இருக்கிறது. சலசலப்புக்கு மத்தியில்தான் காங்கிரஸ், கூட்டணியில் சேர்ந்துள்ளது. மாணிக்கம் தாகூர் மற்றும் மூத்த தலைவர்கள் விருப்பமில்லாமல் திமுக கூட்டணியில் இருக்கின்றனர்.



விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் தொகுதியில் இருந்து வெளியே வந்திருப்பதும் கூட்டணியில் சலசலப்பைக் காட்டுகிறது. திமுக தேர்தல் அறிக்கை ஹீரா என்று கூறினார்கள், அது ஒரு ஜீரோ அறிக்கை. அது ஹீரோயின் என்றும் சொன்னார்கள், அது ஹெராயின் அறிக்கையாகத் தான் நான் பார்க்கின்றேன். தமிழ்நாடு முழுக்க கஞ்சா உற்பத்தியை கஞ்சா புழக்கத்தை உருவாக்கிய கட்சி திமுக கட்சி.

சொத்து வரி உயர்வு, மின் கட்டணம் உயர்வு ஏற்பட்டுள்ளது. பொய்யான வாக்குறுதியை திமுக கொடுத்துள்ளார்கள். ஐந்து ஆண்டுகால ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சரியில்லை. இரண்டு வயது குழந்தை முதல் 70 வயது பெண்கள் வரை பாலியல் பலாத்காரம் படுகொலைகள் நடைபெறுகின்றன. அனைத்திற்கும் மது போதை பழக்கம் தான் காரணம். முழுக்க முழுக்க திமுக அரசு தான் இதற்கு காரணம். வரும் 23ஆம் தேதி அதற்கான பதில் நிச்சயம் தெரியும். பிரதமர் கன்னியாகுமரிக்கும் கோயம்புத்தூருக்கும் பிரசாரத்துக்கு வர இருக்கிறார். நடிகர் விஜய்க்கு கூடும் கூட்டத்திற்கு ஓட்டுக்கும் சம்பந்தமில்லை. அவர் ஒரு சினிமா நடிகர்.

தேர்தல் முடிந்த பிறகு அதற்கான விளக்கம் தெரியும். நாளை 12 மணிக்கு சாத்தூரில் வேட்புமனு தாக்கல் செய்கிறேன். நாளை மகாராஷ்டிர முதல்வர் ஃபட்னாவிஸ் என்னுடன் மனுத்தாக்கலுக்கு வருகிறார். மத்திய அமைச்சர்கள் பிரசாரத்திற்கு வரும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றார்.

# சேலம் மத்திய சிறையில் செல்போன்,சார்ஜர் பறிமுதல்: இருவர் மீது வழக்குப்பதிவு

**சேலம், ஏப்.6:**

சேலம் மாவட்டம் மத்திய சிறையில் தண்டனை மற்றும் விசாரணை கைதிகள் என 1,300-க்கும் மேற்பட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சில கைதிகள் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள், செல்போன்களை ரகசியமாக பயன்படுத்தி வருகின்றனர். இதனால் சிறை அதிகாரிகள், சிறப்பு சோதனை குழுவினர் அவ்வப்போது கைதிகளின் அறைகளில் சோதனை நடத்தி செல்போன், சார்ஜர், சிம்கார்டு போன்றவற்றை பறிமுதல் செய்து வருகின்றனர்.



இந்த நிலையில், நேற்று முன்தினம் சேலம் மத்திய சிறையின் 9-வது பிளாக்கில் அடைக்கப்பட்டுள்ள சென்னை கஞ்சா வழக்கு கைதிகளான கருப்புசாமி, ஹேமநாதன் ஆகியோரின் அறைகளில் சிறை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது அந்த கைதிகள் பயன்படுத்தி வந்த செல்போன், சார்ஜர் சிக்கின. அதனை அதிகாரிகள் பறிமுதல் செய்து விசாரணை நடத்தினர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு சென்னை சோழவரம், மீஞ்சூர் போலீஸ் நிலையங்களில் கஞ்சா வழக்கில் கைதாகி சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்ட இருவரும் வழக்கு தொடர்பாக கோர்ட்டில் ஆஜராக சென்று வந்தபோது செல்போன், சார்ஜரை கடத்தி வந்திருக்கலாம் என தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக சிறை அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே இந்த செல்போன், சார்ஜர் பறிமுதல் குறித்து அஸ்தம்பட்டி போலீசில் ஜெயிலர் சிவானந்தம் புகார் செய்தார். அதன்பேரில் சப்-இன்ஸ்பெக்டர் ரவி தலைமையிலான போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். தொடர்ந்து அவர்கள் சிறையில் இருக்கும் நிலையிலேயே இந்த வழக்கிலும் கைது செய்து மேல்நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தமிழகத்தில் உச்சம் தொட்ட மின்சார பயன்பாடு: ஒரே நாளில் 43.47 கோடி யூனிட் நுகர்வு

**சென்னை, ஏப்.6:**

தமிழகத்தில் வழக்கமாக ஏப்ரல் கடைசி மற்றும் மே மாதங்களில் மின்சார பயன்பாடு அதிகமாக இருக்கும். அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் கொளுத்தும் என்பதால், மக்கள் வெயிலின் தாக்கத்தில் இருந்துதப்பிக்க மின்விசிறிகள் மற்றும் ஏசிகளை அதிகம் பயன்படுத்துவார்கள். மின்விசிறிகள் 24 மணி நேரமும் நிற்காமல் இயங்கும் அளவிற்கு அதன் பயன்பாடு அதிகரிக்கும். இதனால் மின் நுகர்வும் அதிகரிக்கும்.

ஆனால் நடப்பு ஆண்டில் ஏப்ரல் மாதத்திலேயே மின்சார பயன்பாடு அதிகரித்துள்ளது. அதாவது, தமிழக மின் நுகர்வு நேற்று முன்தினம் 43.47 கோடி யூனிட்களாக உயர்ந்துள்ளது. இது நடப்பு ஆண்டில் பதிவான அதிகபட்ச அளவாகும்.

மாநிலம் முழுவதும் ஒரு நாள் பயன்படுத்தப்படும் மின்சார அளவு 'மின் நுகர்வு' எனப்படுகிறது. இது தமிழகத்தில் தினசரி சராசரியாக 30 கோடி யூனிட்களாக உள்ளது. கோடைக்கால தொடக்கத்திலேயே வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், வீடுகள் மற்றும் அலுவலகங்களில் ஏசி சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் மின் நுகர்வும் உயர்ந்துள்ளது.



கடந்த சில தினங்களாக தினசரி சராசரியாக 40 கோடி யூனிட்களாக இருந்த மின் பயன்பாடு, கடந்த 3-ஆம் தேதி 43.47 கோடி யூனிட்களாக உயர்ந்துள்ளது. இதுவே நடப்பு ஆண்டில் இதுவரை பதிவான அதிகபட்ச அளவாகும். கடந்த 2024 ஏப்ரல் 30-ஆம் தேதி 45.43 கோடி யூனிட்கள் பதிவானதே இதுவரையிலான உச்ச அளவாக இருந்து வருகிறது. நடப்பு ஆண்டில் வெயில் தீவிரம் மேலும் அதிகரித்தால், மின் நுகர்வு இன்னும் உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், ஏப்ரல் இறுதி வாரங்களில் மின் நுகர்வில் வரலாற்றிலேயே புதிய உச்சம் தொடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# வணிகச் செய்திகள்

## பிகானிர் புஜியா, அப்பளம் ஏற்றுமதி பாதிப்பு

பிகானிர்: அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக ராஜஸ்தானின் பிகானிரில் இருந்து ஏற்றுமதியாகும் புஜியா, அப்பளம் மற்றும் மசாலாப் பொருட்களின் வர்த்தகம் முடங்கியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் பிகானிர் கார வகை தின்பண்டங்கள் தொழிலுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது. இங்கிருந்து வளைகுடா நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு புஜியா, அப்பளம் ஆகிய தின்பண்டங்கள் மற்றும் மசாலாப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நிலையில், அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக சரக்குக் கப்பல் வருகை தாமதம், சரக்குக் கட்டண உயர்வு மற்றும் கன்டெய்னர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இத்தகைய பொருட்கள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதாக ஏற்றுமதியாளர்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்து பிகாராம் குழுமத்தைச் சேர்ந்த புஜியா வர்த்தகர் ஆஷிஷ் அகர்வால் கூறும்போது, "உற்பத்தி மற்றும் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்து வருவது தின்பண்ட தொழில் துறையைப் பாதிக்கிறது. போரினால் சரக்குக் கட்டணங்கள் கடுமையாக உயர்ந்துள்ளன. மூலப் பொருட்களின் விலையும் அதிகரித்து வருகிறது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் சமையல் எண்ணெய் விலை சுமார் 20 சதவீதம் உயர்ந்துள்ளது. இது நேரடியாக உற்பத்தியைப் பாதிக்கிறது. முன்பு 30 நாட்களில் சென்றடைய வேண்டிய சரக்குகள், இப்போது போர் காரணமாக பாதுகாப்பான நீண்ட தூரப் பாதைகளில் செல்வதால் 60 நாட்கள் வரை ஆகிறது" என்றார்.

# மோடியின் கட்டுப்பாட்டில் பினராயி விஜயன் உள்ளார்: ராகுல்காந்தி

**திருவனந்தபுரம், ஏப்.6:**

கேரளத்தில் சட்டசபை தேர்தல் வருகிற 9-ந்தேதி நடக்கிறது. இதனால் அங்கு தலைவர்களின் இறுதி கட்ட பிரசாரம் சூடுபிடித்துள்ளது. அந்த வகையில் கேரளத்தில் ஒரே நாளில் பிரதமர் மோடி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி போன்ற தலைவர்கள் பிரசாரம் செய்தனர். பிரதமர் மோடி திருவனந்தபுரத்தில் ரோடு ஷோவும், திருவல்லாவில் பிரசார பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டு பா.ஜனதா தலைமையிலான கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்தார்.



எர்ணாகுளம், இடுக்கி, ஆலப்புழை ஆகிய மாவட்டங்களில் ராகுல் காந்தி காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரையாற்றினார். காலை 10 மணிக்கு கொச்சி விமான நிலையம் வந்த அவர் நேராக ஆலப்புழை சென்று அங்கு காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது:-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி ஆட்சியில் கேரளத்தில் 75 சதவீத விவசாயிகள் கடனில் சிக்கி தவிக்கிறார்கள். போதைப் பொருட்களின் களஞ்சியமாக கேரளம் மாறிவிட்டது. கன்னியாஸ்திரிகள் தாக்கப்படுகிறார்கள், கிறிஸ்தவர்கள் உள்பட சிறுபான்மையின மக்கள் பல வகைகளில் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். எப்ஸ்டீன் ஆவணத்தில் பிரதமர் மோடியின் பெயர் இடம் பெற்றுள்ளது. அதனை மறைக்க டிரம்ப் சொல்வதைப் போல மோடி ஆடுகிறார். பெட்ரோல், எரிவாயு எங்கிருந்து வாங்க வேண்டும் என்பதை தீர்மானிக்க டிரம்ப் யார்? கேரளத்தின் முதல்-மந்திரியும், மோடியும் தங்களை ஏகாதிபதிகளாக நினைக்கிறார்கள். பதவி இருப்பதால் அகங்காரத்தில் இருவரும் உள்ளனர். கேரளத்தில் முதல்-மந்திரி பினராயி விஜயனை பிரதமர் மோடி தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார். வெளிப்படையாக கூற வேண்டுமானால், இடது ஜனநாயக முன்னணியில் இடதுசாரி என்று ஒன்றும் இல்லை. தேர்தலுக்கு பிறகு இடதுசாரியில் எதுவும் மிஞ்சி இருக்காது. கேரளத்தின் இடது முன்னணி அரசை பா.ஜனதா இயக்கி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## 28 மாவட்டங்களுடன் ஆந்திர மாநிலத்தின் புதிய வரைபடம் வெளியீடு

**அமராவதி, ஏப்.6:**



புதிய ஆந்திர மாநிலத்தின் ஒரே மற்றும் நிரந்தர தலைநகராக அமராவதியை அறிவிக்கும் மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதையடுத்து முதல் முறையாக தற்போது 28 மாவட்டங்கள் கொண்ட புதிய ஆந்திர மாநிலத்தின் வரை படத்தை தேசிய விபத்து தடுப்புத் துறை வெளியிட்டுள்ளது.

இதில் மாவட்டங்களின் எல்லைகள், வனப்பகுதிகள், சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் என அனைத்தும் துல்லியமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தொகுதிகள் வாரியாகவும் அந்த வரைப்படம் தெளிவாக உள்ளது. இந்த வரைபடத்தில் அமராவதியை தலைநகரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆந்திராவின் பல்நாடு, குண்டூர், கிருஷ்ணா மற்றும் என்.டி.ஆர். மாவட்டங்களில் உள்ள பகுதிகளை இணைத்து அமராவதி நகரம் என தெள்ளத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜெகன் ஆட்சியில் இருந்த 26 மாவட்டங்களுடன் தற்போது கூடுதலாக மார்க்காபுரம் மற்றும் போலாவரம் இணைந்து 28 மாவட்டங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.

புயல், வெள்ளம் போன்ற இயற்கை பேரிடரின் போது மாநில, மாவட்ட எல்லைகள் தெரிய வேண்டிய அவசியம் என்பதால், இந்த வரைபடத்தை முதல் முறையாக தேசிய விபத்து தடுப்புத் துறை தயாரித்ததாக கூறப்படுகிறது.

## கர்நாடக மாநிலத்தில் 2,809 விவசாயிகள் தற்கொலை

**பெங்களூரு, ஏப்.6:**

கர்நாடகாவில் பாகல்கோட்டை, தாவணகெரே தெற்கு ஆகிய இரு தொகுதிகளுக்கு வருகிற 9-ம் தேதி இடைத் தேர்தல் நடைபெறுகிறது. இதையொட்டி பாகல் கோட்டையில் பாஜக சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மத்திய ரயில்வே இணை அமைச்சர் சோமண்ணா பேசியதாவது:

முதல்வர் பதவியைகைப்பற்றுவதில் சித்தராமையாவுக்கும் டி.கே.சிவகுமாருக்கும் இடையே பெரிய போரே நடக்கிறது. இதனால் கர்நாடக மக்களுக்கு எந்த நன்மையும் அவர்களால் செய்ய முடியவில்லை. இரண்டாவது முறையாக முதல்வர் பதவி வகிக்கும் சித்தராமையா தனது அதிகாரத்தை தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்தி கொண்டிருக்கிறார். அவரது ஆட்சியில் கர்நாடகா பின்னோக்கி சென்று கொண்டிருக்கிறது. விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழைகள் அவரது ஆட்சியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடகாவில் கடந்த 3 ஆண்டுகளில் 2,809 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டிருப்பதாக ஆளும் காங்கிரஸ் அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. பயிர்களுக்கு உரிய விலை நிர்ணயிக்காமலும், விலை நிர்ணயித்தாலும் அதனை அமல்படுத்தாமல் இருப்பதாலும் இந்த மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. விவசாயிகளின் மரணங்களுக்கு சித்தராமையா உரிய பதிலை அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## எப்.சி.ஆர்.ஏ. சட்ட மசோதா; கிறிஸ்தவ மத தலைவர்கள் கவலைப்பட அவசியமில்லை- கிரண் ரிஜிஜு

**திருச்சூர், ஏப்.6:**

திருச்சூர் மாவட்டம் சேலக்கரா சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் கே. பாலகிருஷ்ணனுக்கு ஆதரவாக மத்திய நாடாளுமன்ற விவகாரத் துறை மந்திரி கிரண் ரிஜிஜு தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:-



நாட்டில் சட்டவிரோதமாக செயல்படும் அமைப்புகளை குறிவைத்து இந்த வெளிநாட்டு நிதி பங்களிப்பு முறைப்படுத்துதல் (எப்.சி.ஆர்.ஏ.) சட்ட திருத்த மசோதாவை கொண்டு வர மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதே நேரம் நேர்மையான முறையில் வெளிநாடுகளில் இருந்து பணம் கொண்டு வருவோர், இதுகுறித்து எந்த கவலையும் பட வேண்டியதில்லை.

இந்த சட்ட திருத்த மசோதா நிறைவேறும் முன்பு அனைத்து தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். பா.ஜனதா தலைமை, தேர்தலுக்கு பிறகு இதற்காக டெல்லியில் அனைத்து மத தலைவர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி முடிவு எடுக்கும். தேச பாதுகாப்புக்கு எதிராக செயல்படும் அமைப்புகள் மட்டுமே இதில் இலக்காக்கப்படும். கிறிஸ்தவ மத தலைவர்கள் இதுகுறித்து எங்களுடன் பேசி உள்ளனர். தவறு செய்பவர்களுக்கு மட்டுமே இந்த சட்ட திருத்த மசோதா பாதிப்பை ஏற்படுத்தும். அனைத்து மதத்தினரையும் நாங்கள் பாதுகாப்போம்" இவ்வாறு அவர் கூறினார்.

## கியாஸ் தட்டுப்பாட்டுக்கு மத்திய அரசின் அலட்சியமே காரணம்: டி.கே.சிவக்குமார்

**பெங்களூரு, ஏப்.6:**

பெங்களூரு சதாசிவ நகரில் உள்ள தனது வீட்டில் துணை முதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-



பெங்களூரு உள்பட மாநிலத்தில் ஆட்டோ டிரைவர்கள் எல்.பி.ஜி. கியாசுக்காக நீண்ட வரிசையில் காத்திருப்பதை பார்த்தேன். கியாஸ் தட்டுப்பாட்டுக்கு மத்திய அரசின் அலட்சியமே முக்கிய காரணமாகும். ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் என்பது பற்றி தெரிந்திருந்தும் மத்திய அரசு எந்த விதமான முன்எச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத்திய அரசின் வெளியுறவு கொள்கை, அவர்கள் முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காததால் தான் தற்போது ஆட்டோ டிரைவர்கள் கியாஸ் கிடைக்காமல் பரிதவித்து வருகின்றனர். நம்மால் தான் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்திருந்தும் மத்திய அரசு மவுனமாக இருந்து வருகிறது. கியாஸ் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டு மக்களிடம் மத்திய அரசு மன்னிப்பு கேட்க வேண்டும்.

பாகல்கோட்டை மற்றும் தாவணகெரே தெற்கு தொகுதிகளுக்கு நடக்கும் இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுவது உறுதி. காங்கிரஸ் வேட்பாளர்களின் வெற்றிக்காக கட்சி தொண்டர்கள் நேர்மையாகவும், கடுமையாகவும் உழைக்கிறார்கள். காங்கிரசின் 5 உத்தரவாத திட்டங்களையும் ஒவ்வொரு வீட்டுக்கும் கட்சி தொண்டர்கள் கொண்டு போய் சேர்த்துள்ளனர். விலைவாசி உயர்வால் சிக்கி தவித்த மக்களுக்கு உத்தரவாத திட்டங்கள் பயன் உள்ளதாக இருக்கிறது.

மந்திரி ஜமீர் அகமது கான் கேரளத்தில் பிரசாரத்தில் ஈடுபட் டுள்ளார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ராகுல் காந்தி பிரதமரானால் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து - மல்லிகார்ஜுன கார்கே

**புதுச்சேரி, ஏப்.6:**

புதுச்சேரிசட்டசபைதேர்தல் வரும் 9-ம் தேதி நடைபெற உள்ளது. 30 தொகுதிகளை கொண்ட புதுச்சேரியில் 294 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். ஓட்டுபதிவிற்கு இன்னும் 6 நாட்களே உள்ள நிலையில், வேட்பாளர்களை ஆதரித்து பாஜக, காங்கிரஸ் தேசிய கட்சி தலைவர்கள் புதுச்சேரிக்கு வந்து பிரசாரம் செய்து வருகின்றனர். அடுத்தடுத்து அரசியல் கட்சி தலைவர்கள் புதுச்சேரி வர உள்ளதால் இறுதி கட்ட பிரசாரம் களை கட்டியுள்ளது. இந்தநிலையில், காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து காங்கிரஸ் கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே



பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:-

பிரதமர் மோடி செல்லும் இடமெல்லாம் நான் உழலை ஒழிப்பேன் மற்றும் அதை சகித்து கொள்ள மாட்டேன் என்று சொல்லி வருகிறார். இந்த நாட்டில் உள்ள சொத்துக்களை எல்லாம் அது விமானநிலையம், துறைமுகம் அல்லது பொதுத்துறை நிறுவனமாக இருந்தாலும் சரி அனைத்தையும் மோடி அதானிக்கு தாரை வார்த்து கொடுக்கிறார்.

இந்த புதுச்சேரி மாநிலத்திலே தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் என்.அர்.பாஜக அரசு பொது சொத்துக்களை கொள்ளையடிக்கிறார்கள். கோவில் சொத்துக்களையும் கொள்ளையடிக்கினறனர்.

அது மட்டுமல்லாமல் இந்த ஆட்சியில் எல்லா துறைகளிலும் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. நமது மாநிலத்தின் கலசாரத்தை குட்டி சுவராக உருவாக்கி கொண்டு வருகின்றனர். டெல்லியில் இருந்து வந்திருக்கிறேன் இந்த அரசு கடந்த 5 ஆண்டுகளில் 400க்கு மேற்ப்பட்ட ரீசோ பார்களை திறந்துள்ளது. புதுச்சேரியில் மக்கள் கேட்பது குடிநீரை, பாஜக தருவது மதுவை. புதுச்சேரியில் மதுபான ஆலைகளை மட்டுமே பாஜக கூட்டணி அரசு தொடங்கி உள்ளது. ராகுல் காந்தி பிரதமரானால் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும். புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து தரப்படுமென 2019, 2024 தேர்தலில் வாக்குறுதியாக அளித்துள்ளோம். 2029-ல் ராகுல் காந்தி இந்நாட்டின் பிரதமராக வரும்போது புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கிடைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஏப்.1 முதல் டிஜிட்டல் பரிவர்த்தனையில் அமலுக்கு வந்த புதிய விதிகள் என்னென்ன?

**புதுடெல்லி, ஏப்.6:**

இந்தியாவில் டிஜிட்டல் பரிவர்த்தனை தற்போது பெருகிவிட்டது. சாதாரண பெட்டிக்கடை முதல் வணிக வளாகங்கள் வரை யுபிஐ பரிவர்த்தனை செய்யப்படுவதை பார்க்க முடிகிறது. முன்பெல்லாம் கடை வீதிக்கு போனால் பர்ஸ் நிறைய பணம் வைத்துகொண்டு செல்ல வேண்டியிருக்கும். ஆனால், தற்போது கையில் ஒரு பைசா ரொக்கமாக இல்லாமல் காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை எங்கு வேண்டுமானாலும் சென்றுவர முடியும் அளவிற்கு டிஜிட்டல் பரிவர்த்தனை அசுர வளர்ச்சி பெருகிவிட்டது. டிஜிட்டல் பரிவர்த்தனை பெருகிவிட்ட அதேவேளையில் , பல மோசடிகளும் அதைவைத்து நடைபெறுவதை பார்க்க முடிகிறது. இதையடுத்து மோசடிகளை கட்டுப்படுத்தும் விதமாக ரிசர்வ் வங்கி கடுமையான விதிகளை கொண்டு வந்துள்ளது. கடந்த 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்த விதிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு;

*யுபி.ஐ., கார்டு, மொபைல் வாலெட் போன்ற அனைத்து டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கும் இரண்டு நிலை உறுதிப்படுத்துதல் என்பது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒடிபி மட்டுமின்றி பின் நம்பர், கடவுச்சொல் அல்லது பயோமெட்ரிக் போன்ற கூடுதல் சரிபார்ப்பு தேவைப்படும். இதனால் பரிவர்த்தனை சற்று நேரம் எடுத்துக்கொண்டாலும், மோசடிகளை தடுக்க அதிக பாதுகாப்பு கிடைக்கும்.

*குறைந்த தொகை கொண்ட பரிவர்த்தனைகள் எளிதாக செய்ய முடியும். எனினும், பெரிய தொகை அல்லது புதிய சாதனங்களில் செய்யப்படும் பரிவர்த்தனைகளுக்கு கூடுதல் பாதுகாப்பு சோதனைகள் இருக்கும்.

*பாதுகாப்பு குறைபாடுகள் காரணமாக மோசடி நடந்தால், வங்கிகள் மற்றும் பணப்பரிவர்த்தனை நிறுவனங்கள் பயனர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டிய சூழல் உருவாகிறது. இதன் மூலம் புகார்களுக்கு விரைவான தீர்வு கிடைக்கும்.

*இனி ஒரு நாளில் 50 முறை மட்டுமே பேலன்ஸ் சரிபார்க்க முடியும். இ.எம்.ஐ., சந்தா போன்ற தானியங்கி பணப்பரிவர்த்தனைகள் இனி இரவு 9.30 மணி முதல் காலை 10 மணிக்கு முன்பாக நடந்து விடும்.

## திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.4.18 கோடி

**திருப்பதி, ஏப்.6:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 62 ஆயி ரத்து 642 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 23 ஆயிரத்து 887 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தானம் அறிவித்த ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.4 கோடியே 18 லட்சம் ஆகும்.

## கியாஸ் சிலிண்டர் குடோனில் பயங்கர வெடி விபத்து - 4 பேர் பலி

**சில்வசா, ஏப்.6:**

தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் டையூ மற்றும் டாமன் யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ள மாவட்டம் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி. இந்நிலையில், அம்மாவட்டத்தில் உள்ள சில்வசா நகரில் தொழிற்பேட்டை அமைந்துள்ளது. இங்கு கியாஸ் சிலிண்டர் குடோன் செயல்பட்டு வந்தது. இந்த குடோனில் சிலிண்டருக்கு நியூட்ரியன் கியாஸ் நிரப்பிம் பணிகளும் நடைபெற்று வந்தது. இந்த குடோனில் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த வெடி விபத்தில் குடோனில் பணியாற்றிய 4 பேர் உயிரிழந்தனர். மேலும், 2 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற தீயணைப்புத்துறையினர், போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஆந்திரா: ஆற்றில் மூழ்கி கல்லூரி மாணவர்கள் 3 பேர் பலி

**அமராவதி, ஏப்.6:**

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டம் ராஜமுந்திரி நகரின் ஜம்பெட்டா பகுதியில் உள்ள கல்லூரியில் என்ஜினியரிங் படித்து வந்த 4 மாணவர்கள் நேற்று சுற்றுலா சென்றுள்ளனர். மாணவர்கள் 4 பேரும் பிச்சுகலங்கா பகுதியில் கோதாவரி ஆற்றில் குளிக்க சென்றனர். ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தபோது 4 மாணவர்களும் ஆற்றில் அடித்து செல்லப்பட்டனர்.

இதில் ஒரு மாணவர் மட்டும் நீந்தி கரையை அடைந்தார். ஆனால், எஞ்சிய 3 மாணவர்களும் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர். இந்த சம்பவம் குறித்து அறிந்த போலீசார் விரைந்து சென்று ஆற்றில் மூழ்கிய 3 மாணவர்களின் உடல்களையும் தேடி வருகின்றனர்.

## உத்தரபிரதேசத்தில் நாட்டுச்சாராயம் குடித்து 3 பேர் பலி

**மீரட், ஏப்.6:**

உத்தரபிரதேச மாநிலம் மீரட்டில் இயங்கி வந்த அரசு அனுமதி பெற்ற நாட்டுச்சாராய கடையில் நேற்று முன்தினம் சாராயம் குடித்ததில் பாபுராம் (வயது 60), ஜிதேந்திர (35), அங்கித் (40) ஆகிய 3 பேருக்கு வாந்தி, வயிற்றுவலி ஏற்பட்டது. உடனடியாக அவர்கள் அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி ஜிதேந்திர, அங்கித் மற்றும் பாபுராம் ஆகியோர் நேற்று உயிரிழந்தனர். 3 பேரின் பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பிறகே காலாவதியான சாராயத்தை உட்கொண்டதால் அவர்கள் உயிரிழந்தனரா? அல்லது சாராயத்தில் விஷம் கலந்து இருந்ததா? என்பது தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர்.

# ஈரானிடமிருந்து 7 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா கச்சா எண்ணெய் கொள்முதல்

தெஹ்ரான், ஏப்.6:

மத்திய கிழக்கில் நீடித்து வரும் போர் பதற்றத்துக்கு மத்தியில், இந்திய சுத்திகரிப்பு ஆலைகள் 2019-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏழு ஆண்டுகளில் முதன்முறையாக ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்துள்ளது.

மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதற்றத்தால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல் போக்குவரத்து தடைபட்டுள்ள நிலையில், இந்திய சுத்திகரிப்பு ஆலைகள் ஈரானிடமிருந்து எண்ணெய் கொள்முதல் செய்துள்ளன. உலகின் மூன்றாவது பெரிய கச்சா எண்ணெய் இறக்குமதி நாடான இந்தியா, அமெரிக்கத் தடைகள் காரணமாக மே 2019 முதல் ஈரானிடமிருந்து எண்ணெய் வாங்குவதை நிறுத்தியது குறிப்பிடத்தக்கது.



இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "மத்திய கிழக்கு பதற்றத்துக்கு மத்தியில், இந்திய நிறுவனங்கள் ஈரான் உட்பட பல நாடுகளிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கியுள்ளன. மேலும், ஈரானிடம் கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு பணம் செலுத்துவதில் எந்தத் தடையும் இல்லை. இதனால் வரும் மாதங்களுக்கான இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவைகள் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பணம் செலுத்துதல் தொடர்பான தடைகள் காரணமாக இந்தியாவிற்கான ஈரானிய எண்ணெய் கப்பல், சீனாவிற்குத் திருப்பி விடப்பட்டதாக வந்த செய்திகளையும் மத்திய அரசு மறுத்துள்ளது.

2018-ல் அமெரிக்காவின் தடைகள் கடுமையாக்கப்படுவதற்கு முன்பு, ஈரான் லைட் மற்றும் ஈரான் ஹெவி ஆகிய இரண்டு வகை எண்ணெய்களையும் இறக்குமதி செய்து, ஈரானிய கச்சா எண்ணெயின் மிகப்பெரிய வாங்கும் நாடாக இந்தியா இருந்தது. அப்போது ஈரானிய கச்சா எண்ணெய் இந்தியாவின் மொத்த இறக்குமதியில் சுமார் 11.5 சதவீதமாக இருந்தது.

பின்னர், அமெரிக்கா கடும் கட்டுப்பாடுகளை விதித்த பிறகு, ஈரானிடமிருந்து இந்தியா எண்ணெய் இறக்குமதியை முற்றிலுமாக நிறுத்தியது.

தற்போதைய போர் காரணமாக ஈரானிடமிருந்து எண்ணெய் வாங்க அமெரிக்கா பல தளர்வுகளை அறிவித்துள்ளதால், மீண்டும் இந்தியா எண்ணெய் கொள்முதல் செய்ய தொடங்கியுள்ளது.

## சுழலும் சக்கரங்கள் துள்ளும் உள்ளங்கள்: ஜப்பானியர்களின் நாற்காலி பந்தயம்

டோக்கியோ, ஏப்.6:

2010-ஆம் ஆண்டு ஜப்பானின் கியோட்டோ மாகாணத்தில் உள்ள ஒரு சிறிய கடை வீதியில் முதன்முதலாக தொடங்கப்பட்டது. இந்த விளையாட்டை உள்ளூர் வணிகத்தை மேம்படுத்தவும், அன்றாட அலுவலக சோர்வில் இருந்து மக்களை உற்சாகப்படுத்தவும் இந்த முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் இப்போது இந்த பந்தயம் நாடு முழுவதும் நடத்தப்படுகிறது. ஜப்பானில் உள்ள அலுவலக ஊழியர்கள் வேலையில் பயன்படுத்தும் நாற்காலிகளை வைத்து நடத்தும் போட்டி இதுவாகும். இந்த போட்டியின் ஒரு அணியில் மூன்று நபர் இருப்பார்கள். நகர வீதிகளில் அமைக்கப்பட்ட வளைந்து நெளிந்த பாதைகளில் இந்த பந்தயம் நடக்கும். போட்டியில் பங்கேற்பவர்கள் தலைக்கவசம் அணிவது கட்டாயம்.

போட்டியாளர்கள் அலுவலக சக்கர நாற்காலிகளில் அமர்ந்து கொண்டு, கால்களால் பின்னோக்கி உந்தி தள்ளியபடி குறிப்பிட்ட இலக்கை அடைய வேண்டும். மேலும் அவர்கள் இரண்டு மணிநேரம் தொடர்ந்து நாற்காலியை தள்ளி செல்ல வேண்டும். இந்த போட்டி பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தாலும், இது கடுமையான போட்டியாகவே இருக்கும். ஜப்பானில் அலுவலக நாற்காலிகளை பயன்படுத்தி நடத்தப்படும் இந்த வினோதமான பந்தயம் இசு-1 கிராண்ட் பிரிக்ஸ் என்று அழைக்கப்படுகிறது. மேலும் இந்த போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ஜப்பானின் உயர்தர அரிசி மூட்டைகள் பரிசாக வழங்கப்படும்.

## ஈரான் உள்கட்டமைப்பு மீது அமெரிக்கா தாக்குதல்; சீனா கண்டனம்

பீஜிங், ஏப்.6:

ஈரானுக்கு எதிரான அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி தாக்குதல் நடத்தியது. இதில், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இந்நிலையில், சமீபத்தில் ஈரானின் உள்நாட்டு கட்டமைப்பின் மீது நடந்த தாக்குதல்களுக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. இதுதொடர்பாக, இந்தியாவுக்கான சீன தூதரகத்தின் செய்தி தொடர்பாளர் யூ ஜிங் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்து பேசினார். அப்போது, ஈரானை பேச்சுவார்த்தையில் ஈடுபட வைப்பதற்காக ஈரானின் உள்நாட்டுபாலம் ஒன்றை வான்வழி தாக்குதலில் அமெரிக்கா தாக்கி அழித்தது பற்றி அவர் கூறும்போது, ஈரானுக்கு எதிரான அமெரிக்க-இஸ்ரேல் ராணுவ நடவடிக்கையானது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு உட்பட்டது அல்ல. சர்வதேச சட்ட விதிமீறலும் ஆகும் என்றார். குடிமக்களின் கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கிறோம் என்றும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறோம் என்றும் அவர் கூறினார்.

## டிரம்ப் 48 மணிநேரக் கெடு! நிராகரித்த ஈரான்!

தெஹ்ரான், ஏப்.6

அமெரிக்கா - ஈரான் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ள டிரம்ப் விடுத்த 48 மணிநேர காலக்கெடுவை ஈரானின் மத்திய ராணுவ தலைமையகம் ஞாயிற்றுக்கிழமை (ஏப்.05) நிராகரித்துள்ளது. ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் இடையே கடந்த பிப். 28 ஆம் தேதி தொடங்கிய போர் ஒரு முடிவை எட்டாமல் இருபக்கமும் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதனால், உலகின் பல்வேறு நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா - ஈரான் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளவும், ஹோர்முஸ் நீரிணையைத் திறக்கவும் ஈரானுக்கு டிரம்ப் 10 நாள்கள் அவகாசம் கொடுத்திருந்தார். அந்த அவகாசம் முடிவடையப்போகும் நிலையில், ஹோர்முஸ் நீரிணையை 48 மணிநேரத்தில் திறக்காவிட்டால் ஈரான் மீது நரகம் கட்டவிழ்த்து விடப்படும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்திருந்தார்.

இதுகுறித்து, ஈரானின் மத்திய ராணுவ தலைமையகத்திலிருந்து வெளியிட்ட ஓர் அறிக்கையில், ஜெனரல் அலி அப்தொல்லாஹி அலியாபாதி, "டிரம்பின் அச்சுறுத்தல் என்பது ஒரு பயனற்ற, பதற்றமான, நிலையற்ற மற்றும் முட்டாள்தனமான செயல்" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஹோர்முஸ் நீரிணையை 48 மணிநேரத்தில் திறக்காவிட்டால் ஈரான் மீது நரகம் கட்டவிழ்த்து விடப்படும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் பதிவிட்டதற்கு பதில் கூறும் விதமாக, "உங்களுக்காக (டிரம்ப்) நரகத்தின் வாயில் திறக்கப்படும்" எனக் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில், குவைத் நாட்டின் பல்வேறு அமைச்சகங்கள் அடங்கிய அந்நாட்டு அரசு வளாகத்தின் மீது ஞாயிற்றுக்கிழமை (ஏப்.05) ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமீரகத்துக்கு ரூ.32,000 கோடி திருப்பிச் செலுத்தும் பாகிஸ்தான்

நியூயார்க், ஏப்.6:

ஐக்கிய அரபு அமீரகத்துடனான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், பாகிஸ்தான் இந்த மாதத்தில் ரூ.32 ஆயிரம் கோடி கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. இதனால் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) மற்றும் சீனா போன்ற நட்பு நாடுகளின் நிதியுதவியை பெரிதும் நம்பியுள்ளது. எனினும், இந்த ஆதரவு இனி உத்தரவாதமானதல்ல என்பதையும், கடுமையான நிபந்தனைகளுடன் வரும் என்பதையும் சமீபத்திய நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

இதுகுறித்து பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் சமீபத்தில் கூறும்போது, "மற்ற நாடுகளிடம் மீண்டும் மீண்டும் நிதியுதவி கோருவது நாட்டின் சுயமரியாதையை பாதிக்கிறது. ஏனெனில் கடன் கொடுப்பவர்கள் பதிலுக்கு எதையாவது எதிர்பார்க்கிறார்கள்" என்றார்.

இந்நிலையில், ஏற்றுமதி சரிவு, முதலீடுகள் குறைவு மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்துதல் அதிகரிப்பு போன்ற காரணங்களால் பாகிஸ்தான் கடும் பொருளாதார சவாலை எதிர்கொண்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

குறிப்பாக, ஈரானுக்கு ஆதரவு தெரிவிப்பதால், யுஏஇ உடன் பாகிஸ்தான் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பாகிஸ்தான் இந்த மாதத்தில் ரூ.32 ஆயிரம் கோடி கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இந்தக் கடனைப் பல தவணைகளாகத் திருப்பிச் செலுத்த முடிவு செய்துள்ளது.

கடந்த காலங்களில் வளைகுடா நாடுகள் பாகிஸ்தானுக்கு கடனைத் திருப்பிச் செலுத்த கூடுதல் அவகாசம் வழங்கி வந்தன.

ஆனால், இம்முறை யுஏஇ மிகக் குறுகிய காலத்துக்கு மட்டுமே அவகாசம் வழங்கியது. இது நீண்டகால கூட்டாளியான அமீரகத்தின் கடுமையான அணுகுமுறையைக் காட்டுகிறது. இவ்வளவு பெரிய தொகையைத் திருப்பிச் செலுத்துவது பாகிஸ்தானின் அந்நியச் செலாவணி கையிருப்பைக் கடுமையாகக் குறைக்கும். இது நாட்டின் வெளிநாட்டு நிதி நிர்வாகத்தைச் சிக்கலாக்கும். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கான அந்நிய செலாவணியில் பிரச்சினை ஏற்படும்.

## 'ஆண்கள் பிறநாடுகள் செல்ல இனி அனுமதி கட்டாயம்' - ஜெர்மனி அதிரடி உத்தரவு

பெர்லின், ஏப்.6:

ஜெர்மனியில் 17 முதல் 45 வயது வரையிலான ஆண்கள் கல்வி, வேலை அல்லது நீண்டகால பயணம் காரணமாக வெளிநாடு செல்ல வேண்டுமானால் இனி அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற புதிய விதி அமலுக்கு வந்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இந்த விதி 2026 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வந்ததாக கூறப்படுகிறது.

முன்னர் போர் போன்ற அவசர சூழ்நிலைகளில் மட்டுமே இத்தகைய கட்டுப்பாடுகள் இருந்த நிலையில், தற்போது இது நிரந்தர சட்ட அம்சமாக மாற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ராணுவ சேவை நவீனமயமாக்கல் சட்டத்தின் ஒரு பகுதியாக அமைதியாக இணைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

உக்ரைன் போர் முதல் மத்திய கிழக்கு பகுதிகளில் நிலவும் பதற்றம் வரை உலகளாவிய பாதுகாப்பு சூழல் காரணமாக, ஜெர்மனி தனது பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்தி வருவதாக கூறப்படுகிறது. தற்போது சுமார் 1,84,000 ராணுவ வீரர்கள் உள்ள நிலையில், அதை 2,55,000 ஆகவும், 2035க்குள் 2,70,000 ஆகவும் உயர்த்த ஜெர்மனி திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படிப்பட்ட ஒரு சூழலில், திடீரென, 17 வயது முதல் 45 வயது வரையுள்ள ஜேர்மன் ஆண்கள் வெளிநாடு செல்லவேண்டுமானால் அதற்காக அரசிடம் அனுமதி பெறவேண்டும் என்னும் விதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் இந்த தகவல் தற்போது கவனம் ஈர்த்து வருகிறது.

## போர் விமானத்திலிருந்து காணாமல் போன அமெரிக்க விமானியை ஈரானுக்குள் புகுந்து மீட்டோம்: ட்ரம்ப்

வாஷிங்டன், ஏப்.6:

அமெரிக்க போர் விமானம் ஈரானால் சுட்டு வீழ்த்தப்பட்டபோது காணாமல் போயிருந்த விமானி, பரபரப்பான துப்பாக்கிச் சண்டைக்குப்பிறகு பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார்.

ஈரான் வான் பரப்பில் பறந்த அமெரிக்க விமானப் படையின் எப் -35 மற்றும் எப்- 15 இ ரக போர் விமானங்களை நேற்று முன் தினம் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதில் ஒரு விமானி பத்திரமாக திரும்பிய நிலையில், மற்றொரு விமானி காணாமல் போனார்.

இந்த சூழலில் அவரை ஈரானும், அமெரிக்காவும் தீவிரமாக தேடியது. அந்த விமானியை உயிருடன் பிடிப்பவருக்கு 60,000 டாலர் வெகுமதி வழங்கப்படும் என ஈரான் அறிவித்திருந்தது.

இதனையடுத்து, ஈரானால் சுட்டு வீழ்த்தப்பட்ட போர் விமானத்தின் விமானி மீட்கப்பட்டு, தற்போது பாதுகாப்பாக ஈரானை விட்டு வெளியேறிவிட்டார் என்று அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "நாங்கள் அவரைக் கண்டுபிடித்துவிட்டோம். என் சக அமெரிக்கர்களே, கடந்த சில மணிநேரங்களில், அமெரிக்க ராணுவம், நமது அமெரிக்க அதிகாரி ஒருவருக்காக, அமெரிக்க வரலாற்றிலேயே மிகவும் துணிச்சலான தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஒன்றை வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது. அவர் மிகவும் மதிக்கப்படும் ஒரு கர்னலாகவும் இருக்கிறார்.

பென்டகன் அந்த அதிகாரியை 24 மணி நேரமும் கண்காணித்து வந்தது. அவரை மீட்பதற்காக விடாமுயற்சியுடன் திட்டமிட்டு வந்தது. அவரை மீட்க, உலகின் மிகவும் சக்திவாய்ந்த ஆயுதங்களைக் கொண்ட பல விமானங்களை நம் ராணுவம் அனுப்பியது.

அந்த விமானி, ஈரானின் அபாயகரமான மலைப்பகுதிகளில் பதுங்கி இருந்தார். தொடர்ந்து அவர் நமது எதிரிகளால் தேடப்பட்டுக் கொண்டிருந்தார்.

அமெரிக்கப் படைகளின் மீட்பு முயற்சியின்போது கடுமையான துப்பாக்கிச் சண்டைக்குப் பின் அவர் மீட்கப்பட்டார்.

ஈரானிய வான்வெளியில் நாம் மிகப்பெரிய வான் ஆதிக்கத்தை அடைந்துவிட்டோம் என்பதை இந்த நடவடிக்கை காட்டுகிறது. இந்த மீட்புப் பணியில் எந்த அமெரிக்கரும் கொல்லப்படவோ அல்லது காயமடையவோ இல்லை" என்று அவர் குறிப்பிட்டார். இந்த மீட்பு நடவடிக்கை குறித்து ஈரான் இன்னும் எந்தப் பதிலும் அளிக்கவில்லை.

## நிலவை நெருங்கியது நாசா அனுப்பிய ஆர்டமிஸ் விண்கலம்

வாஷிங்டன், ஏப்.6:

நிலவை ஆய்வு செய்யும் பணிக்காக நாசாவின் ஆர்டெமிஸ்-2 மிஷன் மூலம் நான்கு விண்வெளி வீரர்களுடன் ஓரியன் விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. 1969-ஆம் ஆண்டுக்குப் பிறகு மனிதர்களை நிலவுக்கு அனுப்புவதற்கான, ஆர்டெமிஸ் திட்டத்தை நாசா துவங்கியது. கடந்த 2-ஆம் தேதி ஆர்டெமிஸ்-2 விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் விண்வெளி வீரர்கள் நிலவில் தரையிறங்க மாட்டார்கள். அதற்குப் பதிலாக நிலவைச் சுற்றி வருவார்கள். இந்த பயணம் மனிதர்கள் இதுவரை சென்றதைவிட பூமியிலிருந்து கூடுதல் தூரம் செல்லும் முயற்சியாகும். மேலும் நான்கு விண்வெளி வீரர்களை ஏற்றிச் செல்லும் இந்த திட்டம், மனித விண்வெளி ஆய்வில் புதிய கட்டத்தைத் தொடங்குகிறது. நிலவின் மறுபக்கம் சென்று ஆய்வு செய்ய விண்வெளி வீரர்கள் திட்டமிட்டுள்ளனர்.

ஏவப்பட்ட 2 நாள்கள், 5 மணிநேரம் மற்றும் 24 நிமிடங்களில் இந்த முக்கிய மைல்கல்லை விண்கலம் எட்டியது. தற்போது இந்த விண்கலம் பூமியை விட நிலவுக்கு மிக அருகாமையில் நிலை கொண்டுள்ளதாக நாசா விண்வெளி ஆய்வு மையம் அறிவித்துள்ளது. விண்கலத்திலிருந்து பேசிய விண்வெளி வீராங்கனை கிறிஸ்டினா கோச், 'இப்போது விண்கலத்தின் ஜன்னல் வழியாக நிலவைப் பார்க்க முடிகிறது; அது ஒரு அற்புதமான காட்சி' என்று கூறினார்.

பயணத்தின் அடுத்த கட்டமாக, இன்று நள்ளிரவு அல்லது நாளை அதிகாலையில் விண்கலம் நிலவின் ஈர்ப்பு விசைப் பகுதிக்குள் நுழையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பிறகு, பூமியின் ஈர்ப்பைவிட நிலவின் ஈர்ப்பு விசை விண்கலத்தின் மீது அதிக ஆதிக்கம் செலுத்தும். இந்த மைல்கல்லை எட்டினால், மனித வரலாற்றிலேயே பூமியிலிருந்து மிக நீண்ட தூரம் பயணம் செய்த மனிதர்கள் என்ற சாதனையை இக்குழு படைக்கும். நிலவைச் சுற்றி வரத் திட்டமிட்டுள்ள ஆர்டெமிஸ் 2 குழு பயணத்தின் 6-ஆவது நாளில் நிலவுக்கு மிக அருகில் சென்று ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளனர். மொத்தம் 10 நாட்கள் இந்த விண்வெளி பயணம் திட்டமிடப்பட்டுள்ளது.

## வாஷிங்டன் மேயர் பதவிக்கு போட்டியிடும் தமிழ் பெண்

வாஷிங்டன், ஏப்.6:

அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன் மேயர் பதவிக்கான தேர்தல் வரும் நவம்பரில் நடைபெற உள்ளது. அதற்கு முன் வரும் ஜூன் மாதத்தில் கட்சி வேட்பாளரை தேர்வு செய்யும் தேர்தல் நடக்க உள்ளது. இந்த தேர்தலில் தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் பிறந்தவரான ரினி சம்பத் போட்டியிட இருக்கிறார். ரினி 7 வயதாக இருக்கும்போதே அவரது பெற்றோர் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்துவிட்டனர். அதன்பின் அங்கேயே வளர்ந்த அவர், முன்னாள் அதிபர் பராக் ஒபாமா நிர்வாகத்தில் பின்னர், அமெரிக்க அரசு நிறுவனங்களுக்கு சேவை செய்யும் முன்னணி மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனத்தில் மூத்த ஆலோசகராக ரினி சம்பத் பணியாற்றினார். தமிழகத்தில் பிறந்தவரான ரினி சம்பத் (31வயது), அமெரிக்காவின் வாஷிங்டனின் மேயர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடும் முதல் தெற்காசியர் என்ற சிறப்பை பெற்றுள்ளார்.

# இந்திய எல்லையை அல்ல, கொல்கத்தாவை தாக்குவோம்: பாகிஸ்தான் மிரட்டல்

சியால்கோட், ஏப்.6:

வருங்காலங்களில் இந்தியா உடனான மோதல் எல்லையோரத்தில் இருக்காது. எங்கள் தாக்குதலை கொல்கத்தாவில் மேற்கொள்வோம் என பாகிஸ்தான் நாட்டின் பாதுகாப்பு துறை அமைச்சர் கவாஜா ஆசிப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு பஹல்காமில் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்து பாகிஸ்தான் நாட்டில் இயங்கி வரும் தீவிரவாத அமைப்புகளின் புகலிடங்களை குறிவைத்து ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையை இந்தியா முன்னெடுத்தது. இதில் அந்த நாட்டில் உள்ள தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதாக இந்தியா தெரிவித்தது. அதற்கு பதிலடியாக இந்திய எல்லையோர மாநிலங்களின் மீது பாகிஸ்தான் தாக்குதல் முயற்சி மேற்கொண்டது. அதை இந்திய பாதுகாப்பு படை இடைமறித்து அழித்தது.



இந்தச் சூழலில் சனிக்கிழமை அன்று செய்தியாளர்களை சந்தித்த அந்நாட்டு பாதுகாப்பு துறை அமைச்சர் கவாஜா ஆசிப், "இந்தியா மீண்டும் பாகிஸ்தான் மீது ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முயன்றால், இறைவனின் அருளால் நமது பதில் தாக்குதலை கொல்கத்தாவுக்கே கொண்டு செல்வோம். இந்த முறை நமது தாக்குதல் 200 அல்லது 250 கிலோமீட்டர் தூரம் என்ற அளவில் எல்லையோரத்தில் இருக்காது. அவர்களது பிராந்தியத்தில் நுழைந்து, அவர்களது வீட்டிலேயே தாக்குவோம்" என தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவை அதன் கிழக்கு பகுதியில் தாக்குவோம் என பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த சூழலில் இந்தியாவின் முன்னாள் தலைநகரான கொல்கத்தாவை தாக்குவோம் என கவாஜா ஆசிப் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பாகிஸ்தானின் அணுசக்தி வளங்களை அமெரிக்கா தாக்கினால் இந்தியாவின் டெல்லி மற்றும் மும்பையை நாங்கள் தாக்குவோம் என கடந்த மாதம் இந்தியாவுக்கான பாகிஸ்தானின் முன்னாள் தூதரக அதிகாரி அப்துல் பாசித் தெரிவித்திருந்ததும் நினைவுகூரத்தக்கது.

# பழனிசாமி சொல்லியிருக்கிற பொய்களை வைத்து ஒரு புத்தகமே போடலாம்



# புதுச்சேரி, கேரளாவில் பிரசாரம் அமித்ஷா, ராகுல் காந்தி இன்று சென்னை வருகை



## தமிழகத்தில் உச்சம் தொட்ட மின்சார பயன்பாடு: ஒரே நாளில் 43.47 கோடி யூனிட் நுகர்வு

## கியாஸ் தட்டுப்பாட்டுக்கு மத்திய அரசின் அலட்சியமே காரணம்: டி.கே.சிவக்குமார்

## இந்திய எல்லையை அல்ல, கொல்கத்தாவை தாக்குவோம்: பாகிஸ்தான் மிரட்டல்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

06.04.2026 திங்கட்கிழமை

இலவச இ–பேப்பர்